
சுவடி : 40
ஏடு : 9
மார்ச் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# வரலாறு காணாத வறட்சியில் தமிழகம் புதிய தமிழக முதலமைச்சரின் பொறுப்பற்ற செயல்! அரியலூர் மாவட்ட ஆட்சியரின் அடாவடி!



இன்றைய தமிழ்நாடு வறட்சியில் சிக்கித் தத்தளிக்கிறது.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் கடலூர், திருச்சி, கரூர் மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகள் காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளாகும். இப்பகுதிகளில் 12 இலட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிட்டிருந்த னர், வேளாண் மக்கள். இதில் 9 இலட்சம் ஏக்கர் சம்பாப் பயிர் தொண்டைக்கதிரில் கருகிவிட்டது. கிணற்றுப் பாசன வசதி, நிலத்தடி நீர் வசதி உள்ள 3 இலக்கம் ஏக்கர், விளைச்ச லுக்கு வந்த நிலையில், 2017 சனவரியில் பெய்த மழையால் வீணாகிவிட்டது.

இப்பகுதிகளில் மட்டும் கருகிப்போன வயல்களைக் கண்ணுற்ற வேளாண் குடும்பத் தலைவர்கள் மயங்கியும் மாரடைப்பு கண்டும் நஞ்சு உண்டும் தூக்கில் தொங்கியும் 140 பேர் செத்து மடிந்தார்கள். ஏன்?

காவிரிக்கு கருநாடகத்திலிருந்து 179 கோடி கன அடி நீர் விடப்பட வேண்டும். ஆனால், உச்சநீதிமன்ற ஆணைக்குப் பிறகும், 66 கோடி கன அடிநீர் மட்டுமே கருநாடக அரசு அளித்தது.

வானம் பார்த்த நிலங்கள் அதிகமாக உள்ள நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை போன்ற 13 மாவட்டங் களில் புன்செய்ப் பயிர்கள் முக்கால் பங்கு சாவியாகிவிட்டன. எதனால்?

வடகிழக்குப் பருவ மழை சராசரியாக 42 செ.மீ. பெய்யும். ஆனால், கடந்த 2016 சூன் முதல் திசம்பர் வரை உள்ள 7 மாதங்களில் 16 செ.மீ. மட்டுமே பெய்தது.

இதனால் ஏற்பட்ட பேரிழப்புக்கு ஆளான வேளாண் குடும்பத் தலைவர்கள் 80 பேருக்கு மேல் மடிந்துவிட்டனர்.

ஆக, செத்தவர்கள் எண்ணிக்கை மட்டும் 220 பேர்.

வேளாண்மை செய்வோரில் 100க்கு 90 பேர் வங்கியிலோ, நிதி நிறுவனத்திடமோ, தனியாரிடமோ கடன் பெற்றுத்தான் பயிரிடுகிறார்கள். அப்படிக் கடன் பெறுவோரில் 100க்கு 66 பேர் தனியாரிடம் 100க்கு மாதம் ரூ.2, ரூ.3 வீதம் வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள். இந்தக் கடனைத் திருப்பித் தர வழியில்லையே என்று ஏங்கித்தான் வேளாண் மக்கள் சாகிறார்கள். சனவரி 2017 முதல் 2018 சனவரி வரை வீட்டு வாழ்க்கைக்கு ஏதும் மிஞ்சவில்லையே என்று இவர்கள் தத்தளிக்கப் போகிறார்கள்.

தமிழகச் சட்டமன்றத்தில் இன்று ஆளும் கட்சி - எதிர்க்கட்சியினர் உட்பட 234 பேர் உள்ளனர். இவர்களில் எத்தனை பேர் அவரவர் மாவட்டத்தில் நிலவும் வறட்சியின் கொடுமையை நேரில் பார்த்தார் கள்? எத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் போய்ப் பார்த்தார்கள்?

ஏன் போகவில்லை?

இப்போதைய அரியலூர் மாவட்ட ஆட்சியர், கடந்த 5 ஆண்டுகளாக, ஆளுங்கட்சியினர் ஆதரவில், அரியலூரிலேயே இருக்கிறார். அப்படி ஒரு ஆட்சியர் இருக்கிறார் என்பதற்கான அடையாளம் எதுவுமே அரியலூரில் இல்லை. எப்படி?

அரியலூர் நகரத்துக்கே குடிநீர் கொடுத்த "செட்டி ஏரி" வறண்டும் வாய்க்கால் வழிகள் தூர்ந்தும் கிடக்கிறது. அரியலூரில் உள்ள மற்றெல்லா ஏரிகளும் வறண்டு கிடக்கின்றன. அரியலூர் நகரச் சாலைகளில், தட்டுத்தடங்கலின்றி நடக்க முடியவில்லை.

இந்த மாவட்டத்தில் மட்டும் 12 சிமெண்டு ஆலைகள் உள்ளன. அவை 24 மணிநேரமும் புகையை வெளி விடுகின்றன. அப்புகை நச்சுப்புகை. அந்த நஞ்சை இயந்திரம் மூலம் வடிகட்டி வெளியிட வேண்டும் என்று கோரி, 10.1.2014இல் இதே மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விண்ணப்பம் கொடுத்தோம். இதுபற்றி எதுவுமே இன்றுவரை நடைபெறவில்லை.

கடந்த 10.2.2017 வெள்ளி பகல் 1 மணிக்கு அதே மாவட்ட ஆட்சியரிடம், மேலே கண்ட எல்லாக் குறை களைப் பற்றியும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியினரும், தமிழக விவசாய சங்கத்தினரும் 6 பேர் நேரில் முறையிட்டோம்.

இவர் ஏன் இப்படி இருக்கிறார் என்று தமிழக அரசு ஆய்வு செய்ய வேண்டும். தமிழக அரசினர் விரைந்து இந்த அடாவடி ஆட்சியர் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை மட்டுமா?

முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். என்கிற பன்னீர் செல்வம் வறட்சியால் இழப்புக்கு உள்ளான வேளாண் மக்களுக்கு மக்காச்சோளம் போன்ற புன்செய்ப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரமும், பாசனப் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.5,645; கரும்பு முதலான வற்றுக்கு ஏக்கருக்கு ரூ.7,247 - என, ஏற்கெனவே அறிவித்தார். அவை போதுமான இழப்பீடுகள் அல்ல எனப் பல அரசியல் கட்சிகளும், வேளாண் அமைப்பு களும் தமிழக அரசுக்கு முறையீடு செய்தன.

அவருக்குப் பிறகு, புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற எடப்பாடி பழநிச்சாமி அவர்கள், பதவி ஏற்றவுடன், வேளாண் மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடித்து, பழைய பன்னீர்செல்வம் அறிவித்ததை எந்த மறு ஆய்வும் செய்யாமல் அப்படியே அறிவித்துள்ளார். இது, பொறுப்பற்ற ஏமாற்றுத்தனமான செயல் ஆகும்.

வறட்சி இழப்பீடுகளுக்காக மொத்தம் ரூ.2,300 கோடி நிதி ஒதுக்கீடு என்பது கொஞ்சமும் போதாது.

இந்திய அரசிடம், தமிழகம் பேரிடர் இழப்பு, வறட்சி இழப்பு இவற்றுக்காக, 39 ஆயிரம் கோடி ரூபா தமிழக அரசு கோரியுள்ளதைச் சுட்டிக்காட்டித் தமிழக வேளாண் மக்களை வஞ்சிப்பது ஒரு ஏமாற்று ஆகும்.

**எனவே, உடனடியாக, இப்போது அறிவித்துள்ள இழப்பீடுகள் தொகை வீதத்தை - 5 மடங்காக மாற்றி, உயர்த்தித்தர முதல்வர் அவர்கள் ஆவன செய்வதே பொருத்தமாகும்; நல்ல தீர்வு ஆகும். நிற்க.**

இரு திராவிடக் கட்சிகளின் ஆட்சியிலும் ஊழல் பெருக்கெடுத்த அளவுக்கு - கல்வி, வேளாண்மை, நீராண்மை, அடிப்படை மருத்துவம் இவை ஆக்கம் பெறவில்லை.

தமிழகத்தில் உள்ள 41,000 ஏரிகளில், குறைந்தது 10,000 ஏரிகளையாவது வரும் 4 ஆண்டுக்குள் 10,000 கோடி ரூபா செலவில் தூர் வார வேண்டும்; முழுக் கொள்ளளவுக்கு வீராணம் ஏரி, வெலிங்டன் ஏரி (எ) எமனேரி, பொன்னேரி, மதுராந்தகம் ராமர் காத்த ஏரி, பூண்டி ஏரி இவற்றைத் தூர் வார வேண்டும்; வரத்து வாய்க்கால், போக்கு வாய்க்கால் இவற்றை விளங்க வேண்டும். ஏரி உள்வாய், வாய்க்கால் தனியார் ஆக்கிரமிப்புகளைத் தடாலடி நடவடிக்கை மூலம் அகற்ற வேண்டும்.

**இந்திய அரசிடம், தமிழக அரசு எந்தக் கோரிக் கையை முன்வைத்தாலும் - தமிழக முதல்வரும் எதிர்க் கட்சித் தலைவரும் இணைந்து, ஒரே நேரத்தில் தமிழ கத்தைச் சார்ந்த 57 நாடாளுமன்ற உறுப்பினர்களை யும் உடனழைத்துச் சென்று, நேரில் அழுத்தம் தரவேண்டும்.**

**அதன்பிறகும், இந்திய அரசு இணங்கிவரா விட்டால் தமிழக அரசினர், தமிழக நீர்நிலைகளைச் செப்பனிட மட்டும், இந்திய அரசு மூலம், உலக வங்கி யிடம் குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று இப்பணியை முதலில் நிறைவேற்ற வேண்டும்.**

**1.3.2017** **- வே. ஆனைமுத்து**

# நெடுவாசல் எரிவாயுத் திட்டம் கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவதாகும்

**- க. முகிலன்**

2017 சனவரி 16ஆம் நாள் முதல் சல்லிக்கட்டு நடத்துவதற்கான தடையை நீக்கக் கோரி, ''வாடிவாசல் திறக்காமல் வீடுவாசல் செல்லமாட்டோம்'' என்ற முழக்கத்துடன் சென்னை மெரினா கடற்கரையிலும் தமிழ் நாட்டின் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் பல்லாயிரக்கணக்கில் மாணவர்களும் இளைஞர்களும் திரண்டு இரவும் பகலுமாகத் தொடர் போராட்டம் நடத்தினர். தமிழ்நாட்டு அரசு இதற்கான சட்டம் இயற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பிறகே இப்போராட்டம் முடிவுக்கு வந்தது.

2017 பிப்பிரவரி 16 முதல் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகில் உள்ள நெடுவாசல் மக்கள் தங்கள் ஊரில் 'ஹைட்ரோ கார்பன்' எனும் எரிவாயுவை எடுக்கும் திட்டத்தை நடுவண் அரசு கைவிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடி வருகின்றனர். நெடுவாசலைச் சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றூர்களைச் சேர்ந்த உழவர்களும் பொதுமக்களும் நெடுவாசல் போராட்டத்தில் பங்கேற்று வருகின்றனர். சென்னை, கோவை, மதுரை, ஈரோடு, சேலம், நாமக்கல் முதலான இடங்களிலிருந்து மாணவர்களும் இளைஞர்களும் காவல்துறையின் தடுப்புகளையும் மீறி நெடுவாசல் போராட்டத்தில் கலந்து கொண்டு வருகின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் நெடுவாசலுக்குச் சென்று தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இந்திய அரசின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (Oil and Natural Gas Corporation - ONGC - ஓஎன்ஜிசி) தமிழகத்தில் காவிரி ஆற்றுப் படுகையான நெடுவாசல், குத்தாலம், கீழ்வேளூர், நன்னிலம் ஆகிய நான்கு இடங்களில் ஹைட்ரோ கார்பன் என்று கூறப்படும் மீத்தேன் எரிவாயு இருப்பதாகக் கண்டறிந்துள்ளது. இதுபோல் நாடு முழுவதிலும் 38 இடங்களில் 'ஹைட்ரோ கார்பன்' இருப்பதாக 2008ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. நெடுவாசலில் 10 சதுர கிலோ மீட்டர் பரப்பில் மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால் பகுதியில் 10.4 சதுர கிலோ மீட்டர் பரப்பில் 4.30 இலட்சம் டன் எண்ணெய் மற்றும் அதற்குச் சமமான எரிவாயு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் கிருஷ்ணா-கோதாவரி ஆற்றுப்படுகையில் பெரும்பரப்பில் எண்ணெய் எடுப்பதுபோல் அல்லாமல், சிறு அளவிலான பரப்பில் எண்ணெய் மற்றும் எரிவாயு எடுக்கும் கொள்கையை 2015இல் நடுவண் அரசு வகுத்தது. இது 'சிறுவயல் கொள்கை' எனப்படுகிறது. இச்சிறுவயல் கொள்கையின் அடிப்படையில் 15.2.2017 அன்று இந்தியாவில்




31 இடங்களில் எதிவாயு எடுப்பதற்கான ஒப்பந்த உரிமையை நடுவண் அரசு தனியார் நிறுவனங்களுக்கு அளிப்பதாக அறிவித்தது. 31 இடங்களில் நெடுவாசலும் ஒன்று. நெடுவாசலில் எரிவாயு எடுப்பதற்குக் கர்நாடகத்தைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் தரப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இருபது ஆண்டுளுக்கு முன்பு வடகாடு, நெடுவாசல், கோட்டைக்காடு, கருக்காகுறிச்சி, வாணக்கன்காடு ஆகிய இடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைத்து எரிபொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. **15.2.2017இல் நடுவண் அரசின் அறிவிப்பில் நெடுவாசல் மட்டுமே இடம்பெற்றுள்ளது.**

இருபது ஆண்டுகளுக்குமுன் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் புதுக்கோட்டை மாவட்டத்தில் எரிவாயு இருப்பதற்கான ஆய்வை மேற்கொண்டபோது, மண்ணெண்ணெய் இருக்கிறதா என்று ஆய்வு செய்வதாக மட்டும் கூறி சில உழவர்களிடம் குத்தகைக்கு நிலத்தைப் பெற்று ஆழ்துளைக் கிணறுகளை அமைத்தது.

தஞ்சை, நாகை மாவட்டங்களில் காவிரி ஆற்றுப் படுகையில், மீதேன் எரிவாயு திட்டத்திற்காகக் குழாய்கள் பதிக்கத் தொடங்கிய பிறகு, அதனால் ஏற்படக் கூடிய வேளாண் சீரழிவைக் கண்டு உழவர்கள் அத்திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். அப்போதைய முதலமைச்சர் செயலலிதாவும் இத்திட்டத்தை எதிர்த்தார். தமிழக அரசு அமைத்த வல்லுநர் குழுவும் மீதேன் திட்டம் கைவிடப்பட வேண்டும் என்று கூறியது. மக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக இறுதியில் நடுவண் அரசு மீத்தேன் திட்டத்தைக் கைவிட்டது. மீத்தேன் திட்டம் வேண்டாம் என்பதற்கு வல்லுநர் குழு கூறிய அதே காரணிகள் நெடுவாசல் எரிவாயுத் திட்டத்திற்கும் பொருந்தும்.

'மீத்தேன்' என்ற பெயரை 'ஹைட்ரோ கார்பன்' என்று மாற்றிக் கூறி நெடுவாசலில் எரிவாயு எடுக்கும் திட்டத்தைத் திணிக்கிறது நடுவண் அரசு. ஹைட்ரஜன் அணுவுடன் சேரும் கார்பன் அணுவின் எண்ணிக்கையைப் பொறுத்து, அதன் பெயர்கள் மாறுபடுகின்றன. ஒரு கார்பன் அணு இடம் பெற்றிருந்தால் மீத்தேன், இரண்டு இருந்தால் ஈத்தேன், மூன்று இருந்தால் புரோபேன், பத்து இருந்தால் டெக்கேன் என்று வரிசையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நெடுவாசல் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தின் கிழக்குப் பகுதி தஞ்சை மாவட்டத்தின் எல்லையில் அமைந்திருக்கிறது. அதனால் இப்பகுதி மக்கள் மீத்தேன் போராட்டம் பற்றியும் அதன் கேடுகள் குறித்தும் நன்கு அறிந்திருந்தனர். அதனால் நெடுவாசல் பகுதியில் எரிவாயு எடுக்க ஒரு தனியார் நிறுவனத்துக்கு 15.2.2017 அன்று ஒப்பந்தம் அளித்துள்ளது என்ற செய்தி வெளி




யானதும், அன்றிரவே நெடுவாசல் உழவர்களும் மக்களும் கூடிப் பேசினர். இத்திட்டத்தால் உழவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும், நிலமும் நீரும் நஞ்சாகும் என்று எண்ணினர். எனவே அடுத்த நாள் 16.2.2017 அன்று நூற்றுக்கும் மேற்பட்ட நெடுவாசல் உழவர்களும் பொதுமக்களும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளரைச் சந்தித்து, நெடுவாசலில் எரிவாயு எடுக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று விண்ணப்பம் அளித்தனர். மேலும் அன்றே நெடுவாசலில் திரண்டு போராட்டத்தைத் தொடங்கினர்.

நெடுவாசலைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் எரிவாயு எடுப்பதால் சுற்றுவட்டாரம் முழுவதும் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்று விளக்கிப் பல ஊர்களிலும் அறிக்கைகளை வழங்கினர்.

நெடுவாசலிலும் அதைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான ஊர்களிலும் முப்பது ஆண்டுகளுக்குமுன் நிலம் வானம் பார்த்த பூமியாகவே இருந்தது. அதன்பின் இப்பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து

நீர்வளம் பெருக்கி எல்லாவகையான பயிர்களையும் பயிரிடத்தக்கப் பசுஞ்சோலையாக மாற்றினர். நெடு வாசலில் எரிவாயு எடுக்க அனுமதித்தால், தாங்கள் அரும்பாடுபட்டு உருவாக்கிய வளமான நிலமும் நீரும் நல்ல சூழலும், காற்றும் நஞ்சாகிவிடும் என்பதால் இப்பகுதியைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து கல்லூரி மாணவ-மாணவியர், பணியில் இருக்கும் இளைஞர் கள், சமூக ஆர்வலர்கள், பொதுநல அமைப்பினர் என்று பலதரப்பினரும் நாள்தோறும் நெடுவாசலுக்கு வந்து போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர். இவ் வாறு பல்வேறு ஊர்களிலிருந்து போராட்டத்தில் ஈடு பட்டுவரும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நெடுவாசல் மக்கள் சார்பிலும் தன்னார்வத் தொண்டர்கள் சார் பிலும் நெடுவாசல் நாடியம்மன் கோயில் அருகில் உணவு சமைத்து அளிக்கப்படுகிறது. **யாருடைய தூண்டுதலோ, பின்னணியோ இல்லாமல் தன்னெ முச்சியாக இப்போராட்டம் நடக்கிறது.**

நடுவண் அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் நெடுவாசல் எரிவாயுத் திட்டத் தால் நிலம், நீர், மக்கள் வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு எத்தகைய பாதிப்பும் வராது என்று கூறுகிறது. ஆனால் மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை. நாட்டின் வளர்ச்சி என்ற பெயரால், பழங் குடியினர், வேளாண் குடியினர், சில கோடிப் பேர் தங்கள் வாழிடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்கிற விவரத்தை நெடுவாசல் மக்கள், படித்த இளைஞர்கள் மூலம் அறிந்துள்ளனர். வளர்ச்சி என்கிற வாதம் நடப்பில் நகர்ப்புற பணக்கார மேட்டுக்குடியி னரின் வளர்ச்சிக்காகவே என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பெட்ரோலிய-கச்சா எண்ணெய் நாட்டின் தேவை யில் 70 விழுக்காட்டிற்குமேல் இறக்குமதி செய்யப்படு வதால், பல ஆயிரம் கோடி உருவா அந்நியச் செல வாணியை இழக்க வேண்டியுள்ளது என்று ஆளும் வர்க்கத்தினர் கூறுகின்றனர். பெட்ரோல், டீசல் ஆகியவை ஆடம்பரமான மகிழுந்துகள், விலை உயர்ந்த இரு சக்கர வாகனங்களுக்கே பெருமளவில் செலவாகிறது. பேருந்து மூலமான பொதுப்போக்குவரத்தை அதிக மாக்குவதன் மூலம் மகிழுந்துகளின் தேவையைக் குறைக்க வேண்டும் என்று பொருளாதார வல்லு நர்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் பன்னாட்டு-உள்நாட்டுப் பெருமுதலாளியக் குழுமங்கள் மகிழுந்து, இருசக்கர வாகனங்கள் உற் பத்தி செய்வதற்காக - அந்நிய முதலீட்டை ஈர்ப்பது என்கிற பெயரால் இந்நிறுவனங்களுக்கு அரசு பல வகையிலும் உதவி வருகிறது. ஆண்டுதோறும் முத லாளிகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்குவதன் மூலம் நடுவண் அரசுக்கு அய்ந்து இலட்சம் கோடி உருபா இழப்பு ஏற்படுகிறது.

**இன்றைய அரசு, முதலாளிகளுக்கான அரசு, வளர்ச்சி என்ற பெயரில் உழவர்களையும் பழங்குடியி னரையும் வஞ்சிக்கும் அரசு. ஆகவே நெடுவாசலில் உழவர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் எரிவாயுத் திட்டத்தைக் கைவிடும் வரையில் போராடுவோம்.**

## இல்லாதார் இல்லை! என்றாக்குவோம்!

இந்துத்துவ நால்வருணம் நமைஆளுது
இழிநிலை சூத்திரனாய் நமைஆக்குது
சாதிகளால் மனிதத்தை கொல்லுது
சடங்குகளால் நமை வதைக்குது.

தாய்மொழிவழியில் தமிழ்ப்பிள்ளைகளுக்கு
கல்வியில்லை
தமிழ்நாட்டில் தமிழ்அலுவல் மொழியில்லை
பேய்போல் இந்தி நமை அழுத்துது
நாய்போல் ஆங்கிலம் கடித்துக்குதறுது.

நீர்வழிச் சாலைகளெல்லாம் கல்லூரியானது
ஏரிகுளங்கள் அழித்துஅரசு அலுவலகமானது
நீரின்றி வேளாண்மை பாழானது
புட்டியில் அடைத்தநீர் விலைபோகுது.

கனிமமும் மணலும் கொள்ளைபோகுது
மலையும் வனங்களும் சுரண்டப்படுது
அணுவணுவாய் அணுவுலையும் கொல்லப்பாக்குது
நியூட்ரினோ, கெயில்நமை அச்சுறுத்துது.

சனநாயகமற்ற பணநாயகம் காக்கப்படுது
போராடும் மக்களின் உரிமையை ஒடுக்குகிறது
முப்பதுகோடி பேருக்கு முழு உணவில்லை
ஆளுகின்ற எவருக்கும் இதைப்போக்க வக்கில்லை.

**மருத்துவமும் கல்வியும் பொதுமையாகணும்
வலுத்தவன் இளைத்தவன் நிலைமாறணும்
எல்லோருக்கும் எல்லாம் என்போம்
பொல்லாதார் இல்லை என்றாக்குவோம்.**

**- கு.ப.நா. மதனகவி**
செயலாளர், தமிழ்ச் சிந்தனையாளர் மன்றம்,
மா.பொ.பொ.க. வாணியம்பாடி

### நீராதாரங்களைச் செப்பனிட்டு - வேளாண் மக்களைக் காக்கக் கோரி

# வேளாண்மை நீராண்மைப் பாதுகாப்பு பரப்புரைப் பயணம்

## 24-31, சனவரி 2017 - பெரம்பலூர் மாவட்டம்
## 02-09, பிப்ரவரி 2017 - அரியலூர் மாவட்டம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, தமிழக விவசாயிகள் சங்கம் இணைந்து நடத்தும் வேளாண் மக்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம், 01-02-2017, புதன், பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம் முன்னர் காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர், பெரியாரியல் அறிஞர் திரு. வே. ஆனைமுத்து தலைமை தாங்கினார். தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் ஆர். இராசாசிதம்பரம் முன்னிலை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட முன்னோடி விவசாயிகள் சங்கத் தலைவர்கள் பலரும் பங்கேற்றனர்.

பி. மாணிக்கம், அ. மணி, மா. நாராயணசாமி, அக்ரி. ந.ஆறுமுகம், கு. வரதராசன் - உழவர் மன்ற மாவட்டத் தலைவர், வி. விசுவநாதன்-அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர், ஏ.கே. இராசேந்திரன்-பெரம்பலூர் மாவட்ட கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர், என். செல்லதுரை - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயற்குழுத் தலைவர், திருச்சி இரா.கலியபெருமாள், பி. இரமேஷ்-தலைவர், விவசாயத் தொழிலாளர் சங்கம், டி.கே. இராமலிங்கம்-கரும்பு உற்பத்தியாளர் சங்கம், ஐ. சையத்காசீம்-காவல் உதவி ஆய்வாளர் (பணி நிறைவு), எஸ்.கே. செல்லகருப்பு-சிறுகுடல், கோ. சீனிவாசன்-தலைவர், பாட்டாளி கரும்பு உற்பத்தியாளர் சங்கம், அரியலூர், ஆதிசிவம்-பொறியாளர், இராமர்-பெரம்பலூர், பூலாம்பாடி அருட்பா. வாளிகண்டபுரம் செ.இரவிச்சந்திரன், சரவணன், செ. பெருமாள், கலிபுல்லா, கலியசாமி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமிழக அரசுக்கான கோரிக்கைகளை முழக்கமிட்டனர். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட நீதிமன்றம் செல்வோர் அனைவருக்கும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் முன்பு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் முன்னோடி விவசாய சங்கத் தலைவர்கள் அனைவரும் பேசி, கோரிக்கைகளை முழக்கமிட்டனர். 92ஆம் அகவையிலும், 9 நாள்கள் அய்யா அவர்கள் பெரம்பலூர் மாவட்டம் முழுமையும் விவசாயப் பெருமக்களைச் சந்தித்துப் பரப்புரையாற்றி வந்தார். அய்யாவுடன் திருச்சி. இரா.கலியபெருமாள், மா. நாராயணசாமி ஆகிய இருவரும் உடன்சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்ட முடிவில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திரு.நந்தகுமார் அவர்களை நேரில் சந்தித்து, அய்யா திரு. வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையில் இராசாசிதம்பரம், மா. நாராயணசாமி, பி. மாணிக்கம், அக்ரி. ஆறுமுகம், மணி, கு. வரதராசன், ந.கருணாகரன், வாலி இரவிச்சந்திரன் ஆகியோர் சென்று கோரிக்கை விண்ணப்பத்தினை அளித்து விளக்கினர். அய்யா வே. ஆனைமுத்து அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் கனிவுடன் உடல்நலம் விசாரித்து விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதாக உறுதி கூறினார். அனைவரும் மாவட்ட ஆட்சியருக்கு நன்றிகூறி விடை பெற்று வந்தோம்.

செய்தி : **மா.நாராயணசாமி**

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

## MARXIST PEIRYARIST COMMUNIST PARTY

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபியுள்யூ.பி.,2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 600 053.

## அரியலூர் மாவட்ட விவசாயப் பெருமக்கள் சார்பில் தமிழக முதலமைச்சர் அவர்கட்குக் கோரிக்கை விண்ணப்பம்

வழி : **உயர்திரு. அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்** அரியலூர் மாவட்டம், அரியலூர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கட்கு,

அரியலூர் மாவட்ட விவசாயிகள் சால வணக்கம். அரியலூர் மாவட்டம் மழைநீரை எதிர்நோக்கி விளையும் மானவாரி நிலங்களை அதிகமாகக் கொண்டது. ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவமழை 42 செ.மீ. பெய்யும். ஆனால் 2015-2016, சூன்-டிசம்பர் மழைப்பருவத்தில், 16 செ.மீ. மட்டுமே மழை பெய்தது. அதனால் அரியலூர் மாவட்டத்தில் மானவாரி நிலப்பயிர்கள் எல்லாம் சாவியாகிவிட்டன. முந்திரிப் பயிரும் போதியப் பலன் கொடுக்கவில்லை. நீர்ப்பாசனப் பயிர்கள் எல்லாம் கருகிவிட்டன. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து, அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு மானவாரிப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25,000 ரூபாய் நட்ட ஈடாகவும், நீர்ப்பாசனப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபாய் நட்ட ஈடாகவும் விரைவில் அளித்திட வேண்டுகிறோம்.

மேலும், விவசாயிகள் தேசியமய வங்கிகளில் பெற்ற வேளாண் கடன்கள் முழுவதையும், கூட்டுறவு வங்கிக்கடன் முழுவதையும் பாகுபாடு இல்லாமல் இந்திய அரசு தள்ளுபடி செய்திட ஏற்ற பரிந்துரையைச் செய்து, அரியலூர் மாவட்ட விவசாயிகள் பெற்ற கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்திட வேண்டுகிறோம். நீர்ப்பாசனப் பயிர்கள் விளைந்திட, பாசன நீர் மிகவும் தேவை. எனவே அரியலூர் மாவட்டத்திலுள்ள ஏரிகள் அனைத்தையும், போர்க்கால வேகத்தில் இயந்திரங்களை வைத்துத் தூர்வாரிடவும், நீர்வரத்து வாய்க்கால்கள், போக்கு வாய்க்கால்கள் அனைத்தையும் தூர்வாரிடவும் பணிவுடன் வேண்டுகிறோம். மேலும் ஏரிகளிலும் குளங்களிலும் மண்டிக் கிடக்கிற சீமைக்கருவேல மரங்களை உடனடியாக வேரோடு வெட்டி எரித்திட ஆவன செய்யவும் கோருகிறோம்.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,000 விலையும், நெல் குவிண்டாலுக்கு ரூ.3000 விலையும் கொடுப்பதுடன், கரும்பு விவசாயிகளுக்கு அரசு கூட்டுறவு ஆலைகளும், தனியார் ஆலைகளும் கரும்பு கிரயத்தில் வைத்துள்ள நிலுவைத் தொகை முழுவதையும் உடனே தர ஆவன செய்ய வேண்டுகிறோம். தேசியமய வங்கிகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் கரும்பு விவசாயி பெறும் பயிர்க் கடன்களின் பேரில் (இன்ஷூரன்ஸ்) காப்பீடு செய்வதை கட்டாயப்படுத்தக் கூடாது. ஆற்று மணலை அரசோ, தனியாரோ அள்ளுவதை உடனே தடைசெய்து, ஆற்று ஊற்றுக் கண்ணைக் காப்பாற்றிடவும் வேண்டுகிறோம்.

அரியலூர் மாவட்டத்தில் ஏறக்குறைய 12 சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. அவை நாள்தோறும் 24 மணிநேரமும் வெளியிடும் புகை நச்சுத்தன்மை வாய்ந்தது. அந்தப் புகை கூரை வீடுகள், ஓட்டு வீடுகள், மெத்தை வீடுகள் மற்றும் காயப் போட்ட துணிமணிகள், மரம், செடி, கொடிகள், நீர்நிலைகள் மீது படிகின்றது. அதனால் பாதிக்கப்படும் மக்கள் இழுப்பு நோய், ஈளைநோய், மூச்சுத்திணறல் இவற்றுக்கு ஆளாகிறார்கள். ஆயுள் குறைகிறது. மேலும் ஆடு, மாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

சிமெண்ட் ஆலைகள் வெளிவிடும் புகையை இயந்திரம் மூலம் வடிகட்டி விடச் சொல்ல வேண்டி, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் 10.01.2014 அன்று நாங்கள் கோரிக்கை விடுத்தோம். இதுவரையில் அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. இனியாகிலும் விரைவில் இக்கோரிக்கைக்கு முதன்மை கொடுத்து சிமெண்ட் ஆலைகள் வடிகட்டித்தான் புகையை வெளியே விடவேண்டும் என ஆணை பிறப்பிக்க வேண்டுமென வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறோம்.

தங்கள் பணிவுள்ள,

**வே. ஆனைமுத்து**
பொதுச்செயலாளர், மா.பெ.பொ.க.

**இரா. கலியமூர்த்தி**
மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

**சா. சீனிவாசன்**
செந்துறை ஒன்றியச் செயலாளர், மா.பெ.பொ.க.

**வ. விசுவநாதன்**
அரியலூர் மாவட்டச் செயலாளர், தமிழக விவசாயிகள் சங்கம்

**இர. தமிழுவேள்**
மாவட்டப் பொருளாளர், தமிழக விவசாயிகள் சங்கம்

**அ. லெனின்**
மாவட்ட செயற்குழு உறுப்பினர், தமிழக விவசாயிகள் சங்கம்

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

## MARXIST PEIRYARIST COMMUNIST PARTY

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபியுள்யூ.பி.,2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 600 053.


## பெரம்பலூர் மாவட்ட விவசாயப் பெருமக்கள் சார்பில் தமிழக முதலமைச்சர் அவர்கட்குக் கோரிக்கை விண்ணப்பம்

வழி :
**உயர்திரு. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்**
பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கட்கு,

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் சால வணக்கம். பெரம்பலூர் மாவட்டம் மழைநீரை எதிர்நோக்கி விளையும் மானவாரி நிலங்களை அதிகமாகக் கொண்டது. ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவமழை 42 செ.மீ. பெய்யும். ஆனால் 2015-2016, சூன்-டிசம்பர் மழைப்பருவத்தில், 16 செ.மீ. மட்டுமே மழை பெய்தது. அதனால் பெரம்பலூர் மாவட்டத்தில் மானவாரி நிலப்பயிர்கள் எல்லாம் சாவியாகிவிட்டன. நீர்ப்பாசனப் பயிர்கள் எல்லாம் கருகிவிட்டன.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்கு மானவாரிப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25,000 ரூபாய் நட்ட ஈடாகவும், நீர்ப்பாசனப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபாய் நட்ட ஈடாகவும் விரைவில் அளித்திட வேண்டுகிறோம்.

மேலும், விவசாயிகள் தேசியமய வங்கிகளில் பெற்ற வேளாண் கடன்கள் முழுவதையும், கூட்டுறவு வங்கிக்கடன் முழுவதையும் பாகுபாடு இல்லாமல் இந்திய அரசு தள்ளுபடி செய்திட ஏற்ற பரிந்துரையைச் செய்து, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பெற்ற கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்திட வேண்டுகிறோம்.

நீர்ப்பாசனப் பயிர்கள் விளைந்திட, பாசன நீர் மிகவும் தேவை. எனவே பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஏரிகள் அனைத்தையும், போர்க்கால வேகத்தில் இயந்திரங்களை வைத்துத் தூர்வாரிடவும், நீர்வரத்து வாய்க்கால்கள், போக்கு வாய்க்கால்கள் அனைத்தையும் தூர்வாரிடவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

மேலும் ஏரிகளிலும் குளங்களிலும் மண்டிக் கிடக்கிற சீமைக்கருவேல மரங்களை உடனடியாக வேரோடு வெட்டி எரித்திட ஆவன செய்யவும் கோருகிறோம்.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,000 விலையும், நெல் குவிண்டாலுக்கு ரூ.3000 விலையும் கொடுப்பதுடன், கரும்பு விவசாயிகளுக்கு அரசு கூட்டுறவு ஆலைகளும், தனியார் ஆலைகளும் கரும்பு கிரயத்தில் வைத்துள்ள நிலுவைத் தொகை முழுவதையும் உடனே தர ஆவன செய்ய வேண்டுகிறோம்.

ஆற்று மணலை அரசோ, தனியாரோ அள்ளுவதை உடனே தடைசெய்து, ஆற்று ஊற்றுக் கண்களைக் காப்பாற்றிடவும் வேண்டுகிறோம்.

தங்கள் பணிவுள்ள,

**வே. ஆனைமுத்து**
பொதுச்செயலாளர்
மா.பெ.பொ.க.

**ஆர். ராஜாசிதம்பரம்**
மாநிலத் துணைச் செயலாளர்
தமிழக விவசாயிகள் சங்கம்

**மா. நாராயணசாமி**
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்
மா.பெ.பொ.க.

**பி. மாணிக்கம்**
பெரம்பலூர் மாவட்டத் தலைவர்
தமிழக விவசாயிகள் சங்கம்

**அக்ரி. ந. ஆறுமுகம்**
வங்கி மேலாளர் (ப/நி) சமூக ஆர்வலர்,
பெரம்பலூர்.

**அ. மணி**
பெரம்பலூர் மாவட்டப் பொருளாளர்
தமிழக விவசாயிகள் சங்கம்

**கு. வரதராஜன்**
உழவர் மன்ற மாவட்டத் தலைவர், பூலாம்பாடி

# 01.02.2017 புதன் தமிழக அரசுக்குக் கோரிக்கைகள்

இந்திய அரசே! இந்திய அரசே!
தள்ளுபடி செய்! தள்ளுபடி செய்!
விவசாயிகள் பட்ட வங்கிக் கடன்களை
தள்ளுபடி செய்! தள்ளுபடி செய்!

தமிழக அரசே! தமிழக அரசே!
தள்ளுபடி செய்! தள்ளுபடி செய்!
கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களை
தள்ளுபடி செய்! தள்ளுபடி செய்!

தமிழக அரசே! தமிழக அரசே!
தூர் வாரிடு! தூர் வாரிடு!
ஏரி, குளங்களைத் தூர் வாரிடு!
தமிழக அரசே! தமிழக அரசே!
வாய்க்கால்களைத் தூர் வாரிடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
தடுத்திடு! தடுத்திடு!
ஆற்றுமணலை அள்ளுவதை
தடுத்திடு! தடுத்திடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
அழித்திடு! அழித்திடு!
நீரை உறிஞ்சும் சீமைக்கருவையை
அடியோடு அழித்திடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
ஊக்க விலைகொடு! ஊக்க விலைகொடு!
கரும்பு விவசாயிகளுக்கு ஊக்க விலைகொடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
உரிய விலை கொடு! உரிய விலை கொடு!
வேளாண் விளை பொருள்களுக்கு
உரிய விலை கொடு! உரிய விலை கொடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
உடனே அளித்திடு! உடனே அளித்திடு!
கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை
உடனே அளித்திடு! முழுவதுமாக அளித்திடு!

தமிழக அரசே! தமிழக அரசே!
பழுது பார்த்திடு! பழுது பார்த்திடு!
எரையூர் சர்க்கரை ஆலையை
உடனே பழுது பார்த்திடு! பழுது பார்த்திடு!

அமைப்புகள் :
**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**
**தமிழக விவசாயிகள் சங்கம்.**
பெரம்பலூர் மாவட்டம்.

# பாவலரேறு தமிழ்க்களம் சீரமைப்புக்குப்பின் செயற்பாட்டுத் தொடக்க விழா



பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இரு நூல்கள் வெளியீட்டு விழா 12.2.2017 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு பாவலரேறு தமிழ்க்களம் தாமரையம்மையார் அரங்கத்தில் நடைபெற்றது.

வழக்குரைஞர் இ. அங்கயற்கண்ணி தமிழ் வாழ்த்துப் பாடினார். இறை. பொற்கொடி வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வறிஞர் அருளியார் தலைமை தாங்கினார். பொழிலன் முன்னிலை வகித்தார். கி. குணத்தொகையன் தொகுப்புரை வழங்கினார். மா. பூங்குன்றன் தொடக்கவுரை ஆற்றினார். இந்தித் திணிப்பு இந்தியாவைச் சிதைக்கும், கழுதை அழுத கதை என்ற இரு நூல்களை த.பெ. தேன்மொழி அருளி-மா. பிறைநுதல் அறிமுகம் செய்தனர்.

வே.ஆனைமுத்து இரு நூல்களையும் வெளியிட்டார். திருவாளர்கள் கழாரம்பன், கோ. இளவழகன், புலவர் இரத்தினவேலன், முத்துக்குமாரசாமி, க.வெ. நெடுஞ்சேரலாதன், இரா. இராவணன், இராமர், கர்ணன், பாவேந்தன், தமிழ்முகிலன், வீரக்குமார், அரங்க. செல்லத்துரை, தெய்வமணி, இ. இசைமொழி, அரசி, அமிழ்தவல்லி ஆகியோர் நூல்களின் படிகளைப் பெற்றுக்கொண்டனர். திருவாளர்கள் தமிழ்ச்செம்மல், கருணாகரன், வெற்றி. இலக்குமிகாந்தன், மூர்த்தி ஆகியோரின் பணிச் சிறப்பு செய்யப்பட்டனர். திருவாளர்கள் தொல். திருமாவளவன், மான், ஓவியர் வீரசந்தானம், தி. வேல்முருகன், புலவர் கி.த. பச்சையப்பன், மு. களஞ்சியம், இயக்குநர் வ. கௌதமன் ஆகியோர் வாழ்த்துரையும், பாராட்டுரையும் வழங்கினர். அழ. இளமுருகன் நன்றியுரை ஆற்றினார்.

# உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞர் தில்லித் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர் எம்.என். கிருஷ்ணமணி மறைந்தார்!



உச்சநீதிமன்ற மூத்த வழக்குரைஞரும், தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியவரும், அனைத்து நாடுகள் மனித உரிமைக் காப்பு அமைப் பின் துடிப்பான செயற்பாட்டாளருமான எம்.என். கிருஷ்ணமணி அவர்கள், தம் 69ஆம் அகவையில், தில்லியில் தம் இல்லத்தில் 15.2.2017 புதன் அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க மனம் வருந்துகிறோம்.

அப்பெருமகனாரின் பணிகளையும் பெருமைகளையும் நினைவுகூரும் வகையில், இரங்கல் அஞ்சலிக் கூட்டம், தில்லித் தமிழ்ச் சங்கத்தில் திருவள்ளுவர் அரங்கில் 20.2.2017 திங்கள் மாலை 6.40 மணிக்கு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் புலவர் விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து தம் இரங்கல் உரையில், இளமைப் பருவத்தில் கிருஷ்ணமணியும், ப. சிதம்பரமும் தந்தை பெரியார் அவர்களை, ''கணையாழி'' ஏட்டுக்காகப் பேட்டி கண்டு கட்டுரை எழுதியதாகத் தன்னிடம் அவர் 2012இல் கூறியதையும், 2013இல் நார்த் அவென்யூவில் எம்.பி.க்கள் விடுதி மாடியில் ஈழப்போர்க் குற்றங்கள் பற்றிய கூட்டத்தில், சிங்களவர் செய்த ஈழத்தமிழரின் மனித உரிமைப் பறிப்பை கண்டனம் செய்து அவர் உரையாற்றியதையும், 2015இல் ஏப்ரலில் ஈழப்போர்க் குற்றங்கள் பற்றி, உலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க யார் யாருக்குத் தகுதி உண்டு என்பதை அவரிடம் எழுத்துமூலம் கேட்டறியத்தான் முயன்றதையும் நினைவுகூர்ந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

உயர்நீதிபதி கற்பக விநாயகம், இரா. முகுந்தன், மூத்த வழக்குரைஞர்கள் நந்தகுமார், செய பாஸ்கரன், ரவி, சிவகுருபாலன், சேகர், இணைச் செயலாளர் ரமாமணி சுந்தர், கர்நாடக சபா மகாதேவன், முன்னாள் துணைத் தலைவர்கள் நாகஜோதி, இராகவ நாயுடு, நடனக் கல்லூரி சரோஜா வைத்தியநாதன் மற்றும் பலர் இரங்கல் உரையாற்றினர்.

இரவு 9 மணிக்கு அவையோர் கூட்டாக அஞ்சலி செலுத்திய பின்னர், இரங்கல் கூட்டம் முடிவுற்றது.

வாழ்க எம்.என். கிருஷ்ணமணி புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# இராமனையும் கொளுத்தலாமா?

டில்லியில் நேரு முன்னிலையில் நடந்த ராமலீலா விழாவில் இராவணன், இரண்யன், இந்திரஜித் போன்ற உருவங்களுக்குக் கொள்ளி வைத்து மகிழ்ந்தார்களாம், வடநாட்டார். அதைப் போலவே நாமும் ஏன் இராமன்-கிருஷ்ணன் போன்ற கொலைகார கோட்சேக்களின் உருவங்களுக்குக் கொள்ளி வைத்துக் கொண்டாடக் கூடாது? என்று மதுரை திராவிடர் கழகச் செயலாளர் எனக்கு எழுதிக் கேட்டிருக்கிறார்.

வடநாட்டார் அந்த நாட்டு மன்னனாகிய இராமனின் எதிரியை (உருவத்தை)க் கொளுத்தும்போது தென்னாட்டராகிய நாம் இந்த நாட்டு மன்னனான இராவணனின் எதிரியான இராமனைக் கொளுத்துவதில் தப்பில்லை என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அப்படிச் செய்யு முன்பு பொதுக்கூட்டத்தில் அதன் அவசியத்தை விளக்கிக் கூற வேண்டும். பிறகு கூட்டத்தாரின் பிரியத்தையும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பெரியாரை வகுப்புத் துவேஷ குற்றத்திற்காக திருச்சியில் சிறைப்படுத்தியவுடனே ஹிந்து சுதேசமித்திரன் - போன்ற ஆரியப் பத்திரிகைகளைப் பொது மேடையில் கொளுத்தினார்களே, தெரியுமா?

சென்னையில், கும்பகோணத்தில், பட்டுக்கோட்டையில்! இன்னும் பல ஊர்களில்? அப்போது கூட்டத்தாரின் விருப்பத்தைக் கேட்டுக் கொண்டு, அவர்கள் ஒரு மனதாக, கொளுத்தலாம் என்று கூறிக் கைதூக்கிய பிறகுதான் கொளுத்தினார்கள்!

ஆட்சியாளரின் அதிகாரிகள் பார்த்துக் கொண்டுதானே இருந்தார்கள்? கொளுத்தியவர்களை என்ன செய்ய முடிந்தது? இது மட்டுமா? பட்டப்பகலில், அதுவும் மாலை நேரத்தில், மவுண்ட் ரோடில் ஆனந்த விகடன் நிலையத்துக்கு முன்பு அந்தப் பத்திரிகை நடுத்தெருவில் போட்டுக் கொளுத்தப் பட்டதே! என்ன செய்து விட்டார்கள்?

தென்னாட்டில் இராமனுக்கு மரியாதை கிடையாது. இங்கு இராவணன் உருவம் கொளுத்தப்பட்டால் என்னவாகும் என்பதைப் பற்றி நம்மைவிட நன்றாக அக்கிரகாரத்துக்குத் தெரியும். இங்கு ராமாயண காலட்சேபம் நடக்கின்ற இடம், ஆரியர் சேரிகளில் அல்லது அவர்களது அடிமைகளில் வீடுகளில்தான்! இராமாயணப் பிரசாரஞ் செய்கிறவர்களும் ஆரியர் அல்லது அவரது கால்வருடிகள்தானே?

மானமுள்ள தமிழன் மறைமலையடிகளின் ஆராய்ச்சி நூல்களைப் படித்துணர்ந்த தமிழன், பூர்ணலிங்கம் பிள்ளையின் இராவணப் பெரியார் என்ற நூலைப் படித்த தமிழன், வரலாறு உணர்ந்த தமிழன் மூளைக்கு வேலை கொடுக்கின்ற தமிழன், ஆரியத்துக்கு அடிமைப்படாத தமிழன் - எவனாவது இராமனைப் போற்றுகின்றானா?

அயோக்கிய இராமன் என்ற பெயரால் யாராவது அயோத்தி ராமனைப் பற்றி ஓர் ஆராய்ச்சி நூல் எழுதினால், இன்று ஆயிரக்கணக்கில் விற்கும்! அவ்வளவு தூரத்துக்கு இராமன் சங்கதி தமிழகத்தில் நாறிப் போயிருக்கிறது!

**- குத்தூசி குருசாமி**

30.10.1951 விடுதலை

# தந்தை பெரியாரின் தமிழ்த் தேசியம்

இரணியன்

திராவிடர் இயக்கக் கொள்கைப் பிரகடன நூற்றாண்டு நிறைவை ஒரு மாபெரும் மாநாடாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது தந்தை பெரியார் திராவிடர் கழகம்!

இந்த நேரத்தில் தந்தை பெரியாரின் தமிழ்த் தேசியப் பார்வை எத்தகையது என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று உலகம் முழுவதும் மொழிவழித் தேசிய உணர்வு கூர்மைப்பட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது!

ஒரு தேசிய இனத்தை வேரறுக்க அதன் எதிரி முதலில் அழிக்க முனைவது அந்த இனத்தின் மொழியைத்தான். இதை வரலாறு தெளிவாக்கிக் கொண்டிருக்கிறது.

எனவே தான், ''ஒரு சமூகத்தின் தாய்மொழியே, அந்தச் சமூகத்தின் தற்காப்புப் படை'' என்று ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் கூறுகிறார்கள். எதிரி நம்மிடமிருந்து பிடுங்க முயலும் நம் அடித்தளம் நமது மொழியே என்றும் அவர்கள் எடுத்தியம்புகிறார்கள்.

மொழியை இழக்கும்போது நாம் நிலத்தை இழக்கிறோம்! நிலத்தை இழக்கும் போது இயற்கை வளத்தை இழக்கிறோம்! இடையறாத நம் பண்பாட்டு வேரை இழக்கிறோம்! நம் மண்ணின் மீதான நமது வருங்கால வாழ்வுரிமையை இழக்கிறோம்!

எனவே, மொழி என்பது வெறும் மொழி மட்டுமே இல்லை என்பது தெளிவாகிறது.

மத வழிபாட்டு முறைகள் வேறுபடலாம்; வாழும் நிலங்கள் வேறுபடலாம். இந்த வேறுபாடுகளைத் தாண்டி, ஒரு மாபெரும் மனித சமூகத்தை ஒன்றிணைத்து வைப்பது மொழிதான், மனித சமூகங்களின் அடையாளம் பெரும்பாலும் மொழிவழிப்பட்டதாகத் தான் இருந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் ஆங்கிலராட்சி முடிவுக்குவரத் தொடங்கிய போதே, இந்தியக் கண்டத்துத் தேசிய இனங்களிடையே மொழிவழித் தேசிய உணர்வு முகிழ்க்கவும் செழிக்கவும் தொடங்கியது. மராத்தியர், பஞ்சாபியர், வங்காளியர் போன்ற இனத்தவர்கள் மொழிவழிப் பார்வையில் முனைந்து நின்றவர்கள்.

தமிழ்நாடு பழங்காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்து கிடந்தாலும், மக்கள் இதனை ஒரு நிலமாகத்தான் கருதிவந்தனர். ''கடந்தடு தானை மூவரும் கூடி'' ஒரே தமிழ்நிலத்தைக் காப்பதாக மக்கள் எண்ணினர்.

''சேரன் ஒருவன்... சோழன் ஒருவன்... பாரமா முடியன் பாண்டியன் ஒருவன்... மூவருங் காத்திட...'' என்று மங்கல வாழ்த்துப் பாடும் மரபு இன்றும் நாட்டுப்புறத் திருமணங்களில் காணமுடிகிறது.



எனவே, தமிழ்த்தேசியச் சிந்தனை என்பது தமிழ் மக்களின் இயல்பான உள்ளத்து ஊற்றாகவே இருந்து வந்துள்ளது.

ஆங்கிலேயரால், அவர்களின் ஆளுகை வசதிக்காகக் கட்டப்பட்டது, 'இந்தியா' என்கின்ற கட்டுமானம். இந்த இந்தியா என்பது ஒரு தேசியம் இல்லை. இது 22க்கும் மேலும் அதற்கும் மேற்பட்ட தேசியங்களின் தொகுப்பு. ஒவ்வொரு தேசியத்திற்குமான தனித்தன்மைக்கும், அதன் தன்னாட்சி உரிமைக்கும் எந்த அளவு மதிப்பு அளிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்குத்தான் இந்தியக் கூட்டமைப்பின் உறுதிப்பாடு நீடிக்க முடியும்.

அந்த நாளில் ஐம்பத்தாறு தேசங்களாக அறியப்பட்டிருந்த இந்த இந்தியத் துணைக் கண்டத்தை - இன்று இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட தேசிய இனங்களாக அறியப்படுகின்ற இந்த இந்தியத் துணைக் கண்டத்தை, நாசப்படுத்துவதற்காக இங்கே ஊடுருவிய ஒரு நாசவினை 'வைரஸ்'தான் ஆரிய சனாதன அதர்மம்.

இது மனித சமத்துவத்தை அழித்தது; மனிதரில் ஒரு பகுதியினரை அடிமைகளாக்கியது. உடைமை மறுக்கப்பட்டவராக்கியது; ஊருக்குள் வாழும் உரிமை இல்லாதவராக ஒதுக்கியது; சிலரைக் காணத் தகாதவராக்கியது; சிலரைத் தீண்டத்தகாதவராக்கியது. அவர்

களை ஊர்களுக்கு வெளியே குடிசைகளில் மட்டுமே வாழச் சொல்லியது; நல்ல உடை உடுக்கவும், நல்ல உணவு உண்ணவும் தடைவிதித்தது; குழந்தைகளுக்கு அவர்கள் நல்ல பெயர்களைச் சூட்டிக்கொள்ளவும் அனுமதி மறுத்தது; அவர்களிடமிருந்து உழைப்பைப் பெற்று அவர்களுக்கு ஊதியம்தர மறுத்தது; ஏழைகளை வன்முறையால் கட்டிவைத்திருந்தது; நால்வருணத்தையும், அதன் புறனடையாகப் பஞ்சம வருணத்தையும், இவற்றுக்குள் பல உள் சாதிகளையும் உருவாக்கி, பூசல்களை ஏற்படுத்தி மனித குலத்தைச் சிதைத்துக் கூறுபோட்டது; ஒரு சிறிய வகுப்பாரிடம் அதிகாரத்தைக் கொடுத்தது. அனைத்துக்கும் மேலான தெய்வ மேலாண்மையாக ஆரிய சனாதனம் குந்திக்கொண்டது. மன்னர்களையும், வணிகர்களையும் குடிகளையும் இது ஆட்டிப் படைத்தது; பெண்களை இழிவுபடுத்தியது; குழந்தைத் திருமணங்களை நடைமுறைப்படுத்தியது; கைம்பெண்களை இழிவுபடுத்தி அலங்கோலமாக்கியது.

**இந்த அநீதிகளை எதிர்த்தவர்கள் அரக்கர்கள் என்றும், அசுரர்கள் என்றும் இகழப்பட்டனர். இந்த அநீதிகளை எதிர்த்தவர்கள் நாத்திகர் என்றும் உலகாயதர் என்றும் பட்டங்கட்டி ஒதுக்கப்பட்டனர். சமண நெறியும், புத்த நெறியும், வள்ளுவ நெறியும், சித்தர்கள் நெறியும் இந்த ஆரிய சனாதன எதிர்ப்பு நெறிகள்தாம்.**

ஆரிய சனாதன அதர்ம எதிர்ப்பு காலந்தோறும் புதுப்புது வடிவங்களில் முகிழ்த்துக் கொண்டே இருப்பதை வரலாறு காட்டுகிறது.

உடன்கட்டை ஏற்றும் கொடிய வழக்கத்தை ஒழிக்க உழைத்த இராஜாராம்மோகன்ராய், பெண்ணுரிமைக்கும், மனித சமத்துவத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் உழைத்த மகாத்மா ஜோதிபா புலே, தீண்டாமை அணுகாமைக்கு எதிராகப் போராடிய அய்யன்காளி, சாதியக் கொடுங்கோன்மையைச் சமய நெறியில் எதிர்த்து நின்ற அய்யா வைகுண்டர், தீண்டப்படாதார் எழுச்சிக்குப் பாடுபட்ட நாராயணகுரு முதலானவர்களெல்லாம் ஆரிய சனாதன அதர்மத்தை எதிர்த்துப் போராடியவர்களே.

ஆரிய சனாதன அதர்மம்தான் நந்தனைக் கொன்றது; காந்தியைக் கொன்றது; கல்புர்க்கியைக் கொன்றது; தபோல்கரைக் கொன்றது; பன்சாரேவைக் கொன்றது; இந்தியா முழுவதிலும் எண்ணற்ற படுகொலைகளை நடத்திக் குதூகலித்தது.

ஆனால், ஆரிய சனாதனத்தால் அண்ட முடியாத ஒரு பேராற்றலாக விளங்கியவர் தந்தை பெரியார். ஆரிய சனாதன அதர்மத்தை எதிர்த்து இடைவிடாமல் முழங்கிய ஒரு பெரும் தகரி (பீரங்கி) தந்தை பெரியார். இந்தத் தகரியிலிருந்து பாய்ந்த குண்டுமழையால்தான் ஆரியச் சுவர்கள் ஆட்டம் கண்டன. எனவேதான், பெரியார் ஆரியத்திற்கு எந்நாளும் அரிமாவைக் கண்ட கனவாக (சிம்ம சொப்பனமாக) விளங்கிக் கொண்டிருக்கிறார்.

1970களின் தொடக்கத்தில், ''பல்கலைக்கழகங்களே பெரியாரைப் பாராட்டுங்கள்'' என்ற தலைப்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தென்மொழியில் மிகச்சிறப்பான ஆசிரிய உரை ஒன்றை எழுதியிருந்தார். அந்த ஆசிரிய உரை இப்படித் தொடங்குகிறது : ''பெரியார் ஒரு கட்சியின் தலைவர் அல்லர். ஒரு காலத்தின் தலைவர்! ஓர் இனத்தின் தலைவர்! ஒரு வரலாற்றின் நாயகர்!''

ஆம், ஆரிய சாதி வருணாசிரமத்தைத் தகர்த்து, மனித சமத்துவத்தை எடுத்து நிறுத்திய வரலாற்றின் நாயகர் பெரியார்! எனவேதான் பாவலரேறு அவர்களின் மதிப்பீடு இப்படி அமைந்தது : ''இந்த மூவாயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் தமிழ் இனத்திற்கு வாய்த்த உண்மைத் தலைவர்கள் இரண்டே இரண்டு பேர். ஒருவர் திருவள்ளுவர்! மற்றொருவர் பெரியார்!''

தமிழ்த் தேசியத்தின் மாபெரும் பாவலரான பெருஞ்சித்திரனாரின் இந்தக் கணிப்பு எவராலும் ஒதுக்க முடியாதது.

**இம்மியும் தன்னலமின்றி வாழ்ந்த சமூகப் போராளி பெரியார். அவருடைய சிந்தனைகளின் அடிநாதமாக விளங்குவது ''தன்மானம்!'' இது தனிமனிதனின் தன்மானம், சமூகத்தின் தன்மானம், இனத்தின் தன்மானம், பண்பாட்டின் தன்மானம், மொழியின் தன்மானம் என விரியும்.**

அனைத்தையும் அகப்படுத்திய தன்மான இயக்கம் அவருடையது. சுயமரியாதைச் சிந்தனைக்கு இயக்கம் கண்டவர் உலக வரலாற்றில் பெரியார் ஒருவராகத்தான் இருக்கமுடியும்.

**அதிகாரக் கும்பலும் ஆன்மிகக் கும்பலும் மக்களிடமிருந்து முதலில் பறித்துக்கொண்டது அவர்களின் தன்மானத்தைத்தான்! இந்தத் தன்மான இழப்பில்தான் இந்த மண்ணின் பாட்டாளி மக்களின் அடிமை வாழ்க்கை தொடக்கம் பெற்றது.**

ஆரிய சனாதனத்தின் தலைமையிலான அதிகாரக் கும்பலால் இங்கே பறிக்கப்பட்டவை தனிமனிதனின் தன்மானம், சமூகத்தின் தன்மானம், இனத்தின் தன்மானம், மொழியின் தன்மானம், பண்பாட்டின் தன்மானம்! எனவே அனைத்து நிலைகளிலும் தன்மான உணர்வை மீட்டெடுக்கும் விடுதலைப் போரைப் பெரியார் தொடங்கினார்.

இதற்காக அவர் பல நம்பிக்கைக் கட்டுமானங்களைத் தகர்த்தெறியத் தொடங்கினார். சாதியத் தகர்ப்பும், பெண்ணடிமைத் தகர்ப்பும், மூடநம்பிக்கைகள் மூடச்சடங்குகள் தகர்ப்பும், மக்களை மடமையில் ஆழ்த்தும் புராணங்கள் இதிகாசங்களின் தகர்ப்பும் பெரியாரால் மேற்கொள்ளப்பட்டன.

சாதியம், மூடநம்பிக்கை, மூடச் சடங்குகள், பெண்ணடிமைத்தனம் எல்லாம் கடவுள் கருத்தாக்கத்தோடு ஒட்டிக்கொண்டிருந்ததால், கடவுள் என்ற கருத்தாக்கத்தையே அடித்து நொறுக்கினார், பெரியார்.

பெரியார் கொடுத்த அடியில் கடவுள்களெல்லாம் கலகலத்து உடைந்து வீழத் தொடங்கினார்கள்.

வரலாற்றைக் கூர்ந்து கவனித்த பெரியார், வடமொழியும், அது சுமந்து வந்த ஆரிய சனாதன அதர்மமும், தமிழ் முதலான மொழிகளையும், சமத்துவத்தோடு கூடிய இயற்கை நெறிசார்ந்த உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களையும் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தியிருப்பதைக் கண்ணுற்றார்.

எனவே, சாதி, மத, கடவுள் எதிர்ப்புடன், வடமொழி எதிர்ப்பு, வடமொழியின் பெருநூல்கள் கூறும் நால் வருண சாதியப் பண்பாட்டு எதிர்ப்பு என்பனவற்றை முன்னிலைப்படுத்தினார். ஒப்பும் இணக்கமும் இல்லாமல் இவற்றுக்கு எதிராக வாழ்நாள் முழுதும் போராடினார்.

வேதங்கள், மனுதருமம், கீதை, அருத்தசாத்திரம், பாரதம், இராமாயணம் இவற்றை ஒதுக்கிப் புறந்தள்ளச் சொன்ன பெரியார், திருக்குறளை நன்னெறி காட்டும் நூலாக மக்களுக்கு அறிமுகம் செய்தார். வடமொழிக்கு மாற்றாகத் தமிழை அறிவுநெறியுடன் வாழ்வியலில் கையாள வேண்டும் என அறிவுறுத்தினார்.

பெரியாருடைய கடவுள் மறுப்பு, வெறும் கடவுள் மறுப்பாக இருக்கவில்லை. அது வடமொழி வருணாசிரம மறுப்பையும், வடமொழி நூல்கள் கூறும் சடங்குகளின் மறுப்பையும் உட்கொண்டிருந்தது.

வடமொழி மேலாண்மையை எதிர்த்தவர்கள், வருணாசிரமத்தை எதிர்த்தவர்கள், சாதிகளை மூடச் சடங்குகளை எதிர்த்தவர்கள், சமத்துவத்தை ஏற்றவர்கள் கடவுள் நம்பிக்கையாளராகயிருந்தாலும், சமய ஈடுபாட்டாளராயிருந்தாலும், அவர்களை நட்பு ஆற்றலாக / நேச சக்தியாக ஏற்றுக்கொண்டார் பெரியார். திரு.வி.க., ஞானியாரடிகள், மறைமலையடிகள், குன்றக்குடி அடிகளார் போன்றாரோடு பெரியார் பூண்டிருந்த நட்பு இத்தகையதே.

எனவே, மனித சமத்துவமும், தன்மான வாழ்வுமே பெரியாரியத்தின் உயிர்நாடியாக விளங்கியவை ஆகும்.

பெரியார் கண்ட திராவிட இயக்கம் மூன்று சிந்தனைக் களங்களை உள்ளடக்கியது.

மறைமலையடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், சிங்காரவேலர் பெரியார் முதலானோரால் உருவான தன்மான ஒப்புரவு (சுயமரியாதை சமதர்ம) இயக்கம், நீதிக்கட்சியால் உருவான சமூகநீதி இயக்கம். இந்த மூன்று இயங்குதளங்களின் ஒருங்கிணைந்த ஆற்றலாக எழுச்சியும் வளர்ச்சியும் உற்றது திராவிட இயக்கம்.

**திராவிட இயக்கத்தின் எழுச்சியாலும் வளர்ச்சியாலுமே தூய தமிழுணர்வு காவிரியின் புதுப்புனல் போல் தமிழகத்தில் பெருக்கெடுத்தது.**

**இரட்டைக் குழந்தைகளுக்கு 'இராமன்-இலட்சுமணன்' என்று பெயர் வைத்த மக்கள், திராவிட வரவால், "செங்குட்டுவன்-இளங்கோ" என்று பெயர் வைத்தார்கள்.**

**திராவிட இயக்க வரவால், பாலகிருஷ்ணன் இளங்கண்ணன் ஆனான்; பாலசுப்பிரமணியன் இளமுருகன் ஆனான். சாதி அடிப்படையில் பெயர் சூட்டப்பட்டுவந்த பழைய நடைமுறை உதிர்ந்து, பழந்தமிழ் இலக்கியப் பெயர்கள் குழந்தைகளுக்குச் சூட்டப்பட்டன. பெயரில் என்ன இருக்கிறது என நினைத்துவிட வேண்டாம். பெயரில்தான் எல்லாமே இருக்கிறது.**

**முத்தன், காளி, நொண்டி, குப்பன், நண்டன், வேலன் இப்படி வைக்கப்பட்ட பெயர்கள் சமூகத்தின் கீழான படிநிலையைக் காட்டும். இராமசாமி, வேலுச்சாமி, முத்தய்யா. காளியண்ணன் என்று இப்படி வைக்கப்பட்ட பெயர்கள் சமூகத்தின் அடுத்த இடைநிலைப் படிநிலையைக் காட்டும். இராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, அனந்தகிருஷ்ணன் என இப்படி வைக்கப்பட்ட பெயர்கள் அடுத்த மேல்நிலைப் படிநிலையைக் காட்டும்.**

திராவிட இயக்க வரவால் மலர்ந்த தனித்தமிழ்ப் பெயர்கள், நெடுஞ்செழியன், செழியன், இளம்வழுதி, இளங்கோ, கரிகாலன், இளஞ்செழியன், பூவண்ணன், பூங்கொடி, புகழ்வடிவு, முல்லை, அல்லி, மலர்விழி, தமிழ்க்கொடி என இத்தகைய பெயர்கள், தமிழ் மக்களிடையே பெயரில் ஒரு ஒப்புரவை கொண்டு வந்தன. நாம் தமிழ்மக்கள், நமது மண் தமிழ்மண், நமக்கென ஒரு வரலாறு உண்டு. இழந்த நலன்களை நாம் மீட்க வேண்டும். நம் மீது சுமத்தப்பட்ட இழிவுகளைத் துடைக்க வேண்டும் என்னும் உணர்வை இப்பெயர்கள் தமிழர் உள்ளங்களில் விதைத்தன.

சமயத் துறையில், சைவர்கள், தமிழில் வழிபாடு, தமிழில் குடமுழுக்கு, தமிழ்ப் பாசுரங்கள் ஓதித் திருமணங்கள் நடத்துதல்; பார்ப்பனரையும் வடமொழியையும் ஒதுக்குதல் என முன்வந்ததற்கும் திராவிட இயக்கத்தின் சிந்தனைத் தாக்கமே காரணமாகும்.

"இந்தியா என்பது யாருடைய நாடு?
இங்கே வாழ்ந்தவர்கள் யார்?
இங்கே வந்து புகுந்து வளைத்துக்
கொண்டவர்கள் யார்?"

இந்த வினாக்களுக்கு விடையாகத் திராவிட இயக்கம் உண்மை வரலாற்றை மக்களுக்குச் சொன்னது.

இந்தியா முழுதும் அன்று தமிழரின் தேசம்தான். இங்கே வந்து நுழைந்தவர்களால் தமிழ் திரிபுக்கும் கலப்புக்கும் உள்ளானது. வடமொழிக் கலப்பால்

தமிழிய மொழிகள் பலவாறாகத் திரிபடைந்து பல மொழிகளாக உருமாறின. 'மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு' என்னும் நூலில் அறிஞர் அம்பேத்கர் இதை ஆழமாக எடுத்தியம்பியுள்ளார்.

இந்தியாவில் சொந்த மொழியை இழக்காதவர்கள் தமிழர்கள்தாம்! வடமொழிக் கலப்பால் சொந்த மொழி திரிபடைய நேர்ந்தவர்கள் பிற திராவிட மக்கள்! சொந்த மொழியைப் பெரும்பாலும் இழந்தவர்கள் வடபுலத்தின் உழைக்கும் குடிகள்!

இன்று வடபுலம் 100க்கு 90 ஆரியமொழி மயப் பட்டுவிட்டது. தெலுங்கு நாடு, கன்னட நாடு, கேரளம் எனும் மலையாள நாடு 100க்கு 50க்கு 50 தமிழும் வடமொழியும் கலந்து கிடக்கிறது.

பெரியார் திராவிட மொழிகளைப் பற்றிக் கூறிய கருத்து இங்கு கவனிக்கத் தக்கது. பெரியார் கூறுகிறார் : ''தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தனித் தனி மொழிகள் அல்ல. தமிழைத்தான் ஆந்திராவில் ஒருவிதமாகவும், கருநாடகத்தில் ஒருவிதமாகவும், கேரளத்தில் ஒருவிதமாகவும் பேசுகிறார்கள். நான் என்பதை நானு, நேனு, ஞான் என்றால் இவை வேறுமொழிகளாகிவிடுமா? வீட்டை இல்லு என்றால் தெலுங்கு என்கிறார்கள்; மனை என்றால் கன்னடம் என்கிறார்கள்; வீடு என்றால் மலையாளம் என்கிறார் கள். நாம் இவை எல்லாமே தமிழ்தான் என்கிறோம். எனவே தமிழ் இல்லாமல் இம்மொழிகள் இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.'' பெரியாரின் பார்வையில் அடிப்படைத் தெளிவு இருக்கிறது.

**தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான திராவிட மொழிகளின் கட்டமைப்பு முழுமையும் தமிழ மைப்பாக இருக்கிறது. பண்பாடு, வாழ்நிலைக் கூறுகள், தமிழ்மண்ணுடன் மிகவும் ஒத்திருக்கின்றன. எனவே, இங்கே தமிழ் அடையாளங்களை மீட்க வேண்டும் என்றும், இம்மொழியினரையும் ஆரியப் பிடிப்பிலி ருந்து விடுவிக்க வேண்டும் என்றும் திட்டமிட்டது திராவிட இயக்கம்.**

திராவிட இயக்கம் ''திராவிடத் தேசியம்'' என ஒன்றை முன்வைத்ததாகக் கூறுகிறார்கள். உண்மை அல்லாத செய்தி இது. திராவிட இயக்கம் தமிழ்த் தேசியம், தெலுங்குத் தேசியம், கன்னடத் தேசியம், மலையாளத் தேசியம் என்னும் இந்நான்கு தேசியங்களும் தமக்கான தனித்தனிக் குடியரசுகளை அமைத்துக்கொண்டு, இந்நான்கு கூட்டாட்சிக் குடியரசு களின் ஒன்றியமாகத் ''திராவிடக் குடியரசுகளின் ஒன்றியம்'' (Union of Dravidian Republics) செயல் படும் எனத் தெளிவுபடுத்தியது. இந்த முயற்சி புவியியல் நலம், பண்டப் பரிமாற்ற வணிக நலன்கள், மொழி கலை பண்பாட்டு நலன்கள் ஆகியவற்றுக்கு உகந்த தாக இருந்ததைப் பொருளியல் வல்லுநர்களும், வர லாற்று வல்லுநர்களும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

திராவிடக் கூட்டாட்சிக் குடியரசுகளின் ஒன்றியம் மலருவதற்கான முயற்சிகள் சரியான முறையில் திட்ட மிடப்படாததாலும், இலக்கை நோக்கிய செயற்பாடுகள் முறையாக வகுக்கப்படாததனாலும் இது கைகூடாமல் போய்விட்டது. ஆனால், இந்த நோக்கத்தை, இந்த இலக்கைத் தவறானதென்று எப்படிக் கூறமுடியும்?

மொழிவழி மாநிலங்கள் உருப்பெற்ற பின்பு, பிற திராவிட மாநிலங்கள் வடபுலத்தோடும், தில்லியோடும் தம் பிணைப்பை இறுக்கிக்கொண்டன, மொழி பண் பாட்டுக் கூறுகளில் சமற்கிருதத்தை நோக்கியே அவர் கள் நெருக்கமாகச் சென்றார்கள். எனவே இந்த நிலை யில் பெரியார், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்கின்ற இலக்கை நோக்கித் திரும்பினார். இது அரசியல் அறி வியல் கோட்பாட்டின்படி மிகப் பொருத்தமானதே ஆகும்.

பெரியார் ஒருபோதும் தெலுங்கருக்கோ, கன்னட ருக்கோ, மலையாளிகளுக்கோ ஆதரவாகப் பேசிய தில்லை; செயல்பட்டதில்லை. தமிழர் நலத்திற்கு எதிராக ஒருபோதும் அவர் சிந்தித்ததில்லை.

பெரியார் காணவிரும்பிய தமிழ்ச்சமூகம் சாதிகள் அற்றது; சேரிகளற்றது; சமத்துவம்-ஒப்புரவு நிறைந்தது; மூடநம்பிக்கைகளும் பொருளற்ற வாழ்வியல் சடங்கு களும் இல்லாதது.

''என்னரும் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னரும் கலைஞா னத்தால்
பராக்கிரம மத்தால் அன்பால்
உன்னத இமயம் போல
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல்எந் நாளோ!''

என்று புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகிறாரே, இதுதான் பெரியார் காணவிரும்பிய தமிழ்ச் சமூகம்.

வடமொழி மேலாண்மை, வருணாசிரம மேலாண்மை இல்லாத, அயலாரின் பொருளியல் சுரண்டல் இல்லாத, வருண சாதிகள் - புராண சாதிகள் உதிர்ந்து மறைந்த, அறிவியல் சிந்தனை மேலோங்கிய ஒரு தமிழ்ச் சமூகத்தை மலரச் செய்வதே பெரியாரின் நோக்கமாக இருந்திருக்கிறது.

பாரதி பாடியது போல்,

''பறையருக்கும் இங்குத் தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை''

என்பது பெரியாரியத்தின் இலக்கு. அதாவது, ''Liberation for those from below''. கீழ்த்தட்டு மக்கள் - விளிம்பு நிலை மக்கள் விடுதலையிலிருந்துதான் சமூகத்தின் விடுதலையை, தேசிய இனத்தின் விடுதலையைத்

தொடங்க வேண்டும். அடிமை நிலையிலுள்ள மக்களை விடுவிக்காமல் எப்படித் தமிழ்ச் சமூகம் விடுதலை பெற முடியும்? பெண்ணுக்கு விடுதலை இல்லாமல் எப்படி மனிதகுலம் விடுதலை எய்த முடியும்?

எனவே, தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், விளிம்புநிலை மக்கள், பாட்டாளி மக்கள், பெண்பாலார் விடுதலையை உள்ளடக்கியதாகவே பெரியாரின் தமிழ்ச் சமூக விடுதலை நெறி அமைந்திருக்கிறது.

இன்று, தமிழ்த் தேசியத்தின் தலைவர்களில் முதன்மையானவர் என்று உயர்த்திப் பிடிக்கப்படும் ஒருவரை நாம் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. அவர் சிறந்த தமிழறிஞர்; சிறந்த நாநலம் வாய்ந்தவர்; மிகச் சிறந்த இலக்கிய ஆய்வறிஞர்; தமிழக எல்லை மீட்புப் போராட்டங்களில் முன்நின்றவர். அவரை மதிக்கிறோம், போற்றுகிறோம்.

**ஆனால், அவர் இந்தியைத் தாங்கிப் பிடித்தார்; வடமொழியைத் தாங்கிப் பிடித்தார். சாதி வருணா சிரமக் கருத்தியல்களுக்கு எதிராக அவரது நாவோ எழுதுகோலோ ஒருபோதும் அசைந்ததில்லை. இந்த உண்மைகளையும் நாம் நெஞ்சில் நிறுத்துகிறோம்.**

ஈழ விடுதலைப் போர் உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தபோது, அவர் போராளிகளைப் பற்றி அவதூறு பேசினார். இந்திய அரசின் தொலைக் காட்சிகளில் தோன்றி, அமைதிப் படையின் அட்டூழியங் களை ஆதரித்துக் கருத்துரைத்து வந்தார். தமிழர் போராட்டத்தைத் தரக்குறைவாகப் பேசினார். இவை நம் நெஞ்சத்தை என்றும் அழுத்திக் கொண்டுதான் இருக்கும்.

யாரையும் நாம் முரண்பாடுகளோடுதான் விளங்கிக் கொள்ள வேண்டும். முரண்பாடுகளோடுதான் எடை யிடவும் மதிக்கவும் வேண்டும்.

பெரியாரின் சொல்லில், செயலில் தவறே இருந்த தில்லை என்று நாம் வழக்காட விரும்பவில்லை. பெரியாரும் மனிதர்தாம். மனிதர் எவரின் சொல்லிலும் செயலிலும் தவறு நேர வாய்ப்பு அமையவே செய்யும்.

ஆனால், பெரியாரைத் 'துரோகி' என்று சிலர் சொல் வதை நாம் ஒருபோதும் ஒப்ப முடியாது. பெரியார் தமிழினத்திற்குத் துரோகம் செய்தார் என்று பேசு பவர்களின் நெஞ்சம் கரவு நிறைந்தது; வஞ்சகம் குடிகொண்டது; அறியாமை நிறைந்தது. எங்கிருந்தோ எதையோ அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்!

'திராவிடம்' என்பதைத் தமிழ் என்பதற்கு முரணான சொல்லாகக் காட்ட அவர்கள் முயல்கிறார்கள். தமிழ் என்னும் மொழியைக் குறித்த சொல்தான் திராவிடம் என்பது. ஒரு காலத்தில் வடநூலாரால் இச்சொல் பயன் படுத்தப்பட்டது. இன்று, தமிழ் இன மொழிகளைக் குறிக்கவும், தமிழ்வழிக் கலைகள், தமிழ்வழிப் பண் பாடு, தமிழ்வழி மருத்துவம் போன்றவற்றைக் குறிக்க வும் ஒரு குறியீட்டுச் சொல்லாக உலகளாவிய அறிஞர் கள் சிந்தனையாளர்கள் இதனைக் கையாளுகிறார் கள். எனவே, தூய தமிழ் சார்ந்த ஒருநிலையைக் குறிப்பிடுவதற்கே அறிவுலகம் 'திராவிடம்' என்னும் சொல்லைக் கையாளுகிறது என்பது தெளிந்த உண்மை.

சாதியும் ஏற்றத்தாழ்வும் அற்ற ஒப்புரவு தேங்கிய தமிழ்த் தேசியத்தை நோக்கிய நமது பயணத்தில், பெரியார் என்கிற பேரொளி நமது பாதையை ஒளிமய மாக்குகிறது.

தமிழ்த் தேசியத்தின் மாபெரும் போராளியாக வாழ்ந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் பெரியாரைப் பற்றி எழுதிய பாடல் வரிகள் தமிழ்த் தேசியச் சிந்தனை யாளர்களின் உள்ளத்தில் ஊன்றப்பட வேண்டியவை.

''பெரும்பணியைச் சுமந்த உடல்
பெரும்புகழைச் சுமந்த உயிர்
பெரியார் என்னும்
அரும்பெயரைச் சுமந்த நரை
அழற்கதிரைச் சுமந்த மதி
அறியாமைமேல்
இரும்பு உலக்கை மொத்துதல்போல்
எடுக்காமல் அடித்த அடி
எரிபோல்பேச்சு
பெரும்புதுமை அடடாஇப்
பெரியாரைத் தமிழ்நாடும்
பெற்ற தம்மா.

எப்பொழுதும் எவ்விடத்தும்
எந்நேரமும் தொண்டோடு
இணைந்த பேச்சு!
முப்பொழுதும் நடந்த நடை
முழு இரவும் விழித்த விழி
முழங்குகின்ற
அப்பழுக்கி லாத உரை
அரிமாவை அடக்குகின்ற
அடங்காச் சீற்றம்!

பெரியாரைப் பேசுகின்றோம்
பெரியாரை வாழ்த்துகின்றோம்
அவருரைத்த பலவற்றுள்
ஒன்றையேனும்
சரியாகக் கடைப்பிடித்தால்
அடடா இத் தமிழ்நாடும்
சரியா தம்மா!''

(தந்தை பெரியார் திராவிடர் கழகம், கோவை மாநகரில் 2016 டிசம்பர் 24, 25 நாள்களில் நடத்திய திராவிடர் இயக்கக் கொள்கைப் பிரகடன நூற்றாண்டு நிறைவு விழாவில், ''தந்தை பெரியாரின் தமிழ்த் தேசியம்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் ஆற்றிய தலைமை உரை).

# காந்தியாரின் கொலையாளி கோபால் கோட்சேவின் விடுதலையும் இராசிவ் காந்தி கொலை வழக்கில் எழுவர் விடுதலையும்

- க. முகிலன்

இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப் பட்ட பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் 26 ஆண்டு களாகச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது எல்லா வகையிலும் அநீதியான கொடுமையாகும். நடுவண் அரசின் பார்ப்பன-பனியா உயிர் அதிகார வர்க்கம் தமிழர்களைப் பழிவாங்கும் மனப்போக்குடனேயே செயல்பட்டு வருகிறது என்பதற்கு எழுவரின் விடுத லைக்குத் தடையாக நிற்பதே சான்றாகும்.

தேசத்தந்தை என்று போற்றப்படுகிற காந்தியார் 1948 சனவரி 30 அன்று மாலை ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த நாதுராம் கோட்சே என்பவரால் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். நாதுராம் கோட்சே ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மிதவாதப் போக்கைப் பின் பற்றுவதாகக் கருதியதால், வி.டி. சாவர்க்கர் தலைமை யிலான தீவிரவாத இந்து மகாசபையில் சேர்ந்து பணி யாற்றினார். சாவர்க்கருடன் பயணம் செய்து பல கூட்டங்களில் பேசினார். அதனால் வி.டி. சாவர்க்கரும் காந்தியாரின் கொலை வழக்கில் ஒரு குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார்.

நாதுராம் கோட்சேவின் தம்பி கோபால் கோட்சேவும் காந்தியின் கொலை வழக்கில் விசாரிக்கப்பட்டார். இந்த வழக்கில் நாதுராம் கோட்சேவுக்கும் நாராயண ஆப்தே வுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருவரும் தூக்கிலிடப்பட்டனர். கோபால் கோட்சேவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. வி.டி. சாவர்க்கருக்கு இக் கொலையில் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கருதப்பட்ட போதிலும், சாட்சிகள் இல்லாத தால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

காந்தியின் கொலைக்குத் துணையாக இருந்த சாவர்க்கரின் உருவப்படம் அவர் 1910களில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகப் போராடியதைக் காரணமாகக் காட்டி, வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் (1999-2004) நாடாளு மன்றத்தில் காந்தியாரின் படத்திற்கு நேர் எதிராக வைக் கப்பட்ட கொடுமை நடந்தது. ஏனெனில் சாவர்க்கர் தான் இந்துத்துவம் என்பதை 1923இல் வரையறை செய்து, "இசுலாமியர் நாட்டுப்பற்று இல்லாத அந்நியர்" என்ற கருத்தைப் பரப்பியவர். சாவர்க்கரின் அடி யொற்றியே சங்பரிவாரங்கள் இன்று வரையிலும் இசுலாமியரை இந்நாட்டின் குடிமக்களாகக் கருதாமல், எதிரிகளாகவே பார்க்கின்றனர்.

காந்தியாரின் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே 14 ஆண்டுகள் சிறையில் இருந்த பின், தன்னை விடுதலை செய்யுமாறு 1961இல் உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார். ஆனால் உச்சநீதிமன்றம் அந்த விண்ணப்பத்தை ஏற்க மறுத்து விட்டது. ஆயினும் அதன்பின் மகாராட்டிர அரசு நான் காண்டுகள் முடிவதற்குள் கோபால் கோட்சேவை விடு



*காந்தியை படுகொலைச் செய்த நாதூராம் கோட்சே*

தலை செய்தது. அப்போது மகாராட்டிரத்தின் முதல மைச்சராக வசந்தராவ் நாயக் இருந்தார். **தண்டனை பெற்றவர்களை - குறிப்பாக 14 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது;** இந்த விதியை மகாராட்டிர மாநில முதல்வர் திறமையாகப் பயன்படுத்தி, கோபால் கோட்சேவை விடுதலை செய்தார். விடுதலையான பின் காந்தியைக் கொல்ல எவ்வாறு திட்டமிட்டோம் என்று, கோபால் கோட்சே வெளிப்படையாகப் பேசினார். காந்தியைக் கொன்ற கோபால் கோட்சேவை சங்பரி வாரங்கள் போற்றிப் புகழ்ந்தன.

காந்தியாரைக் கொன்ற வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற கோபால் கோட்சே, 14 ஆண்டுகள் சிறைத் தண்டனைக் காலம் முடிந்ததும் விடுதலை பெறலாம் என்ற குற்றவியல் சட்ட நடைமுறையின் அடிப்படை யில் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் இராசிவ் காந்தியின் கொலையில் நேரடியாகத் தொடர்பு இல் லாத நிலையிலும், கொல்லப்பட்டவர் நேருவின் பேரன் என்கிற ஒரே காரணத்தால், சிறப்பு விசாரணை நீதி மன்றம் 26 தமிழர்களுக்கு மரண தண்டனை விதித்த கொடுமை நிகழ்ந்தது. தமிழ் மக்களின் எதிர்ப்பாலும், கூட்டு முயற்சியாலும் உச்சநீதிமன்றம் 19 பேரை விடுதலை செய்தது. பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன் ஆகிய நால்வருக்கு மரண தண்ட னையும், இராபர்ட் பயாஸ், செயகுமார், இரவிச்சந்திரன் ஆகிய மூவருக்கு ஆயுள் தண்டனையும் விதித்தது.

நடுவண் அரசில் காங்கிரசு ஆட்சியில் இருந்த போது, ஒரு பெண் குழந்தைக்குத் தாயாக நளினி இருப்பதைக் கருத்தில் கொண்டு, சோனியா காந்தி யின் ஒப்புதலுடன் நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

தமிழரான சதாசிவம் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தபோது, 18.2.14 அன்று பேரறி

வாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனை யாக மாற்றி உச்சநீதிமன்ற அமர்வு தீர்ப்பளித் தது. அப்போது தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த செயலலிதா சட்ட விதிகளை நுணுக்க மாக ஆராயாமல் - இராசிவ் கொலையில் தண்டிக்கப்பட்ட எழுவரையும் விடுதலை செய்த பெருமையைத் தனக்கே உரித்தாக்கிக் கொள்ள வேண்டும் என்கிற அரசியல் உள்நோக்கத்துடன், அடுத்த நாள் (14.2.2014) செய்த அறிவிப்பே அவர்களின் விடுதலைக்கு ஒரு தடை யாகிவிட்டது.




2014 பிப்பிரவரி 19 அன்று, முதலமைச் சர் செயலலிதா சட்டப் பேரவையில், “சுதேந் திரராஜா என்கிற சாந்தன், ஸ்ரீஹரன் என்கிற முருகன், பேரறிவாளன் என்கிற அறிவு, நளினி, இராபர்ட் பயாஸ், ஜெயகுமார், இரவிச் சந்திரன் ஆகிய ஏழு பேரை விடுவிப்பது என்கிற தமிழக அரசின் முடிவு குறித்து நடுவண் அரசு மூன்று நாள்களுக்குள் தனது கருத்தைத் தெரிவிக்காமல் காலம் தாழ்த்தினால் இந்திய குற்றவியல் நடை முறைச்சட்டம் 432இல் மாநில அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைச்சரவைக் கூட்டத் தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஏழு பேரும் விடுவிக் கப்படுவார்கள்” என்று அறிவித்தார்.

இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் விதி 432இல் சிறையாளிகளை விடுதலை செய்தல் அல்லது தண்டனையைக் குறைத்தல் தொடர்பாக மாநில அரசு முடிவு எடுப்பதற்குமுன் நடுவண் அரசைக் கலந்தா லோசிக்க (Consult) வேண்டும் என்று கூறப்பட்டுள் ளது. ஆனால் மன்மோகன்சிங் தலைமையிலான நடுவண் அரசு, காங்கிரசுக் கட்சியின் தலைவி சோனியா காந்தியின் கணவர் இராசிவ் காந்தி என்பதால் அவரு டைய கொலை வழக்கின் குற்றவாளிகளைச் சிறையி லிருந்து விடுவிக்க எதிர்ப்புத் தெரிவித்தது. அதற்காக 20.2.2014 அன்று உச்சநீதிமன்றத்தில், “இந்திய குற்ற வியல் முறைச் சட்டத்தின் விதி 432இன்படி பேரறி வாளன் உள்ளிட்ட எழுவரை நடுவண் அரசின் ஒப்புதலைப் பெறாமல் விடுதலை செய்யும் அதிகாரம் தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை; **ஏனெனில் இராசிவ் காந்தி கொலை வழக்கு மத்தியப் புலனாய்வுத் துறை யால் விசாரிக்கப்பட்டு, நடுவண் அரசின் தடா சட்டத்தின்கீழ் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக் கிறார்கள்;** எனவே எழுவர் விடுதலை குறித்து தமிழ் நாட்டு அரசின் அறிவிப்புக்குத் தடைவிதிக்க வேண்டும்” என்று உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தது. இதே காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம் தமிழ்நாட்டு அரசு ஏழு பேரை விடுதலை செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்தது.

எழுவர் விடுதலை குறித்து, உச்சநீதிமன்ற நீதிபதி கலிபுல்லாவின் தலைமையில், 2015 திசம்பர் 2 அன்று அளிக்கப்பட்ட அமர்வின் பெரும்பான்மைத் தீர்ப்பில், மத்தியப் புலனாய்வுத் துறையாலோ அல்லது நடுவண் அரசின் வேறொரு அமைப்பாலோ விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது குறித்து முடிவு செய்யும் முதல் உரிமை நடுவண் அரசுக்குத் தான் உண்டு; மாநில அரசுக்கு இந்த முதல் உரிமை இல்லை என்று தீர்ப்புக் கூறியது, மேலும் நீதிபதி கலிபுல்லா, **இராசிவ் காந்தி கொலை நாட்டையே உலுக்கிய ஒரு கொடுஞ்செயல். எனவே என்றேனும் ஒருநாள் விடுவிக்கப்படுவோம் என்ற சிறிய நம்பிக்கை கூட தண்டிக்கப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடாது என்று கூறித் தன் “தேசபக்தியை”க் காட்டிக் கொண்டார்.**

உச்சநீதிமன்ற நீதிபதி கலிபுல்லா தலைமையி லான அமர்வு அளித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யு மாறு தமிழ்நாட்டு அரசு உச்சநீதிமன்றத்தில் விண்ணப் பித்தது. பேரறிவாளனும் இதேபோன்று விண்ணப்பித் தார். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் விதி 72 மற்றும் அரசமைப்புச் சட்டம் 161-இன்படி, தண்டனைப் பெற்றவர்களின் தண்டனையைக் குறைக்கவோ அல்லது விடுதலை செய்யவோ மாநில அரசுக்கு அதிகாரம் இருக் கிறது என்று தமிழ்நாட்டு அரசின் சார்பில் உச்சநீதிமன் றத்தில் வாதிடப்பட்டது.

மறு ஆய்வு குறித்த வழக்கை உச்சநீதிமன்றத் தின் தலைமை நீதிபதி ஜெ.எஸ். கேஹர், நீதிபதிகள் பி.சி. கோஷ், எஸ்.ஏ. போப்டே, ஏ.எம். சாப்ரே, யு.யு. லலித் ஆகிய அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அரச மைப்பு அமர்வு விசாரித்து 7.2.2017 அன்று தன் தீர்ப்பை வழங்கியது. நீதிபதி கலிபுல்லா வழங்கிய தீர்ப்பையே உறுதி செய்தது. மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டு தண்டனை பெற்றவர் களை விடுதலை செய்வது குறித்து முடிவு எடுக்கும் முதல் உரிமை நடுவண் அரசுக்கே உண்டு என்ற கருத்தை அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அமர்வும் உறுதி செய்தது.

**குற்றவாளிகளைத் தண்டிப்பது என்பது அவர்களை வாழ்நாள் முழுவதும் கொடுமைப்படுத்துவதற்காக அன்று, தம் குற்றத்தை - தவறை உணர்ந்து மனந்திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பை வழங்குவதே தண்டிக்கப்படுவதன் நோக்கமாகும், நவீன காலத்தில் சனநாயகம் இருப்பதாகச் சொல்லப்படும் நாடுகளில், இக்கோட்பாடே பின்பற்றப்படுகிறது, இந்த அடிப்படையில் தான் உலகில் உள்ள 200 நாடுகளில் 130க்கும் மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை என்பது ஒழிக்கப்பட்டு இருக்கிறது, இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மரணதண்டனை விதிப்பது நீடிக்கிறது.**

**இராசிவ் கொலை வழக்கில் 26 ஆண்டுகளாகச் சிறையில் இருந்துவரும் ஏழு பேரும் சிறை விதிகளை மீறாமல், நன்னடத்தையுடன் இருந்து வந்திருக்கின்றனர். பேரறிவாளன் இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட போது, அவரின் அகவை 19. ஏழுபேரும் கல்வியிலும் மற்ற வகையிலும் தங்களை மேம்படுத்திக் கொண்டுள்ளனர். பேரறிவாளன் பலவகையான நோய்களுக்கு ஆளாகியுள்ளார், எனவே இவ் எழுவரையும் 14 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள் என்ற ஒரே அடிப்படையில் விடுதலை செய்து, அவர்களின் எஞ்சிய வாழ்நாளைத் தம் குடும்பத்தினருடன் கழிக்குமாறு செய்வதே இயற்கை சார்ந்த நீதியாகும்.**


அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த பராக் ஒபாமாவின் பதவிக்காலம் 19.1.2017 அன்று முடிவுற்றது. 11.1.2017 அன்று தன் நாட்டு மக்களுக்கு பராக் ஒபாமா ஆற்றிய இறுதி உரை உலகம் முழுவதும் போற்றப்பட்டது. ஒபாமா தன் பதவிக்காலம் முடியும் தறுவாயில், **அரசின் இரகசிய ஆவணங்களை விக்கி லீக்ஸ் என்கிற அமைப்புக்கு அளித்ததற்காக 35 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சேலசியா மானிங் என்கிற பெண்ணின் தண்டனைக் காலத்தை 2017 மே மாதம் விடுதலையாகும் வகையில் குறைத்து ஆணையிட்டார்.**

நேருவையும் அவரின் குடும்ப வாரிசுகளையும் வாய்ப்பு நேரும் போதெல்லாம் கண்டனம் செய்து கொண்டிருக்கின்றார் பிரதமர் நரேந்திர மோடி. இந்தச் சூழலில் மோடியின் தலைமையிலான நடுவண் அரசு ஏழுபேரின் விடுதலைக்கு ஒப்புதல் தருமாறு தமிழக அரசும், தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாட்டுக்குரிய 57 நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரிய அழுத்தம் தரவேண்டும்.

காந்தியாரைக் கொன்ற கோபால் கோட்சேவை மகாராட்டிய மாநில அரசு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் புறக்கணித்து விடுதலை செய்தது போலவே, தமிழ்நாட்டு அரசும் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏழு பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இராசீவ் கொலை வழக்கில் 26 தமிழர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது தமிழர்கள் கொதித்தெழுந்து அதை எதிர்த்தது போல், ஏழு பேரின் விடுதலைக்காக இன்று வீறார்ந்த வகையில் இளைஞர்களும் பொதுமக்களும் போராட வேண்டும்.

**நூல் மதிப்புரை**

## பெரியார் சிந்தனைகளில் சூடும் சுவையும்




திருமழபாடி முனைவர் அ. ஆறுமுகம் அவர்கள் சங்க இலக்கியம், திருக்குறள் ஆகியவற்றில் மிகச் சிறந்த ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். பெரியார் கொள்கைகளிலும் முழுமையான ஈடுபாடு உள்ளவர். தொகுப்பு நூல்களை விடாமல் படித்து முழக்கும் ஆற்றல் உள்ளவர். ஏற்கெனவே தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்ட பாவேந்தம், அய்யா வே.ஆனைமுத்து அவர்களின் கருத்துக் கருவூலம் ஆகியவற்றைப் படித்து அதில் உள்ள முக்கியப் பகுதிகளைத் தொகுத்துத் தனித்தனி நூல்களாக வெளியிட்டவர்.

அவருடைய அண்மை வெளியீடான 'பெரியார் சிந்தனைகளில் சூடும் சுவையும்' என்ற நூல் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

பெரியாருடைய பேச்சையும் எழுத்தையும் தொகுத்து வே. ஆனைமுத்து அவர்கள் பெரியார் 'ஈ.வெ.ரா. சிந்தனைகள்' என்ற தலைப்பில் 1974இல் முப்பெரும் தொகுதிகளாக சுமார் 2200 பக்கங்களில் வெளியிட்டார். அதன் விரிவாக்கப் பதிப்பாக 2010இல் இருபது தொகுதிகளில் 9300 பக்கங்களில் வெளியிட்டார். பெரியாரைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள இன்று வரை இத்தொகுப்புகளே நன்கு பயன்படுகின்றன.

இந்த இருபது தொகுப்புகளையும் முழுமையாகப் படித்து, அவரே இந்நூலின் முன்னுரையில் கூறியுள்ளபடி, மிகவும் சிறப்பான பகுதிகளைக் குறித்து வைத்துக்கொண்டு, தொகுப்பு வாரியாகவும், தலைப்பு வாரியாகவும், பெரியார் சிந்தனைகள் தொகுதி எண். பக்க எண் முதலியவற்றையும் குறித்து இந்நூலில் வழங்கியுள்ளார்.

பெரியார் சிந்தனைகள் இருபது தொகுதிகளையும் படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள், இந்த நூலைப் படித்தாலே 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளின்' சுருக்கத்தைப் படித்தது போன்ற உணர்வு ஏற்படும். முனைவர் அ. ஆறுமுகம் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. பெரியார் தொண்டர்கள் ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

நூலின் விலை ரூ.150/- பக்கங்கள் 240.

கிடைக்குமிடம் : **பாவேந்தர் பதிப்பகம்,**
''சீரகம்'', 4/79, நடுத்தெரு, திருமழபாடி - 621 851.
அரியலூர் மாவட்டம்.
தொலைப்பேசி : 04329 - 243245

**- வாலாசா வல்லவன்**

# தொடரும் ஊழல்களும் சுரண்டல்களும்

- குட்டுவன்

18ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் பெருமளவில் பணப் பொருளாதாரம் இந்தியத் துணைக்கண்டத்தில் வளரத் தொடங்கியது. பெருந்தொழில்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியில்தான் தொடங்கப்பட்டன. பணப் பொருளாதாரத்தின் நடவடிக்கைகள் தொடங்கிய உடனே வணிகர்கள், பணத்தரகர்கள் தோன்றினர். மும்பையில் இயங்கி வரும் பங்குச் சந்தை இருக்குமிடம் ஷதலால் தெரு என்று அழைக்கப்படுகிறது. தலால் என்றால் தரகர் என்று பொருள். பொருளாதார பண மாற்ற நடவடிக்கைகளாலும் இந்தத் தலால்கள் வணிகத்தில் மட்டுமின்றி அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். சான்றாக நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில்(1991-96) பெரும் பங்குச் சந்தை ஊழலில் பேரளவு வங்கிப் பண மோசடியில் ஈடுபட்ட ஹர்ஷத் மேத்தா என்பவரும், நிதி-பங்குச்சந்தைத் தரகரே ஆவார். நரசிம்மராவ் ஆட்சியில் இணை அமைச்சராக இருந்த ப. சிதம்பரமும் முறைகேடாக பரிவர்த்தனை நடத்திய ஹர்ஷத் மேத்தா குழுமத்தில் (Fair Growth Company) பங்குகள் வாங்கினார்-வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுகள் காரணமாக பதவி விலக நேரிட்டது. ஊழலில் ஈடுபட்டவர்களை மீண்டும் மீண்டும் பதவியில் அமர்த்தி அழகு பார்ப்பது தேசியக் கட்சிகளின் திருட்டான திருவிளையாடல் ஆகும்.

கிழக்கிந்தியக் குழுமத்தில் 24 வயதில் இந்தியாவிற்கு வந்து இராணுவ வீரராகவும் வணிகராகவும் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கிழக்கிந்தியக் குழும ஆட்சியை நிறுவியவர்களில் ஒருவரான இராபர்ட் கிளைவ் மீதும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இன்றைய பண மதிப்பில் பல இலட்சம் கோடி அளவிற்கு ஊழல் செய்ததற்காக இங்கிலாந்து அரசு இவர் மீது வழக்கினைப் பதிவு செய்தது. இறுதியில் ராபர்ட்கிளைவ் தற்கொலை செய்து கொண்டு மரணமடைந்தார். ஒருவேளை அவர் மானம் இழுக்குப் பற்றிக் கவலைப்பட்டிருக்கலாம்.

அதுபோல, பிரித்தானிய ஆட்சி இந்தியாவில் நிலை பெறுவதற்கு அடித்தளம் அமைத்த வாரன் ஹேஸ்டிங்சு இந்தியாவில் கொள்ளையடித்து இங்கிலாந்தில் ஏராளமான சொத்துகளை வாங்கினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது. புகழ்மிக்க அரசியல் அறிஞரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எட்மன்ட் பர்க் 1789இல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஹேஸ்டிங்சு மீது குற்றம் சுமத்தி (Impeachment) அவரை நீக்குவதற்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அவ்வுரையில் இந்திய மக்களின் சுதந்தர உரிமைகள் சட்டங்களைப் பாழாக்கியதற்காகவும் அவர்களது சொத்துக்களை அழித்ததற்காகவும் வீணாக்கியதற்காகவும் இந்திய மக்கள் சார்பில் அவர் மீது குற்றம் சுமத்துகிறேன். நிலைத்து நிற்கின்ற நீதி, சட்ட நெறிகளை மீறியதற்காக அவர் மீது குற்றம் சுமத்துகிறேன். எல்லாத் தன்மைகளிலும் மிகமிகக் கொடுஞ் செயல்களை நிறைவேற்றி வடுக்களை ஏற்படுத்தி அடக்குமுறைகளை ஏவி மக்களைத் துன்புறுத்தியதற்காக மானுட நீதியின் பெயரால் அவர் மீது குற்றம் சாட்டுகிறேன் என்று பெர்க் குறிப்பிட்டுள்ளார். அவ்வறிஞரின் கணிப்பு காலம் கடந்து இன்றும் நமது நடைமுறையில் இருக்கிறதே என்று வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது. விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற வீரர்கள் தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் இழந்தனர். பல ஆண்டுகள் சிறையில் கழித்தனர். பல நூறு பேர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். இவர்களின் தியாகங்கள் வீணாகி ஊழல் செய்தோர்கள் உத்தமர்கள் போல் சிறை செல்கிறார்கள்.

இதே காலகட்டத்தில் சென்னையில் கோட்டையில் இயங்கி வந்த கிழக்கிந்தியக் குழுத்தில் பணியாளராகப் பணியாற்றிய லார்ட் பீகார்ட் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு கோட்டையிலேயே சிறை வைக்கப்பட்டார் என்பதையும் வரலாறு சுட்டுகிறது. வெள்ளைக்காரன் கொடுமைகளைவிட இன்று அரசியல் கொள்ளைக்காரர்கள் செய்யும் ஊழலும் சுரண்டலும் மக்கள் மீது ஆறாத வடுக்களை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு ஊழலின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால் ஒரு தனிக் கட்டுரை போதாது ஒரு நூலையே எழுத வேண்டி வரும். இந்தியா விடுதலை பெற்று எழுபது ஆண்டுகள் கடந்தும், தொடக்கக்கல்வியை அனைவருக்கும் அளிக்க முடியாத கொடுமையான சூழலே உள்ளது. இந்தத் தொடக்கக்கல்வியின் நிதியிலும் ஊழல் செய்யும் கொள்ளையர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணும் போது, இந்தக் கொடும் அரசியல் குற்றவாளிகளைத் தண்டிக்க தற்போதுள்ள தண்டனைச் சட்டங்கள் போதாது என்றே தோன்றுகிறது.

**அனைத்து நல்ல, கெட்ட செயல்களுக்கெல்லாம் ஒன்றிய அரசில் 1947 முதல் ஆண்ட காங்கிரசு ஆட்சியே முதன்காரணமாக அமைகின்றது. ஊழல்களிலும் காங்கிரசு செய்த ஊழல்களே முதலிடம் பெறுகின்றன.**

1948இல் நேருவின் நெருங்கிய நண்பராக இருந்த வி.கே. கிருஷ்ண மேனன் இங்கிலாந்தின் தூதுவராகப் பணியாற்றினார். அப்போது இங்கிலாந்திலிருந்து ரூ.80 இலட்சத்திற்கான 200 இராணுவ ஜீப்கள் வாங்கப்பட்டன. வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்கும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வி.கே. கிருஷ்ண மேனன் மீறிவிட்டார் என்ற குற்றச்சாட்டு கூறப்பட்டது.

ஆனால் 1955 செப்டம்பர் 30ஆம் தேதி காங்கிரசு கட்சியால் அமைக்கப்பட்ட அனந்தசயனம் அய்யங்கார் தலைமையிலான விசாரணைக்குழு-இந்த வழக்கில் ஒன்றுமில்லை என்று அறிவித்துவிட்டது. இந்தத் தீர்ப்பில் மனநிறைவு பெறாத எதிர்க்கட்சிகளைப் பார்த்து, "தேர்தலில் இதை ஒரு பிரச்சினையாக முன்வைத்து எதிர்க்கட்சிகள் காங்கிரசைத் தோற்கடிக்கலாம்" என்ற விசித்திரமான வாதத்தை வைத்தார் அனந்தசயனம். பின்பு 1956இல் நேருவின் அமைச்சரவையில் கிருஷ்ண மேனன் இணைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மகாத்மா காந்தியின் தனிச்செயலராக இருந்த கல்யாணம் (இன்றும் உயிரோடு சென்னையில் வசிக்கிறார்) கிருஷ்ண மேனன் போன்ற ஊழல் செய்பவர்களைப் பாதுகாப்பு அமைச்சராகப் பிரதமர் நேரு நியமிப்பது சரிதானா? என்ற விமர்சனத்தை அன்றே வைத்தார்.

1950இல் தமிழகத்தைச் சேர்ந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரி நிதியமைச்சராக இருந்த போது 'முந்தரா ஊழல்' வெளிவந்தது. அரிதாஸ் முந்தரா, ஹர்ஷத் மேத்தா போல பங்குச் சந்தைத் தரகராவார். அரசு காப்பீட்டுக் கழகத்தின் பங்குகளை வாங்கியதில் 4 கோடி ஊழல் நடைபெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் முதலீட்டுக் குழுவின் பரிந்துரைகளை மீறி, அரசின் அழுத்தத்தின் காரணமாக இந்தப் பங்குகள் முந்தராவிற்கு விற்கப்பட்டன என்று கூறப்பட்டது.

1958இல் இந்திய தேசியக் காங்கிரசின் ரேபரலி தொகுதி உறுப்பினரும் இந்திராகாந்தியின் கணவருமான பெரோஸ் காந்தி இது ஒரு பெரும் ஊழல்; இதனை விசாரிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். சக்தி வாய்ந்த பெரும் நிதியமைப்பான ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதைப் பற்றி நாடாளுமன்றம் விசாரிக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். அன்று நிதியமைச்சராக இருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரி இதில் ஆதாரம் இல்லை என மறுத்தார்.

பிறகு நாடாளுமன்றத்தின் வலியுறுத்தலின் காரணமாக மும்பை நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி எம்.சி.சாக்ளா தலைமையில் ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. தனது விசாரணை நேர்மையாகவும் நடுநிலைமையாகவும் இருக்கவேண்டும் என்பதால் இந்த விசாரணையைப் பொது விசாரணையாக நீதிபதி சாக்ளா நடத்தினார். மக்கள், செய்தியாளர்கள் இந்த விசாரணையைப் பார்ப்பதற்கு ஒலிபெருக்கி வசதி கூடச் செய்யப்பட்டது. 24 நாட்களில் விசாரணையை முடித்து நீதிபதி சாக்ளா பெரும் சாதனையைப் படைத்தார்.

பல முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த பங்குத் தரகர்கள் ஒரு தனிநபர் நிறுவனத்திற்குச் சந்தையில் அதிக மதிப்பையும் பொருளையும் ஈட்டுவதற்கு அரசு ஒத்துழைத்திருக்கிறது என்று நீதிபதி சாக்ளா குற்றம் சாட்டினர். அப்போது நிதிச்செயலராக இருந்த எச்.எம். பட்டேலும், வைத்தியநாதன் என்கிற ஆயுள் காப்பீட்டு அதிகாரியும் கூட்டுச் சேர்ந்து இந்தப் பணத்தை மாற்றியுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டது தனக்குத் தெரியாது என்று நிதியமைச்சர் பொய்யுரைத்ததாக நீதிபதி சாக்ளா கண்டித்தார். இதன் காரணமாக, கிருஷ்ணமாச்சாரி பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. இந்த வழக்கில்தான் முந்தராவிற்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இந்தியாவினுடைய முதல் நிதி மோசடிக்கு ஒத்துழைத்தவர் நம்ம ஊர் டி.டி.கிருஷ்ணமாச்சாரி என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு, நேரு அமைச்சரவையில் டி.டி.கே. சேர்க்கப்பட்டாலும் நேரு நிதி அமைச்சர் பொறுப்பைத் தர மறுத்து விட்டார். நேருவின் மறைவிற்குப் பிறகு பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் டி.டி.கே. மீது அளித்த புதிய ஊழல் புகார்களை விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்திற்குக் கோப்புகளை அனுப்பினார். டி.டி.கே. விசாரணைக்குப் பயந்து பதவி விலகல் மடலை அளித்தார்.

பின்னர் சென்னையில் தங்கியிருந்தபோது டி.டி.கே. கவிஞர் கண்ணதாசனைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். கவிஞருக்கு அதிர்ச்சி; எதற்காக டி.டி.கே. அழைக்கிறார் என்ற வியப்புடன் அவர் இல்லத்திற்கு பழ.நெடுமாறனுடன் சென்றுள்ளார். டி.டி.கே. கவிஞர் கண்ணதாசனை வரவேற்று, "போனால் போகட்டும் போடா" என்ற பாடல் தான் சந்தித்த அவமானங்களுக்கு இதமளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார். இந்த நிகழ்வை திருவாளர் பழ. நெடுமாறன் கவியரசர் என் காவலர் என்ற நூலில் குறித்துள்ளார். "போனால் போகட்டும் போடா! சுருட்டியவரை மிச்சம்தானடா" என்று டெல்லியிலிருந்து ஓடி வந்த டி.டி.கேக்கு சென்னையில் எத்தனை நினைவுச் சின்னங்கள்! இந்த ஊழல் பேர்வழியின் பெயரில்தான் டி.டி.கே. சாலை ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் சங்கீத வித்வத் சபை என சமஸ்கிருத மொழியில்தான் இசை மன்றமும் டி.டி.கே. பெயரில்தான் இன்று வரை உள்ளது.

அண்மையில் மருத்துவர் இராமதாசு மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஊழல் வழக்கில் குற்றவாளி என்று உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு சொல்லப்பட்ட பிறகு, அவரது படத்தைப் பொது இடங்களிலும் அரசு அலுவலகங்களிலும் வைக்கக்கூடாது என்றும், அரசு செலவில் நினைவிடம் அமைக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நமது மயிலை 'பெரியவாள்கள்' டி.டி.கே. அரங்கில் ஊழல் குழைத்த இசையைக் கேட்பதில் தனி இன்பம் காண்கின்றனர். ஊழல்களில் கூட சனாதன தர்மம் ஓங்கி நிற்கிறதே!

**1962இல் ஜெயந்தி தர்மதேஜா ரூ.200 முதலீட்டில் ஒரு கப்பல் குழுமத்தை ஆரம்பித்தார். நேரு ஆட்சி**

**காலத்தில் நடந்த ஊழல்களில் இது ஒரு பெரும் முன்னோடி ஊழலாகக் கருதப்பட்டது. வெறும் 200 ரூபாயில் தொடங்கப்பட்ட குழுமத்திற்கு 22 கோடி ரூபாய் கடன் அளிக்கப்பட்டது.** கடனில் பெரும் பங்கினை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு இலண்டன் மாநகரில் ஓடி ஒளிந்து கொண்டார். அவரைக் கைது செய்து சட்டப்படி அவருக்கு 6 ஆண்டுகாலச் சிறைத்தண்டனை உறுதி செய்யப்பட்டு இந்தியாவிற்கு அழைத்துவரும் நிலையில் தலைமறைவானார். இன்றுவரை தர்மதேஜா எங்கிருக்கிறார் என்ற தகவல் கிடைக்கவில்லை.

அரசு வங்கிகளில் பல ஆயிரம் கோடிகளைக் கடனாகப் பெற்று திருப்பித்தராமல் இலண்டனுக்கு ஓடிச்சென்ற விஜய் மல்லையா, ஒன்றிய அரசின் அமைச்சரான சுஷ்மா சுவராஜ் குடும்பத்திற்கு நெருங்கிய நண்பரான கிரிக்கெட் லலித் மோடி இன்றும் இலண்டனில் அரசை ஏமாற்றி உல்லாசமாக உலா வருகின்றனர். இவர்களுக்கெல்லாம் ஊழல் செய்து வெளிநாட்டிற்குத் தப்பிச் செல்லும் வழியை அமைத்ததில் தர்மதேஜா முன்னோடியாகத் திகழ்கிறார்.

1964இல் பிரதாப் சிங் கைரோன் பஞ்சாப் மாநிலத்தின் முதல்வராக 1956 முதல் 1964 வரை இருந்தவர். விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு ஐந்தாண்டு சிறைத் தண்டனைப் பெற்றவர். விடுதலைக்குப் பிறகு பஞ்சாப் மாநிலக் காங்கிரசுத் தலைவராக விளங்கியவர். பஞ்சாபில் வேளாண்துறை வளர்ச்சிக்கு முதன்மையான பங்களிப்பைத் தந்தவர். இவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனது குடும்ப உறுப்பினர்கள் பெயர்களில் ஏராளமான சொத்துகளை வாங்கிக் குவித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டது. மேலும் இவரது மகன்கள் தந்தையின் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாலியல் அத்துமீறல்கள் செய்தனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இவர் மீது எதிர்க்கட்சிகள் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். இதனடிப்படையில் ‘தாஸ் விசாரணைக் குழு’ அமைக்கப்பட்டது. இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மை என்று கூறப்பட்டது. முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார். அதன் பிறகு தில்லி சண்டிகர் தேசிய நெடுஞ்சாலையில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். காங்கிரசு முதலமைச்சர் மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டாலும் குற்றம் உண்மை என்றவுடன் விலகல் கடிதமும் பெறப்பட்டது.

1965இல் ஒரிசாவின் காங்கிரசு முதலமைச்சர் பிஜு பட்நாயக் தனது சொந்த நிறுவனமான கலிங்கா குழாய் நிறுவனத்திற்கு அரசு ஆதரவினை நல்கினார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனடிப்படையில் தானே முன்வந்து முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார். இவரும் விடுதலைப் போராட்டக் காலத்தில் பல அரிய செயல்களை நேருவின் வேண்டுகோளை ஏற்றுச் செய்தவர். இந்தோனேசியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் நேருவின் வேண்டுகோளை ஏற்று விமானத்தைப் பட்நாயக்கே ஓட்டிச் சென்று அங்கு கொடுமைக் குள்ளாக்கப்பட்டவர்களை மீட்டெடுத்தார். இவர் தற்போதைய ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் தந்தையாவார்.

1971இல் பிரதமர் இந்திரா காந்தி மீது ஓர் ஊழல் புகார் அளிக்கப்பட்டது. 1971இல் மே 24 நாடாளுமன்ற வளாக பாரத ஸ்டேட் வங்கிக் கிளையிலிருந்து ரூ.60 இலட்சம் பணம் கேப்டன் நாகர்வாலாவின் வங்கிக் கணக்கிற்கு மாற்றச் சொல்லி, அப்போது தலைமைக் காசாளராக இருந்த பிரகா‘ மல்கோத்ராவிற்கு இந்திரா காந்தியின் குரலில் சொல்லப்பட்டது. ஆனால் இந்தக் குரலைப் பயன்படுத்தியவர் நாகர்வாலா என்று அறிந்து அவரைக் கைது செய்தனர். வழக்கு விசாரனைக்குப் பிறகு நான்கு ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இவர் மரணம் அடைந்ததால் பல சந்தேகங்கள் இவரது மறைவிற்குப் பிறகு எழுப்பப்பட்டன. இந்திரா காந்தியின் குரலில் ஒருவர் துணிச்சலாகப் பேச முடியுமா? அதுவும் நாடாளுமன்றத்தில் இயங்கி வந்த வங்கிக் காசாளரிடம் பணம் கேட்க முடியுமா? அப்படிப் பணம் கேட்டாலும் கொடுக்க முடியுமா? என்ற கேள்விக்கணைகள் தொடர்ந்து கேட்கப்பட்டன.

1973இல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது மாருதி கார் தொழிற்சாலைக்கு எந்தத் தொழில்நுட்பத் தகுதியும் இல்லாத அனுபவமற்ற சோனியா காந்தி மேலாண்மை இயக்குனராக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு அரசால் வரிச்சலுகைகள், நிலம், நிதியுதவி ஆகியன அளிக்கப்பட்டன. ஆனால் இக்காலக்கட்டத்தில் மாருதி நிறுவனம் ஒரு காரைக்கூட உற்பத்தி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றத்தில் மாருதி ஊழல் தொடர்பாக எல்லா எதிர்க்கட்சிகளும் இணைந்து விவாதங்கள் செய்து பல ஆவணங்களை வெளியிட்டன. அன்றைய ஜனசங்க நாடாளுமன்ற உறுப்பினர் வாஜ்பாயும் சோஷலிஸ்ட் கட்சி ஜார்ஜ் பெர்ணான்டசும் நிகழ்த்திய நீண்ட நேர உரையை இக்கட்டுரையாளர் நாடாளுமன்றத்தில் பார்வையாளராக இருந்து கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார். அப்போது ஜார்ஜ் பெர்ணான்டசு இந்திரா காந்தியை நேருக்கு நேர் பார்த்து ஊழல் கங்கை (Gangothri of corruption) என்று குறிப்பிட்டார். இதன் காரணமாகத்தான் நெருக்கடி காலத்தில் ஜார்ஜ் பெர்ணான்டசு கைது செய்யப்பட்ட போது விலங்கிடப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டார்-என்று மூத்த செய்தியாளர்கள் அக்காலக்கட்டத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

**(தொடரும்)**

# மாணவர்–இளைஞர் எழுச்சி சிறு பொறி மட்டுமே! பெரு நெருப்பு அல்ல!!

- இராமியா

சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துபவர்கள் மோசமானவர்களாக இருந்தால், மக்களுக்கு எவ்விதப் பயனும் கிடைக்காது. சட்டம் எவ்வளவு மோசமானதாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துபவர்கள் நல்லவர்களாக இருந்தால், மக்களுக்கு ஓரளவுக்குப் பயன் இருக்கும் என்று மேதை அம்பேத்கர் கூறினார்.

விவசாய, நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டங்கள் மிகவும் நல்லவை. ஆனால் அதன் செயலாக்கம் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும் இருந்ததால் மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லாமல் போய்விட்டது.

வாஜ்பாய் தலைமை அமைச்சராக இருந்த பொழுது "அனைவருக்கும் கல்வி" எனும் திட்டத்தை மிகவும் ஆடம்பரமாக அறிவித்தார். ஆனால் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் காவிக் கும்பலினர் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில், கோவில்களில் பஜனைப் பாடல்களைப் பாடுவதற்கும், சுண்டல் விநியோகிப்பதற்கும் செலவழித்தனர். ஆனால் காமராசர் எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் கிராமப்புறங்களில் பள்ளிகளைத் திறந்தார்; கல்வியை அளித்தார். மோசமான முதலாளித்துவ, பார்ப்பன ஆதிக்கச் சட்டங்களின் கீழ், கடுமையான நிதிப் பற்றாக் குறையிலும் காமராசரால் கல்வியை அளிக்க முடிந்தது.

இன்றைய நிகழ்வுகளும் சட்டங்களும் மோசமானவையாக இருந்ததால் அவற்றை நடைமுறைப்படுத்தும் நல்லவர்கள் இடம் பெற முடியாமல் போய்விடும் என்று மெய்ப்பித்துக் கொண்டு இருக்கின்றன.

சுற்றுச் சூழல் கேடும், புவி வெப்ப உயர்வும் முதலாளித்துவ உற்பத்தி முறை தொடர்ந்தால், உலகம் அழிந்துவிடும் என்று அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றன. அதன் விளைவுகளால் உலக மக்களிடையே அமைதியின்மையும், தீவிரவாதமும் வளர்ந்து வருகின்றன. ஆகவே முதலாளித்துவ முறைக்குக் கடிவாளம் போட வேண்டும் என்று போப் ஆண்டவரும், அமெரிக்க அதிபர் பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட முயன்ற பெர்னி சாண்டெர்சும் (Bernie Sanders) உரக்கச் சொன்னார்கள், ஆனால் அமெரிக்க அரசியல்வாதிகள் போப் ஆண்டவர் மதம் தொடர்பான வேலைகளை மட்டும் செய்தால் போதும் என்று கூறிவிட்டனர். பெர்னி சாண்டெர்சைப் பொறுத்தமட்டில் அவர் வேட்பாளராகக் கூடத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அது மட்டும் அல்ல; புவி வெப்பம் உயரவில்லை என்று பச்சைப் பொய்யைக் கூச்ச நாச்சம் இல்லாமல் கூறும் டொனால்ட் டிரம்ப் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். இப்பொழுது அமெரிக்க மக்கள் அவரை எதிர்த்து அமைதி வழியில் போராடிக் கொண்டு இருக்கின்றனர்.

உலக நிகழ்வுகள் ஒரு புறம் இருக்கட்டும். நம் தமிழ் நாட்டு நிகழ்வுகளைப் பார்ப்போம்.

முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு பல பரபரப்பான நிகழ்வுகள் நடந்து உள்ளன. சசிகலா முதல்வர் ஆவதற்கு முயன்றார். ஆனால் சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றதால், எடப்பாடி பழநிச்சாமியை அப்பதவிக்கு நியமித்தார், அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கூவத்தூர் சொகுசு விடுதியில் சிறை வைத்து, அவர்களை அப்படியே குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் அவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தார். தமிழக மக்கள் அனைவரும் இதற்கு எதிராகக் கொந்தளித்து நின்ற போதிலும், மக்களின் விருப்பத்திற்கு எதிராக இச்செயல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வுக்கு முன், மாணவர்களும், இளைஞர்களும் மெரினா கடற்கரையில் குழுமி ஏறு தழுவல் விளையாட்டை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று போராடி, உச்ச நீதிமன்றம், மத்திய அரசு, மாநில அரசு என அனைத்து அரசுப் பொறியமைவுகளையும் வென்றதைச் சுட்டிக்காட்டி, இதே போல் மக்களின் முழுமையான எதிர்ப்பை மீறி அமைந்த அரசையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்று மிகப் பெரும்பான்மையான மக்கள் சமூக வலைத்தளங்களில் குரல் கொடுத்தனர்.

ஏறு தழுவல் போராட்டம் போல், இப்போராட்டம் சென்னையில் மட்டும் அல்லாமல் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்கள். ஆனால் இப்போராட்டம் தொடங்கப்படவே இல்லை. ஏறு தழுவல் போராட்டத்தில் வெளிப்பட்ட வீரம், மக்கள் எதிர்ப்பு அரசுக்கு எதிரான போராட்டத்தில் வெளிப்பட முடியாமல் போனதற்குக் காரணங்கள் யாவை?

ஏறு தழுவல் போராட்டத்தில் வெளிப்பட்ட மக்களின் ஆற்றல் மகத்தானது என்று கூறிக் கொண்டாலும், அது ஒரு சிறு பொறியே, ஒழிய, பெரு நெருப்பு அல்ல. ஒரு முறை ஊதினாலேயே அவிந்து விடும் அளவிற்கு வலிமை குறைவானது. அப்படி என்றால் உச்ச நீதி மன்றம், மத்திய அரசு போன்ற வலிமை மிக்க அரசுப் பொறியமைவுகள் எப்படிப் பணிந்தன?

உண்மையில் ஏறு தழுவல் விளையாட்டு நடப்பதைப் பற்றியே, நடக்காமல் போவதைப் பற்றியோ அரசுக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது. அவர்களைப் பொறுத்தமட்டில் பார்ப்பன ஆதிக்கத்தையும், முதலாளித்து வப் பொருளாதார முறையையும் பாதுகாக்க வேண்டும் என்பதில் மட்டும்தான் அக்கறை. அந்த விஷயங்களைப் பற்றி விவாதம் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் மற்ற விஷயங்களில் நம்மை திசை திருப்பிவிட்டு அழுத்துகிறார்கள். இவர்களுடைய அழுத்தத்தை மீறி, அனைத்து வகுப்பு மக்களிலும் அனைத்து நிலையிலும் அறிவும் திறனும் உடையவர்கள் இருப்பதால், கல்வி, வேலை வாய்ப்பு, சமூக, பொருளாதார நடவடிக்கைகளில், அனைத்து நிலைகளிலும் அனைத்து வகுப்பு மக்களும் இடம் பெறும் விதமாக, விகிதாச்சாரப் பங்கீடு முறை வேண்டும் என்று போராடிப் பாருங்கள். மேலும் சுற்றுச் சூழல் கேடும், புவி வெப்ப உயர்வும் உலகை அழிவுப் பாதையில் கொண்டு செல்வதைச் சுட்டிக் காட்டி, அதைத் தடுத்து உலகை மீட்டு எடுக்க, இலாபம் வருகிறது என்ப தற்காகப் புவி வெப்பத்தை உயர்த்தும் பண்டங்களை உற்பத்தி செய்யக் கூடாது என்று போராடிப் பாருங்கள்.

**அப்போராட்டத்தில் அரசாங்கங்களும் சரி! நீதிமன்றங்களும் சரி! பணியமாட்டா. அரசின் ஒவ்வொரு உறுப்பும் மிகவும் கோரமாக மக்களின் மேல் தாக்குதலைத் தொடுக்கும். ஏறு தழுவல் போராட்டத்தின் இறுதியில் தொடுக்கப்பட்ட தாக்கு தல், ஒரு சிறு பொறி மட்டுமே என்று உணரும் அளவிற்கு அடக்குமுறை மிகப் பெரும் நெருப்பாக உருவெடுக்கும்.**

**ஏறு தழுவல் போராட்டத்தில் வெளிப்பட்ட மாணவர்களின், இளைஞர்களின் ஆற்றல் எந்த விதத்திலும் போதாது. அது ஒரு சிறு பொறி மட்டுமே. பெரு நெருப்பு என்று சொல்லும் அளவிற்கு வெளிப்பட்டால் தான்-பார்ப்பன ஆதிக்க, முதலாளித்துவ அரசை எதிர்கொள்ள முடியும்.**

# பூமியைப் போன்றே 7 கிரகங்கள் விண்வெளி ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

பூமியைப் போன்றே 7 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அவை பூமியில் இருந்து 40 ஒளி ஆண்டுகள் தொலை வில் உள்ளன என்று நாசா தலைமையகத்தில் விண்வெளி ஆய்வாளர்கள் அறிவித்தனர்.

பூமியைப் போன்ற கிரகங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறியும் ஆராய்ச்சியில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. அத்துடன் வேற்று கிரகங்களில் மனிதர்கள் வாழ்கிறார்களா என்ற கேள்விக்கு விடை காண விஞ்ஞானிகள் பல ஆண்டு களாகத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். இந்நிலையில், பூமியைப் போலவே 7 கிரகங்கள் விண்ணில் சுற்றிவருவதை விண்வெளி ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறு வனம், நாசாவின் தலைமை அலுவலகத்தில் ஆய்வாளர்கள் செய்தியாளர்களிடம் அறிவித்தனர்.

பூமியில் இருந்து 40 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு நட்சத்திரத்தை 7 கிரகங்கள் சுற்றி வருகின்றன. அந்த நட்சத் திரத்துக்கு 'டிராப்ஸ்ட்-1' என்று பெயரிட்டுள்ளனர். அதைச் சுற்றி வரும் அனைத்து கிரகங்களும் பூமியைப் போலவே அளவு, வெப்ப நிலை, திரவ நிலையில் தண்ணீர், பாறைகளு டன் காணப்படுகின்றன. அங்கு மனிதர்கள் உயிர் வாழ்வதற் கான சூழல் இருப்பதாகத் தோன்றுகிறது என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த விண்வெளி ஆய்வாளர்கள் இந்த கிரகங்களைத் தரையில் இருந்தும் விண்வெளியில் உள்ள தொலைநோக்கிகள் மூலம் தொடர்ந்தும் கண்காணித்து ஆய்வு செய்வார்கள் என்று எம்.பி.சி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

புதிதாக 7 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து, "நேச்சர்" என்ற இதழில் விரிவாகத் தகவல் வெளியிடப்பட் டுள்ளது. இதுகுறித்து பெல்ஜியத்தின் லீஜ் பல்கலைக்கழக விண்வெளி ஆய்வாளரும், "நேச்சர்" இதழில் 7 புதிய கிரகங் கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்துக் கட்டுரை எழுதியவருமான மைக்கேல் ஜிலான் கூறும்போது, "இந்தக் கண்டுபிடிப்பு மிகப் பிரமாதமானது. ஒரே நேரத்தில் பூமியைப் போன்றே 7 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் மட்டும் இதைச் சொல்ல வில்லை.

அந்த ஏழும் பூமியின் அளவுக்கே உள்ளதுதான் திகைப் பாக இருக்கிறது. இந்த நட்சத்திரக் குடும்பம் மெதுவாக வளரும் தன்மை கொண்டவை. அதனால், நமது சூரியன் அழிந்தா லும் டிராப்ஸ்ட் - 1 நட்சத்திரம் பல நூற்றாண்டுகள் உயிர்ப் புடன் இருக்கும்" என்றார்.

(தமிழ் இந்து, 24-2-2017)

# மதவெறியாட்ட இந்து முன்னணி - பா.ச.க.வினரின் காமக்களியாட்டம்-நந்தினி படுகொலை

## ஒரு களவு ஆய்வு

### 1. யார் இந்த நந்தினி?

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், சிறுகடம்பூர் கிராமம், ஆதித்திராவிடர் குடியிருப்பு, அம்பேத்கர் நகர் மேற்குத் தெருவில் 18 x 16 ச.அடி பரப்புள்ள தொகுப்பு வீட்டில் வசித்த காலஞ்சென்ற கு. இராசேந்திரன் (50) - இராசகிளி (45) இணையருக்கு மூன்று பிள்ளைகள். 1. இரஞ்சினி (25), 2. இரஞ்சித்குமார் (20), 3. நந்தினி (12.5.2000). மூத்தப் பெண் உள்ளூரில் செல்வம் என்பவரை திருமணம் செய்துகொண்டு கணவருடன் வாழ்கிறார். இரண்டாவதான மகன் இரஞ்சித் குமார் 10ஆம் வகுப்பு படிப்பைப் பாதியில் விட்டுவிட்டார். 2012இல் தந்தை இறக்கவே, நந்தினியும் 9ஆம் வகுப்பில் இடையில் நிறுத்திவிட்டார். வீடு மட்டுமே இவர்களின் சொத்து. சொந்த நிலம் இல்லை. கூலி வேலை செய்தே பிழைப்பை ஓட்டிவரும் ஆதித் திராவிட ஏழைக்குடும்பம்.

### 2. அரியலூர் மாவட்டத்தில் இந்து முன்னணி :

2016 சூன் மாத வாக்கில், திருச்சி மாவட்டம், மணச்சநல்லூரைச் சேர்ந்த (வன்) அடியாள் ‘குண சேகரன்’ என்பவர், அரியலூர் மாவட்டத்தில் இந்து முன்னணிக் கொள்கையைப் பரப்பவும், ஆள்சேர்க்கவும் அவ் இயக்கத்தால் ஏவப்பட்ட ஒரு கைக்கூலி. அவர் பொன்பரப்பிக்கு வருகிறார். செயராமன் ஒரு விவசாயி. அவர் மகன் இராசசேகர். அவரை மூளைச் சலவை செய்து, அரியலூர் மாவட்ட அமைப்பாளர் பதவி தந்து காவித்துண்டு அணிவித்து, பெருமைப் படுத்துகிறார். உடனே பொன்பரப்பியில் தாமரைக் கொடியைப் பறக்க விடுகிறார்கள். இராமகோபலன், பதாகை மக்களின் கண்களை ஈர்க்கும் அளவில் வைக்கிறார்கள். பேருந்து நிறுத்தத்தில் இன்றும் காணமுடியும். அவர்களது வலையில் சிக்கியவர்கள் கீழமாளிகையிலும் இருக்கிறார்கள். பணம் இலட்சங்கள் கை மாறியதில் அவர்கள் போதையில் மிதக்க ஆரம்பித்து விட்டனர்.

### 3. இந்து முன்னணியினரின் சூட்சி வலை :

2016 நவம்பர் மாத வாக்கில் சிறுகடம்பூர், அம்பேத்கர் நகர், நந்தினி குடியிருந்த தெருவுக்கும் பக்கத்துத் தெருவுக்கும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்காகக் கீழமாளிகையைச் சேர்ந்த இந்து முன்னணியினர் இரா. மணிகண்டன், த. மணிவண்ணன், அ. திருமுருகன், சீ. வெற்றிச்செல்வன் சாலை போடத் தேவையான கருவிகள் தட்டுமுட்டுச் சாமான்கள் சிறு சரக்குந்தில் (Mini Auto) ஏற்றிக்கொண்டு 5, 6 சிற்றாள்களுடன் வந்திறங்கினர். வேலை ஆரம்பிக்கப்பட்டது. எங்களுக்கு இன்னும் சில ஆள்கள் வேலைக்குத் தேவை, வருகிறீர்களா? என வினவுகின்றனர். நான்கு பேர் சிற்றாள்களாக வேலைக்குச் செல்கிறார்கள். இதில் நந்தினியும் ஒருவர். ஐந்து நாள்கள் தொடர்ந்து வேலை நடக்கிறது. வேலை முடிவில் பேசியபடியே பணம் பட்டுவாடா செய்கிறார்கள்.



இந்தப் பழக்கத்தில் வெளியூரில் சிமிட்டி வேலை, கட்டட வேலை நடந்த போது நந்தினியையும் அவரது தோழி வீ. தேவியையும் சிற்றாள் வேலைக்கு மணிகண்டன் அழைத்துப் போகிறார். மணிகண்டன் நந்தினி மீது ஒரு கண் வைக்கிறார். தேவிக்கு இது தெரிகிறது. இவர்கள் நட்பு வளர்ந்து காதலாகிறது. சில இலட்சங்கள் பணம் தருவதாக ஆசை வார்த்தை கூறி நெருக்கமாகப் பழகி, தன் காம வலையில் நந்தினியை வீழ்த்துகிறான். ஏழை அப்பாவிப் பெண்ணும் ஏமாறுகிறாள். அவனை நம்பி தன்னை இழந்தாள். வயிற்றில் கரு வளர்ந்தது. தாய்க்கும் மற்றவர்களுக்கும் தெரியாமல்

இதை நந்தினி மறைத்தார். தேவிக்குத் தெரிந்தும் வெளியில் சொல்லவில்லை. தன்னைத் திருமணம் செய்துகொள்ளச் சொல்லி, நந்தினி வற்புறுத்துகிறாள். நீ ஒத்துக்கொள்ளாவிட்டால், காவல்துறையை அணுகி இதுபற்றிப் புகார் செய்வேன் என மிரட்டியதும், கவலைப் படாதே, எனக்கு ஒரு இடத்திலிருந்து பணம் வரும்; வந்தவுடனே, உன்னை வந்து அழைத்துப் போகிறேன்; கொஞ்சநாள் பொறுத்திரு எனப் பக்குவமாகச் சொல்லி, அவ்வப்போது அலைபேசியில் ஆசைவார்த்தைகள் கூறி நம்பவைத்து காத்திருக்கச் செய்கிறார். நந்தினி யும் காத்திருந்தாள்.

**4. நந்தினி கடத்தல் :**

29.12.2016 வியாழன் இரவு 7.30 மணியளவில் வீ. தேவி மூலம் நந்தினி வீட்டில் யார், யார் இருக் கிறார்கள் என்று விவரம் தெரிந்து கொண்டு, நந்தினி யிடம் சிறுகடம்பூர் ஏரிக்கரைக்கு தான் இருக்கும் இடத்திற்கு ''உடனே வா, திருமணத்திற்கு எல்லா ஏற்பாடும் செய்துவிட்டேன்'' என்றவுடனே, வீட்டில் அம்மா, அண்ணன், யாரும் இல்லை. வீட்டைச் சாத்தி விட்டு நந்தினி, மணிகண்டன் இருக்குமிடம் போக இருசக்கர வண்டியில் இருவரும் பறக்கிறார்கள். 'செந்து றையில் இருந்து வெள்ளூர் தமிழரசன் பேசுகிறேன் நந்தினி என்னுடன் தான் இருக்கிறாள். தேடவேண் டாம்' என்று இரவு 8 மணியளவில் குமிழியத்தில் இருக்கும் வெண்ணிலாவுக்கு ஊரையும் பேரையும் மாற்றி மணிகண்டன் செய்தி சொல்ல, அந்தப் பெண் சித்தி மகள் இரஞ்சினிக்கு இந்தச் செய்தியைச் சொல்ல வும், தாய், மூத்த மகள் இரஞ்சினி, அவரது கணவர் செல்வம் எல்லாரும் நந்தினியைத் தேடினர். மணிகண்டன் பெண்ணைக் கடத்தி விட்டான் எனத் தெரிந்து, இரும்புலிக் குறிச்சி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத் தார், அதை வாங்க மறுத்து, நாளை காலை வாருங் கள் என காவலர்கள் அனுப்பி விடுகின்றனர்.

30.12.2016 காலை 9 மணிக்குச் சென்றவர் களிடம் பெண்ணைக் 'காணவில்லை' என்றே எழுதி வாங்கிக் கொண்டு, இரசீது கொடுத்தனுப்புகிறார்கள். கடத்தல் என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்க, மணிகண்டன் தொடர்பு கொண்டு பேசிய அலைபேசி 8939439565 எண்ணைக் கொடுக்கிறார்கள். வீ. தேவியும் சாட்சி சொல்கிறாள். நீங்கள் ஊருக்குச் செல் லுங்கள். நாங்கள் தேடிப் பார்க்கிறோம். திருவரங்கம் சொர்க்கவாசல் திருவிழாவிற்கு எல்லாரும் போய்விட் டார்கள். நான் மட்டும்தான் இருக்கிறேன். மூன்று நாள் கழித்து வாருங்கள் எனக் கூறி காவலர் மணி வண்ணன் அனுப்பிவிட்டார்.

ஆனால், அன்றைக்கே கீழமாளிகை சென்று இரா. மணிகண்டனை அழைத்துவந்து விசாரிக்கின்றனர். பொன்பரப்பி இந்து முன்னணி மாவட்ட அமைப்பாளர் செ. இராசசேகர், இரும்புலிக்குறிச்சி காவல் நிலையம் வந்து ''மணிகண்டன் எங்கள் அமைப்பைச் சேர்ந்தவர். அவரை சந்தேகப்படவேண்டாம்'' என காவல்துறை யை மிரட்டி, மணிகண்டனை மீட்டுக்கொண்டு போய் விட்டார்.

**அன்றைக்கே மணிகண்டனைக் கைது செய்தி ருந்தால், நந்தினிக்குச் சாவு நேர்ந்திருக்காது.**

**5. காமக்களியாட்டமும் - கொலையும் அரங்கேறியது :**

இரும்புலிக்குறிச்சி காவல் நிலையத்தில் இருந்து வெளியேறிய மணிகண்டன், தன் நண்பர்களான த. மணிவண்ணன், அ. திருமுருகன், சீ. வெற்றிச்செல்வன் முதலான இந்து முனினணியினருடன் ஒன்றுகூடி மதுவைக் குடித்துவிட்டு தீட்டிய சதி ஆலோசனையை 30.12.2016 வெள்ளி இரவே நிறைவேற்ற முடிவு செய்துவிட்டனர்.

மறைவான இடத்திற்கு நந்தினியை கடத்திக் கொண்டு போய், நால்வரும் அவரது ஆடையை உருவி நிர்வாணப்படுத்தி வாயில் துணியைத் திணித்து வன்புணர்ச்சியில் ஈடுபட்டு குற்றுயிரும் குலையுயிரு மாக இருக்கும்போது, வயிற்றைக் கிழித்து கருப்பை யையும் எடுத்த பின்னர், பாழுங் கிணற்றில் தூக்கி வீசிவிட்டு, கட்டியிருந்த ஆடைகளோடு கருவையும் எரித்து விட்டு அவரவர் வீட்டுக்குப் போய்விட்டனர்.

**6. காவல்துறையின் அலட்சியப் போக்கு :**

**காவல்துறையினரின் அலட்சியப் போக்கால், ஏழைச் சிறுமி கொலையில் முடிந்தது. இதுவே, வசதி படைத்தவர்களாய் இருந்தால், செல்வாக்கு உள்ளவர் களாய் இருந்தால், இதே காவல்துறை அவனை விட்டிருக்குமா? உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டு, குற்றவாளிகளைப் பிடிப்பதோடு நில்லாமல், பெண்ணை யும் மீட்டுக் கொண்டு வந்திருப்பார்களே! நந்தினி காப்பாற்றப்பட்டிருப்பாரே!**

பெண்ணையிழந்த பெற்றோர் 8.1.2017இல் செயங் கொண்டம் காவல் துணைக் கண்காணிப்பாளரிடமும் 12.1.2017இல் அரியலூர் மாவட்டக் கண்காணிப்பா ளரிடமும் புகார் மனு கொடுத்தனர்.

14.1.2017இல், கீழமாளிகை அன்பழகன் கிணற் றில் நந்தினி பிணமாகக் கிடக்கும் தகவல் தெரிந்து ஓடுகின்றனர். இரும்புலிக்குறிச்சி காவல்துறை உடலைக் கைப்பற்றி அரியலூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றனர். 15.1.2017இல் பிரேதப் பரி

சோதனை நடக்கிறது. கொலையாளியைக் கைது செய் யாமல், பிணத்தை வாங்க மறுத்து, அரியலூர் பெரியார் சிலை அருகில் பல்வேறு அமைப்பினரும் கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் 17.1.2017இல் பிணத் தைப் பெற்று அடக்கம் செய்கிறார்கள். நால்வரையும் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர். பெண்ணை இழந்த பெற்றோருக்கு பல்வேறு அமைப்பினர் ஆறு தலும் தேறுதலும் சொன்னார்கள். தொல். திருமாவள வன், மு.க. ஸ்டாலின், வே. ஆனைமுத்து, பொன். இராதாகிருஷ்ணன், சீமான் முதலான தலைவர்கள் நேரில் வந்து ஆறுதல் கூறினர்.

**7. நீதி வேண்டும் :**

இந்து முன்னணியினர் வடக்கே கரசேவையின் பேரால் பாபர் மசூதி இடிப்பு தொடங்கி, பெருந்தலைவர் தில்லியில் காமராசர் வீட்டுக்குத் தீ வைத்து கொலை செய்ய முயன்றது முதலான பல்வேறு பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடுவதும், அரியலூர் மாவட்டத் தில் பெண் கற்பழிப்பு, கொலை போன்ற காரியங்களில் ஈடுபடுவதும் அடாத செயல்கள். இதற்கு மன்னிப்பே கிடையாது. அப்படிப்பட்ட கொடியவர்கள் யாராய் இருந் தாலும், எந்த அமைப்பினராயினும் சிறிதும் கருணை காட்டாது-பாரபட்சம் பார்க்காமல் இக்கொலைக்கு காரணமானவர்களையும், அரசு உடனே கைது செய்ய வும், தக்க தண்டனை வழங்குவதன் மூலமே நந்தினி யை இழந்த குடும்பத்திற்கு நீதி கிடைக்கவும் தகுந்த நிவாரணம் வழங்குவதுமே நியாயமாகும்.

**வள்ளலாரும் காந்தியும் பெரியாரும் அம்பேத்கரும் காமராசரும் வாழ்ந்த மண்ணில் இப்படி ஒரு அநீதியான செயலா? இது தகுமா? இது முறையா? இது தருமம்தானா?**

**9. நீதிபோதனை - அரசுக்கு வேண்டுகோள் :**


பள்ளியில் தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை நல்ல நீதிநெறிகளைப் பாடமாக வைத்து, பிஞ்சு மனங்களில் நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டும். மதுவை அறவே ஒழித்து, வள்ளுவம் தலைதூக்க அரசு உடனடி கவனம் செலுத்தி, கட்டாயப் பாடமாக்க வேண்டும். இல்லையேல் எதிர்கால இளந்தலைமுறை அடியோடு சீரழிந்து போகும் ஒரு அவல நிலையே தமிழ்நாட்டில் உருவாகும். பொறுப் புள்ள பெற்றோர்களும், கற்ற அறிஞர்களும் மக்கள் தலைவர்களும் இதுபற்றிச் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டும். இதுவே இப்போதைய உடனடி தேவை.

**- இரா. கலியமூர்த்தி**

மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க. அரியலூர்

## காஞ்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் செயலாற்றிய மூத்த உறுப்பினர் மா.பெ.பொ.க. மாவட்டப் பொருளாளர் இரா. நாராயணமூர்த்தி தந்தையார்

# இரா. இராதாகிருஷ்ணன் மறைவு



காஞ்சி மார்க்சியப் பெரி யாரியப் பொதுவுடைமைக் கட்சி மாவட்டப் பொருளாள ரும், நம்மோடு இருபத் தைந்து ஆண்டுகள் களப் பணி ஆற்றிவருபவரும் தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் சுயமரியா தைத் திருமணம் செய்து கொண்டவருமான தோழர் இரா.நாராயணமூர்த்தி தந்தையார் இரா. இராதா கிருஷ்ணன், எண்.7B, பாண்டவ சன்னதித் தெருவில் அவர்தம் இல்லத்தில் சில நாள்கள் நலிவுற்று, 27.2.2017 திங்கள் மாலை 4.45 மணியளவில் 78ஆம் அகவை யில் மறைவுற்றார்.

இரா. இராதாகிருஷ்ணன் தி.மு.க.வில் மூத்த உறுப்பினர். வாழ்க்கையில் எளிமையைக் கடைப் பிடித்து, கடுமையாக உழைத்துத் தன் அய்ந்து பெண் மக்களை வளர்த்தெடுத்தவர். கட்சியில் உண்மை யாகவும், நேர்மையாக இருந்து செயல்பட்டவர். பெரி யார் கொள்கைப் பற்றாளர். தன் மகன், மா.பெ.பொ. கட்சியில் இணைந்து செயல்படுவதைக் கண்டு, என்னிடம் பெருமிதமாகக் கூறுவார்.

அன்னாரின் கண்கள் தொண்டை நகர அரிமா சங்கம் சார்பில் தானமாக வழங்கப்பட்டது. 28.2.2017 அன்று மா.பெ.பொ.க. தோழர்கள் சி. நடராசன், மு. செயப்பிரகாசு, தீ. கோபாலகிருட்டிணன், மா. கோதண்ட பாணி, ச. சிவக்குமார், ஆ. சோதி, இரா. ஆதிகேசவன், இரா. இராசசேகர், ப. வடிவேலு, கீழம்பி வேதகிரி மற்றும் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் சி.வி.எம்.அ. சேகர், நகரச் செயலாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், நாத்தி கம் நாகராசன், பி. ராஜு, முற்போக்கு சமூகநீதிப் பேர வைத் தோழர் க. கோதண்டம், உலகவளி, காஞ்சி அமுதன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மாலை 5.00 மணியளவில் சர்வதீர்த்தக் குளக்கரை இடுகாட்டில் அவரது உடல் எரியூட்டப்பட்டது.

அன்னார் மறைவு கருதித் துயருறும் அவர்தம் மக்கள், மகன், மகள்கள், மருமகன்கள், உறவினர்கள் அனைவருக்கும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சி சார்பிலும், சிந்தனையாளன் ஆசிரியர் குழு சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத் தையும் தெரிவித்துக் கொள்கிறது.

செய்தி : சி. நடராசன்

# ஒவ்வொரு பெண்ணும் பெரியாராகும்போது ...!

- ஜெயராணி

நவீன இந்தியாவின் பெண்கள், முன்னேற்றத்தின் படிகளில் வேக மாக ஏறிக்கொண்டிருக்கும் காலமிது. கடந்த தலைமுறைகளைவிட பெண்கள் அதிக அளவில் கற்றறிந்தவர்களாக இருக்கின்றனர். தம் தாய், தாயின் தாயைவிடப் பரவலாகப் பொருளாதார சுதந்தரம் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அன்றிருந்ததைப் போல வீடுகளுக்குள் முடங்கி இல்லாமல் சுதந்தரமாக வலம்வர முடிகிறது. தம் தேவைகளை, பிரச்சனைகளை, கருத்துக்களை உரக்கச்சொல்லும் உரிமைகள் சாத்தியப்பட்டிருக்கின்றன. ஆனால் பண்பாட்டு ரீதியாகப் பெண்மீது கட்டமைக்கப்பட்ட பிம்பம் மாறியிருக்கிறதா என்றால் இல்லவே இல்லை என்பதே கசப்பான பதில்.

இத்தனை முன்னேறிய காலத்திலும் பெண் என்பவர், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களோடு இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது; ஆணை விஞ்சிவிடாத அடக்கஒடுக்கத்தோடு இயங்க வலியுறுத்தப்படுகிறது; வன்முறைகளாலும், பாலியல் சீண்டல்களாலும் கட்டுப்படுத்தி வைக்கவேண்டும் எனக் கற்பிக்கப்படுகிறது.

சுதந்திரமான பெண்கள் ஆபத்தானவர்கள்; அவர்கள் ஆணை அவனது அரியணையிலிருந்து வலுக்கட்டாயமாக இறக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதாக அச்சுறுத்தல் செய்யப்படுகிறது. அதன்வழியாகவே இந்த முன்னேறிய காலம், பழங்காலப் பிற்போக்குத் தனங்களை மீட்டுருவாக்கமும் மறு உற்பத்தியும் செய்து பெண்களை மேலும் சிறைபடுத்த விழைகிறது.

இந்த ஆபத்தை முன்னேறிய / நவீன காலத்தின் பெண்கள், எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? இக்கேள்விக்கான பதிலைக் கண்டறியுமுன்னர், முன்னேற்றம் மற்றும் நவீனம் என்ற பதங்களுக்கான சரியான அர்த்தத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக முன்னேற்றம் என்பது கல்வி மற்றும் பொருளாதாரம் சார்ந்ததாகவே அளவிடப்படுகிறது. அவ்வகையில் பார்த்தால், கல்வி கற்ற பெண்களின் எண்ணிக்கையும், பொருளீட்டும் பெண்களின் எண்ணிக்கையும், அவர்கள் ஈட்டும் பொருளின் அளவும் கணிசமான வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்பது உண்மையே.

**ஆனால், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றத்தின் சிறு கூறுதானே தவிர, அதுவே முன்னேற்றம் ஆகாது. ஏனென்றால் இந்த வளர்ச்சிகளால் பெண்களுக்குச் சமத்துவத்தை உறுதிப்படுத்தவியலாது, சுயமரியாதையை வழங்கவியலாது, பிற்போக்குத் தனங்களில் இருந்து விடுவிக்கவியலாது. இந்த வளர்ச்சி, அடக்குமுறை மற்றும் வன்முறைகளில் இருந்து பெண்களை ஒருபோதும் மீட்பதில்லை.**

கல்வியும் பொருளாதாரமும் மறுக்கப்பட்டு வீடுகளுக்குள் முடங்க நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்களைப் போலவே கல்வியும் பொருளாதார சுயச்சார்பும் கைவரப்பெற்ற இந்தியப் பெண்கள், தினம் தினம் பாலியல் வன்முறைகளுக்கும் பிற கொடூரமான குற்றங்களுக்கும் பலியாகும் சமூக எதார்த்தமே இதற்கு சான்று.

தொழில்நுட்பத்திலும் கல்வியிலும் எவ்வளவு முன்னேற்றத்தைக் கண்டாலும் இந்நாடு சக பாலினத்தின் மீதான தனது வன்மத்தை குறைத்துக்கொள்ளவே இல்லை என்பதிலிருந்து தான் முன்னேற்றம் என்பதன் பொருளை நாம் விளங்க முற்படவேண்டும். பாருங்கள்... எங்கேயும் பெண்கள்; எல்லாத் துறையிலும் பெண்கள். அவர்களுக்குதான் வாய்ப்புகள் கிடைக்கின்றன, அவர்களுக்குதான் தொழில்முறை வளர்ச்சி சிறப்பாக இருக்கிறது என வாதிடுவோர் அதிகம். இதில் உண்மை இருந்தாலும், இதன் மற்றொரு பக்கத்தையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும். தேசியக் குற்றப்பதிவு ஆணையத்தின் 2015 ஆம் ஆண்டைய அறிக்கை கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் பெண்கள் மீதான வன்முறை இருமடங்கிற்கும் மேல் அதிகரித்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, முந்தைய பத்தாண்டைவிட, 2004-2015 வரையிலான பத்தாண்டுகளில் சுமார் 20 லட்சம் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்திருக்கின்றன. அதில் சுமார் 10 லட்சம் குற்றங்கள் கணவன் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் நிகழ்த்தப்படுவதாக இப் புள்ளிவிபரம் குறிப்பிடுகிறது. ஆக, கல்வி அறிவோ, பொருளாதாரச் சுயச் சார்போ பெண்களை வீடுகள் மற்றும் வீதிகளில் நடந்தேறும் அடக்குமுறைகளிலிருந்து விடுவிக்கவில்லை.

தகவல் தொழில்நுட்பத்துறை திறந்து விட்ட வேலை வாய்ப்புகளின்படிப் பார்த்தால் இதற்கு முந்தைய தலைமுறைப் பெண்களை விடவும் இந்தத் தலைமுறைப் பெண்களுக்கு, கடந்த பத்தாண்டுகள் பொருளாதார ரீதியாக ஒரு பொற்காலம். பெண் கல்வி குறித்த விழிப்புணர்வு அதிகரித்த காலகட்டமாகவே அதைக்

கருத வேண்டும். தகுதியான மாப்பிள்ளைக்காக படிக்கவைக்கப்பட்ட பெண்கள், கை நிறைய சம்பாதிப்ப தற்காகக் கல்லூரிகளுக்கு அனுப்பப்படும் சமூக மாற்றம் நிகழ்ந்த தலைமுறை இது. இத்தகைய மாற்றம் நடுத்தர வர்க்கப் பெண்களிடையே பொருளாதார சுயச் சார்பை உருவாக்கியது. ஆனால் ஏட்டுக் கல்வியோ பொருளாதாரமோ எவ்வகையான பாகுபாட்டையும் அழித்துவிடாது என்பதைத்தான் இங்கே பெருகிக் கொண்டே இருக்கும் குற்றங்களும் வன்முறைகளும் நிரூபிக்கின்றன.

முன்பு வீட்டிலிருந்து குடும்பத்தை கவனித்துக் கொண்ட பெண்கள், இன்று பொருளீட்ட வேலைக்குச் செல்லுமளவிற்குக் காலமாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஆனால், அவர்களின் குடும்பச் சுமையைப் பங்கிட்டுக் கொள்ள ஆண்கள் தயாராக இல்லை. வரதட்சணை வாங்காமல் எத்தனைபேர் திருமணம் செய்து கொள்கின்றனர்? கணவன் தான் என்றாலும் முடியாத பொழுதுகளில் உடலுறவை மறுக்கும் உரிமை எத்தனை பெண்களுக்குக் கிடைத்திருக்கிறது? கணவனால் பலாத் காரம் என்பது இந்தியாவில் இன்றளவிலும் சர்வசாதா ரணம்! கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தைக் கண்டறிவது குற்றம் என்றாலும் எப்படியாயினும் தெரிந்து கொள்ளத் துடிக்கின்றனர். காதலை நிராகரித் தால் ஒருதலைக் காதல் கொலை; காதலை ஏற்றுக் கொண்டால் கவுரவக்கொலை, பாலியல் சீண்டல்கள், குடும்பவன்முறைகள் என, எது தான் மாறியிருக்கிறது? இந்த அத்தனை கொடுமைகளின் சமீபத்திய புள்ளி விபரங்களை சோதித்துப் பாருங்கள்! எதிலுமே பின்ன டைவு இருக்காது.

ஐ.ஏ.எஸ் அதிகாரி, மருத்துவர், விஞ்ஞானி, மாநிலத்தை ஆளும் முதலமைச்சர் என எத்தகைய உயரத்திற்குப் பறந்தாலும் பெண்ணை ஒரு பாலியல் பண்டமாகவும் அடிபணிய வேண்டியவளாகவும் இச்சமூகம் நடத்துகிறது. இதற்கான காரணமென்ன என்பதை ஆராய்ந்து தீர்வை எட்ட வேண்டிய கால நெருக்கடிக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். சுதந்தரத்தைப் பெற்றுவிட்ட தாக நம்பும் பெண்கள்தாம் ஏன் மீண்டும் மீண்டும் தாக்கப்படுகிறோம், சீண்டப்படுகிறோம், சுரண்டப்படு கிறோம் என்பதற்கான விடை தெரியாமல் விழிக்கின்ற னர். பதிலாக ஆணாதிக்கம் மாறவில்லை, ஆண்கள் திருந்தவில்லை என ஆண்களுக்கு எதிராகக் களமிறங்கு கின்றனர். இது ஆண் பெண் நல்லிணக்கத்தை மென் மேலும் பாழ்படுத்தி, பிரச்னையைத் தீவிரப்படுத்து கிறது.

33% அரசியல் ஒதுக்கீடு, 100% கல்விப் புரட்சி, 50% பொருளாதாரப் புரட்சி என பெண்கள் முன்னேற்றத் துக்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால், சமூகப் புரட்சியில் ஒரு சதவீத முன்நகர்தலுக்கான இலக்கையேனும் நாம் கொண்டிருக்கிறோமா? நிச்சயமாக இல்லை. கல்வி, பொருளாதார, அரசியல் தளங்களில் பெண்கள் தமக்கான இடத்தைச் சம அளவில் பெறுவ தென்பது அவர்களுக்குச் சுதந்திரத்தை உறுதி செய்து தரும். அவ்வாறே தந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமத்துவத்தை? இம் மூன்று நிலைகளிலும் அடைந்த விழிப்புணர்வும் முன்னேற்றமும் பெண்களுக்குச் சமத்துவத்தை உறுதி செய்து தர முடியவில்லை. அது சமூகப் புரட்சியால் மட்டுமே சாத்தியப்படும்.

சுதந்தரத்தைப் பெறுவதாலேயே தமக்கு சமத்துவம் கிடைத்துவிடுவதாகப் பெண்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அதனால் பெண்ணியவாதங் கள் அனைத்தும் சுதந்தரத்தை மையப்படுத்தியதாகப் பேசவும் எழுதவும் படுகின்றன.

உண்மையில் சமத்துவம் இருந்தால் மட்டுமே சுதந்தரம் அர்த்தப்படுகிறது. சமத்துவமில்லாத இடத்தில் கிடைக் கும் சுதந்திரம் ஆபத்தானதும் கூட! மருத்துவ மாணவி நிர்பயா இரவுப் பொழுதில் தனது நண்பருடன் பயணிப் பதற்கு தனக்கு எவ்வித தடையுமில்லை என நினைத் தார். அதற்கான சுதந்தரம் தனக்கு இருப்பதாக நம்பி னார். ஆனால், மணமாகாத பெண் அதிலும் ஓர் அந்நிய ஆணுடன் இரவுப்பொழுதில் வெளியே செல்ல அனுமதி யில்லை என்ற பாடம் கொடூரமான கொலையின் மூலம் அனைத்துப் பெண்களுக்குமான எச்சரிக்கையாக்கப் பட்டது. இவ்வாறே காதலிக்கத் தனக்கு உரிமை இருப்ப தாக நம்பும் பெண்கள் ஆணவக் கொலைக்கு பலியா கின்றனர். காதலை மறுக்க தனக்கு உரிமையிருப்ப தாக நம்பும் பெண்கள் ஒருதலைக் காதலர்களால் கொல்லப்படுகின்றனர். என்ன வேண்டுமானாலும் படி, எவ்வளவு வேண்டுமானாலும் சம்பாதி ஆனால் இங்கே பெண்ணுக்கென விதிக்கப்பட்ட எந்த விதிமுறையை யும் மீற நினைக்காதே, எந்த எல்லையையும் தாண்ட முயலாதே என்ற சட்டம் பல நூற்றாண்டுகளாய் அமலில் இருக்கிறது.

சமத்துவத்தை விதைப்பதற்கான சமூக மாற்றம் ஏட்டுக் கல்வி பரவலாக்கத்தாலோ, சில ஆயிரங்களைச் சம்பாதிப்பதாலோ வந்து விடாது என்ற சமூக அறிவைக் கால் நூற்றாண்டுகால உலகமயமாக்கல் அனுபவத் தின் விளைவாக நாம் பெற்றாக வேண்டிய கட்டாயம் உருவாகி இருக்கிறது. படித்த சமூகம் தனது முந்தைய தலைமுறையினர் கொண்டிருந்த மூட நம்பிக்கை களையும், அடிமை - ஆதிக்கக் கருத்தியல்களையும், பிற்போக்குத் தனங்களையும் விட்டொழித்து ஓரடிகூட முற்போக்கை அடையவில்லை. அதுகூடப் பரவாயில்

லை, கல்வியறிவு மற்றும் தகவல் தொழில் நுட்பத்தின் உச்சபட்சப் பலன்களை அனுபவிக்கும் இந்த தலை முறை அறிவியல் ஆற்றல் அனைத்தையும் கொண்டு அத்தனை பிற்போக்குத்தனங்களையும் நவீனப்படுத்தி நியாயமும்படுத்துகிறது. ஜோசியம் கம்ப்யூட்டர் ஜோசிய மானதைப்போல, நல்லநேரம் பார்த்து சிசேரியன் செய்யப்படுவதைப்போல, கணினிக்கு ஆயுதபூஜை செய்வதைப்போல, எல்லா நவீனங்களையும் முன்னேற் றங்களையும் தனது பிற் போக்குச் சட்டகத்திற்கு இழுத்து அடைத்து கலாச்சாரம் என்ற பெயரில் கட்டிக் காக்கும் சமகால அவலம் பரவி நிற்கிறது. இந்த மூட நம்பிக்கைகளின் கொடூர நீட்சியாக, பெண்ணை ஒடுக் கும் சாதியமும் மதவாதமும் ஆணாதிக்கமும் மீட்டுரு வாக்கம் செய்யப்படுகின்றன.

மநுநீதி வலியுறுத்திய அதே விதிமுறைகளை நச்சுக் கிருமிகளைப்போல எங்கெங்கும் பரவி இருக்கும் இந்துத் துவவாதிகள் புதிய சட்டங்களாக முழங்கத் தொடங்கி இருக்கின்றனர்.

இந்துத்துவ அமைப்புகளையும் கட்சிகளையும் சேர்ந்த வர்கள் இத்தேசம் விட்டொழித்த பல ஆணாதிக்கக் கருத்தியல்களுக்கு மதத்தின் பெயரால் புத்துயிரூட்டும் வேலையைச் செய்து கொண்டிருக்கின்றனர். பெண்கள் வெறும் மனைவியராக இருக்க, ஆண்கள் மட்டுமே வேலைக்குச் செல்லவேண்டும். இதிலிருந்து விலகும் பெண்களை ஆண்கள் விட்டொழிக்கலாம் என்று சொன்ன மோகன் பகவத் மநுநீதியின் பெண்ணடிமைத் தனத் தை இந்தியாவின் பண்பாடாக மாற்றப்படாத பாடுபடு கிறார்.

சுதந்தரமாக உடை அணிவது தொடங்கி இருட்டிய பின் வெளியே இருப்பது வரை எல்லாமே புதிதாகக் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. இந்து வெறியர்களால் தொடர்ச்சியாக விடுக்கப்படும் மிரட்டல்கள், தன் பெண் பிள்ளைகளுக்கு ஓரளவுக்கு சுதந்தரம் கொடுத்திருந்த பெற்றோருக்கு கலக்கத்தை உண்டாக்கியது. பெண் குழந்தைகளை சுதந்தரமாக வளர்க்கவேண்டுமென பெற்றோர் நினைத்தாலும் சமூகச்சூழல் அதற்கு ஒத்து ழைக்கவில்லை. கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் பெண்களுக்குச் சுதந்தரத்தை அளிக்கத் தயாராக இருக்கும் குடும்பங்கள் தனக்கான துணையை தேர்ந் தெடுக்கும் சுதந்தரத்தைப் பெண்களுக்கு வழங்கத் தயாராக இல்லை. சாதி மறுப்புத் திருமணம் செய்த கவுசல்யாவின் கண்ணெதிரே அவரது கணவர் சங்கர் வெட்டிச் சாய்க்கப்பட்டார். சாதி, மதக் கோட்பாடுகள் பெண்ணை அடிமைப்படுத்துவதன் மூலமே கட்டிக்காக் கப்படுகின்றன. ஆண் அதன் கருவி. அவ்வளவே. ஆக, பாலினச் சமத்துவத்தை நிலைநிறுத்த விரும்பும் சமூகம் அடிப்படையில், சாதியத்தையும் மதவாதத் தையும் அழித்தொழிக்க வேண்டும். அதுதான் இங்கே உண்மையான சமூகப் புரட்சியாகிறது.

இந்த மண்ணில் பெரியார் நிகழ்த்திக் காட்டிய சமூகப் புரட்சியும் அதுதான். அவர் பெண்ணடிமைத் தனத்திற்குக் காரணமாக ஆண்களைப் பழிக்கவில்லை. மதக் கோட்பாடுகளையே சாடினார். இந்துமதம் பெண் களை எவ்வாறு இழிவுபடுத்துகிறது, இராமாயணம் மகாபாரதம் போன்ற புராணக் கதைகள் எவ்வாறு அடிமைப் பெண்களை முன்னுதாரணமாக்குகின்றன, கடவுள் குறித்த கதைகளின் மூலமாகப் பெண்கள்மீது நிறுவப்படும் ஆபாசம் என அவர் எல்லாவற்றையும் அம்பலப்படுத்தினார். மதங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பகுத்தறிவையும் சுயமரியாதை யையும் எட்டுவது ஒன்றே பெண் விடுதலைக்கான ஒரேவழி எனசூளுரைத்தார்.

பெரியார் ஆற்றியதில் கால்வாசியளவுகூட இவ்வுண் மையை இச்சமூகத்திற்கு உரக்கச் சொல்லும் தலைவர் களோ இயக்கங்களோ இன்றில்லை. அதனாலேயே கல்வியறிவு பெற்ற பெண்கள் மதப் பற்றுள்ளவர் களாகத் தம்மைக் காண்பித்துக்கொள்வதை இந்தியப் பண்பாடு என்பதோடு சேர்த்துக் குழப்பிக்கொண்டனர். மதப்பற்று, சாதிப் பிடிப்பு எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு, ஆணாதிக்கம் மட்டும் வேண்டாம் என்றால் எப்படி? மதமிருந்தால், சாதியுமிருந்தால் இலவச இணைப் பாக ஆணா க்கமும் கூடவே வரும் என்பதுதான் விதி. தாய்வழிச் சமூகம் அழிக்கப்பட்ட புதிய கற்காலத்தில் ஆணாதிக்கத்தை நிறுவ மதமே உதவியது. மதத்தைப் பாதுகாக்க ஆணாதிக்கம் ஒரு கருவியாக்கப்பட்டது. உண்மை இப்படியிருக்க மதக்கோட்பாடுகளை நேர்மறை யானதாகவும், ஆணாதிக்கத்தை எதிர்மறையான தாகவும் சித்திரித்து ஒன்றைக் காத்து மற்றது அழிய வேண்டுமென நினைப்பதை விடவும் அறியாமை வேறெதுவுமில்லை.

பெரியார் இதைத்தான் உறுதியாக எடுத்துரைத்தார். ஆனால், அரை நூற்றாண்டுக்காலம் தெருத்தெருவாக அலைந்து பெண் விடுதலையை மையப்படுத்தி அவர் செய்த பகுத்தறிவுப் பிரச்சாரத்தின் பலன் அடுத்த தலை முறைக்குக்கூட கடத்தப்படவில்லை. ஆண்களைவிடவும் பெண்கள் கடவுள் நம்பிக்கையும் மதப்பற்றும் அதிகம் கொண்டிருக்கக் கற்பிக்கப்படுகின்றனர் என்றாலும் கல்வியின் பயனால் சிந்திக்கும் திறன் அதிகரித்திருக்கு மானால் இந்நேரம் அது தகர்க்கப்பட்டிருக்க வேண்டும். வீட்டுக்குள் முடங்கியிருந்த பெண்கள் எப்படிப் பிற் போக்காக இருக்கவைக்கப்பட்டனரோ அதை போலவே தான் பெரும் சாதனைகளைப் புரியும் பெண்களும்!

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாற்றுச் சாதனை படைத்த பி.வி. சிந்து ஊர் திரும்பிய கையோடு திருப்பதிக்கு வந்து வெங்கடேசுவரனுக்குக் காணிக்கை செலுத்தினார். இதுபோன்ற பெண்கள், இது போன்ற நடவடிக்கைகளால் இந்த சமூகத்திற்கும் சக பெண்களுக்கும் சொல்லவரும் செய்தி என்ன? பொதுவாக மதப்பற்று எல்லாரையும் பலவீனமானவர்களாகவே வைத்திருக்கும் என்பதே உளவியல்.

பலவீனமே அடிமைத்தனத்திற்கு வழி வகுக்கிறது எனும்போது இந்தத் தொடர்ச்சியைப் புரிந்துகொள்ள மறுக்கும் பெண்கள் சாதித்தாலும் அது அடிமையின் சாதனையாகவே அடையாளம் பெறுகிறது. மத நம்பிக்கை கொண்ட பெண்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்னை வரும்போது பெரும்பாலும் எதிர்த்து நிற்காமல், தப்பிக்கும் வழி அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அவர்களது மதம் அவர்களுக்கு அதையே கற்பிக்கிறது.

பகுத்தறிவு மற்றும் சமத்துவப் பரவலாக்கம் இங்கே நிகழவேண்டுமெனில் சாதி மதத்திற்கு எதிரான சமூகப் புரட்சி நடந்தாக வேண்டும். ஆணாதிக்கத்தை ஆணின் ஆதிக்கமென சுருக்கிப் பார்க்கும் பார்வையில் இருந்து விலகி, அடிப்படையில் மதக் கோட்பாடுகளாலேயே அது வளர்த்தெடுக்கப்படுகிறது என்ற சமூகப் புரிதலை எட்டவேண்டும். இந்தியச் சமூகத்தின் பெரும்பான்மை இந்துக்களுக்கு அவர்களது மதம், சாதி மற்றும் ஆணாதிக்கம் என இரண்டு கருவிகளாலேயே இயங்குகிறது என்பது நன்கு தெரியும். அதனால்தான் அவ்விரண்டையும் பலவாறான வன்முறைகள் மூலமாக அதை கட்டிக் காத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இந்தியச் சமூகத்தின் ஈடற்ற பெண்ணுரிமைப் போராளியான பெரியார், ஆணாதிக்கத்திற்கு ஆண்களே காரணம் என்றும், அதனால் ஆணாதிக்கத்தை ஒழிக்க வேண்டுமெனில் ஆண்களை ஒழிக்கவேண்டும் என எங்கேயுமே குறிப்பிடவில்லை. ஆனால், இன்றைய பெண்ணியப் புரிதல் அவ்வாறான குறுகிய விவாதங்களுக்குள் சிக்கி உழல்கிறது. அதோடு, இன்றைய படித்த பெண்கள் தம்மை தீவிர மதப் பிடிப்பாளர்களாக முன்னிறுத்தியபடியே ஆணாதிக்கத்தை வேரறுத்து விட முடியுமென நம்புகின்றனர். அதுதான் வேதனையான வேடிக்கை.

‘தலைமுடியை வெட்டியெறியுங்கள்; அலங் காரத்தை நிறுத்துங்கள் உடைகளை மாற்றுங்கள் தேவைப் பட்டால் கருப்பையையும் அறுத்தெறியுங்கள்’ என்ற பெரியாரின் அத்து மீறல்கள் அனைத்தும் மதக் கட்டுப்பாடுகளிலிருந்து பெண்களை விடுவிக்கும் முயற்சியே. ஏனென்றால் இவையனைத்துமே ஓர் அடிமைப் பெண்ணுக்கான அறிகுறிகள்.

இந்துக்கள் அதிகரிக்க, இந்துப் பெண்கள் நான்கிற்கும் மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக் கொள்ள வேண்டுமென மோகன் பகவத் போன்றவர்கள் இந்த முன்னேறிய காலத்திலும் உளறுவார்கள் என்ற அவதானிப்பில்தான் கருப்பையே வேண்டாம் உங்களுக்கு எனக் கோபப்பட்டார் பெரியார். இந்துமதத்தைக் காக்க இந்துப் பெண்கள் பிள்ளைப் பெற்றுத் தரும் எந்திரமாக இருக்க வேண்டுமென்ற கருத்து ஆணாதிக்கச் சிந்தனையா, மதஆதிக்கச் சிந்தனையா? எதிர்க்கப்பட வேண்டியது மதமா, ஆணா? எது?

**பெண்ணை வெறும் உடலாக்கி, அதையே சிறையாக்கியதுதான் மதம் மற்றும் ஆண்களின் சூழ்ச்சி. அதனாலேயே பெண்கள் உடல் குறித்த சிந்தனைகளைத் துறக்க வேண்டுமென எனப் பெரியார் வலியுறுத்தினார். பெண்கள் மதிப்பற்றுப் போவதற்கும், அவர்கள் வெறும்போகப் பொருள்தான் என்று ஆண்கள் கருதி நடப்பதற்கும் முக்கிய காரணமே பெண்கள் ஆபாசமாகத் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதேயாகும். [விடுதலை 15.6.1943].**

தங்களை நாகரிக நாரிமணிகள் என்று கருதிக்கொள்ளும் பெண்கள் எல்லாம்கூட, நல்ல முறையில் ஆடை அலங்காரம் செய்து கொள்வதையும், நைசான நகைகள் போட்டுக் கொள்வதையும், சொகுசாகப் பவுடர் பூசிக் கொள்வதையும் தான் நாகரிகம் என்று கருதி வருகிறார்களே தவிர - ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ்வதுதான் நாகரிகம் என்பதை உணர்ந்திருக்கவில்லை (விடுதலை 11.10.1948) என, உடலரசியலை பெரியார் அளவுக்குப் புறக்காரணிகளோடு பிணைத்து எடுத்துரைத்தவர் யாருமில்லை. திருமணம் குறித்தும் பாலியல் சுதந்தரம் குறித்தும் இன்று பேசும் யாரையும் விட மிகமிக முன்னோக்கி சிந்தித்தவர்.

இந்துமதம் ஒருபக்கம் பெண்ணுடலைத் தீட்டாக்கி மறுபக்கம் பெண்ணைப் புனிதமாக்கிச் செய்துகொண்டிருந்த குழப்படிகளிலிருந்து பெண்களை வெளியே இழுத்து சுயமரியாதை எனும் தெளிவை விதைத்தவர். கொண்டாடுவதற்கு உடலில் ஏதுமில்லை என்ற அவரது நிலைப்பாட்டிலிருந்து விலகி, நவீனப் பெண்ணியவாதிகள் உடலைக் கொண்டாடத் தலைப்பட்டனர். உடலைக் கொண்டாடுதல் என்பது ஓர் ஆண் மனநிலை.

பெண்ணியப் போராளிகள் உடலைப் போற்றி எழுதத் தொடங்க ஆணுலகம் அதை ரசிக்கத் தொடங்கியது. நம் வேலையைப் பெண்களே பார்க்கின்றனர், பரவாயில்லை என வேடிக்கை பார்க்கத் தொடங்கினர்.

உடலைக் கொண்டாட வேண்டுமா? கடக்க வேண்டுமா என்றால் கடக்க வேண்டும் என்பதே விடுதலைக்கான பதில். உடலைக் கொண்டாடுதல் ஓர் அகவயப்பட்ட நிலை. ஆனால், கடத்தல் என்பது புறவயப்பட்ட போர். ஆம், அதுவொரு, சமூகப் போர். அந்தப் போரை நிகழ்த்தாமல் பெண்ணியம் உடலைக் கொண்டாடுதல் என்ற சிற்றின்பத்தில் நிம்மதியடைந்திருக்கிறது.

**இந்து மதத்தின் வருணாசிரமம் பெண்களை சூத்திரர்களாகவே கருதுகிறது. இன்றும் பெண் ஒரு தீட்டுப் பிறவிதான். 70 ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மதத்தை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப்போட்டுப் பெண்ணடிமைத் தனத்திற்கான காரணங்களின் மீது வெளிச்சம் பாய்ச்சிய பெரியார், நாகரிகச் சமூகத்தின் தந்தை என எக்காலத்திலும் சொல்லலாம்.**

ஆனால், நாகரிகம் என்ற சொல்லுக்கான விளக்கம் இங்கே திரிபட்டுக் கிடக்கிறது.

பாரம்பரியப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு சம கால மாற்றங்களுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதலே நாகரிகம் என்ற சொல்லுக்கான விளக்க மாக முன்வைக்கப்படுகின்றது.

இந்த விளக்கத்தை அப்படியே விழுங்கிக் கொண்ட வர்கள் மேற்கத்திய உடை அணிவதையும், பேசுவ தையும், கணினியைக் கையாள்வதையும், செல்போனில் சுழல்வதையும், மால்களுக்குப் போவதையும், குளிர் பானங்கள் குடிப்பதையும் நாகரிகம் என்றாக்கி, தம்மை முன்னேறியவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். உண்மையில் நாகரிகமடைதல் என்பதற்கான விளக் கம் வேறு!

**முந்தையத் தலைமுறைகளில் பின்பற்றப்பட்ட பிற் போக்குக் கருத்தியல்களைக் கைவிட்டு ஒரு சமூகம் பண்படுதலே நாகரிகம். மனித அறம் குறித்தும், சக மனிதர் குறித்தும் விழிப்போடிருந்து எதிர்காலத் தலை முறை பண்போடு வாழ வழியமைத்தலே நாகரிகத்தின் பயன். கடந்த காலத்தின் கொடுமைகளையும் மூடத் தனங்களையும் கேள்விக்குட்படுத்தாமல் வெறுமனே உடைகளில் புரட்சி செய்யும் சமூகத்தை ஒருபோதும் நாகரிகமானதாகக் கருதமுடியாது.**

**பெண்ணை மதச் சட்டகத்திற்குள் அடைத்து வைத்திருக்கும் வரையில்தான் ஆணாதிக்கம் இங்கே பிழைத்திருக்கும். ஆக, மதத்தையும் சாதியத்தையும் வேரறுப்பதில் ஒவ்வொருவரும் / ஒவ்வொரு பெண்ணும் பெரியாராகும்போது ஆணாதிக்கமென்ன, அத்தனை ஆதிக்கங்களும் தகர்ந்து விழும்.**

**இந்த விழிப்புணர்வும் புரிதலுமே இங்கே வளர்த் தெடுக்கப்பட வேண்டும். அதுவொன்றே பெண்களுக் கான விடுதலையை உறுதிப்படுத்தும்.**

# காலம் கடந்த வழக்கு

அன்றொரு நாள் சிலம்பில்லா கண்ணகியாய் சீதாதேவி
அடுக்கடுக்காய் குற்றச்சாட்டுகள் அயோத்தி மீது
அரசவை வழக்குகள் அத்துப்படி ஆனதாலே
அரசியவள் தன்வழக்கை தானே எடுத்துரைத்தாள்

தரணிபுகழ் தசரதனுக்கு தக்கமனைவி மூவரிருக்க
தினமொரு தாரமென அறுபதனாயிர மெதற்கு?
திக்கெங்கும் திட்டுகள் தீராத வேதனை
தீஞ்சொற்கள் வாரிசுகளைத் தீப்பந்தாய்த் தீண்டாதோ!

திறன்மிகு சிறுவனுக்கு மனைவியானேன் வில்லாலே
திங்கள்செல்வன் திருவளர் ராமன் பிறந்ததுவோ
தீதிலா திருமகள் கவுசல்யா திருவயிற்றிலே
திசைமாறி பாசமென்ன கைகேயி யிடத்திலே?

அச்சாணி கழன்றபோது அடுத்துகாப்பது மனைவிதானே
அதற்கெல்லாம் அன்பாயொரு 'நன்றி' போதாதா?
அநியாயமாய் வரையற்ற வரமிரண்டு வழங்கலாமா?
அதனாலே அத்தனை துயருமென் வாழ்விலே.

அருவருக்கும் கூனிக்கு அரண்மனையில் என்ன வேலை
அடுக்குமோ நாடாளும் அரசியவள் அந்தஸ்திற்கு
அக்கூனி சூழ்ச்சியாலே குணம்மாறிய கைகேயி
அஸ்திரத்தை ஏவிவிட்டாள் அரசுபுகழ் வீழ்கவே.

தாளிரும் சடைகள்தாங்கி தன்னவன் தவமிருக்க
தன்னிமை மூடாமல் கொழுநன் காவல்புரிய
துள்ளிய மான்கண்டு நானும் மயக்கம்கொள்ள
துரத்தியது வினை தூயவர்கள் கானகமெங்கும்

அல்லாத இடம்தேடி அவர்கள் அலைந்திருக்க
அண்டிவந்த அனைவரும் அப்படியே ஆகிப்போக
ஆரணங்கு சூர்ப்பணகை ஆர்ப்பரித்த காதலாலே
அமைந்தது அரிவையின் கற்பிற்கே களங்கம்.

அய்யன் இராவணன் மண்ணோடு அள்ளியசீதை
அசோக வனத்தினில் அனுமனைக் கண்டதாலே
அவதார இராமன் அறிந்தானாம் சீதைசிறை
அய்ந்தறிவு குரங்கினும் தாழ்ந்தானோ அரசன்மகன்

அங்கத நாடாண்ட சுக்ரீவன் அண்ணன்மனை யாளலாமா?
அடுத்துக்கேட்ட வாலியை மறைந்து வீழ்த்தலாமா?
அவன்துணை சேதுபந்தனம் படைத்துணை வெற்றியாகுமா
ஐயகோ அயோத்தி ராமனுக்கு என்னவானது!

அயோத்தி திரும்பியவனுக்கு அயோக்கிய எண்ணமெதற்கு
ஆரத்தழுவிய மனையாளுக்கு அக்னிப்பரிட்சை எதற்கு?
அரசுப்புத்தி அக்கிரமம் அக்னித்தேவனால் அழிந்தது
ஆனாலும் சோதனை மீண்டெழுந்தது வண்ணானாலே.

அந்திப் பொழுதில் அடர்காட்டில் விட்டிட்டு
அண்ணன் கட்டளையென அடிமை லட்சுமணன் திரும்ப
அநாதையாய் கர்ப்பிணி அடைந்தாள் வனாசிரமம்
அப்புறம்தான் ஆண்டானாம் அறவழியில் இராமன்

அவள் கொடுத்த முகவரியில் அவனில்லை
அயோத்திராமன் பிறப்பே நீதிமன்ற விசாரணையில்
அபலையாய் திரும்பினாள் பிறந்த பூமிபிளந்து.
அவள்நிலையே இன்றளவும் இந்தியப் பெண்களுக்கே.

- **பூங்குருநல் அசோகன்**
தேசிய விருது பெற்ற எழுத்தாளர்
பூலாம்பட்டி - 637 107.

# தமிழகத் தொல்லியல் துறை அலுவலர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், தொல்லியலில் ஆர்வமுள்ள அமைப்பினர்க்கு - அன்பான வேண்டுகோள்!

தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் 1870களில் வெள்ளையரால் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, ஆதிச்சநல்லூர், கொடு மணல், பொருந்தல், கீழடி அகழ்வாய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. கீழடி ஆய்வு புதியது; 2014, 2015, 2016ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

**தொல்லியல் ஆய்வு, மூலிகைத் தோட்டம் வளர்ப்பு இவற்றில் பெரியார் ஈ.வெ. இராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நல்ல நாட்டம் உண்டு; அதன் வேலைத் திட்டங்களுள் இவை அடக்கம்.**

அதனால் ஆதிச்சநல்லூர் அகழ்வு ஆய்வு குறித்த பெரிய அளவிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கையும், பட ஆவணக் காட்சியையும் - சென்னை நடுவண் செம்மொழித் தமிழ் நிறுவனமும், பெரியார்-நாகம்மை அறக்கட்டளையும் இணைந்து 2006, 2011ஆம் ஆண்டு களில், முறையே சென்னையிலும், திருநெல்வேலியி லும் நடத்தினோம்.

இப்போது கீழடி தொல்லியல் ஆய்வு முடிவுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

அதனால் பெற்ற உந்துதலால், இப்போது அறிஞர் 'செம்மொழி' க. இராமசாமி அவர்கள் மூலம், 1) ஆதிச்ச நல்லூர், கொடுமணல் பொருந்தல், கீழடி ஆய்வு களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று கோரி அதற்கான விண்ணப்பத்தையும்;

2. அரியலூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் பெரும் பரப்பில் பரவியுள்ள உயிர்ப்படிவப் பாறைகள் (Fossil Deposits and Fossil Tree) நிரம்பிய பகுதி முழுவதை யும் இந்திய மண்வளத் துறையினர் ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரும் விண்ணப்பத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு, அதற்காகவே, 18.2.2017 அன்று நான் தில்லியை அடைந்தேன்.

இதற்கிடையில் தில்லி மாநிலங்கள் அவையில், கீழடி பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்தை டி.கே. ரெங்க ராஜன் கொணர்ந்தார். அதையொட்டி, திருச்சி சிவா, கனிமொழி, இல. கணேசன், சுப்பிரமணிய சாமி ஆகி யோர், கீழடி அகழ்வாய்வு பற்றி நாடாளுமன்றத்தில் ஆர்வத்துடன் பேசினர்.

இந்தச் சூழலில் தொல்லியல் துறைக்கான அமைச்சர் மகேஷ் சர்மா தலைநகரில் இல்லாததால், அவருக்கு உரிய மடலின் படியுடன், தொல்லியல்துறை இயக்குநர் நாயகம் (Director General - Archaeological Survey of India) **முனைவர் ராகேஷ் திவாரி** அவர்களை - அறக் கட்டளை சார்பில் நானும், தில்லி பெரியார்-அம்பேத்கர் தொண்டு நிறுவனம் ப. இராமமூர்த்தி அவர்களும் 21.2.2017 மாலை 4 மணிக்கு அலுவலகத்தில் நேரில் கண்டு பேசினோம்.

அவர் தமிழகத் தொல்லியல் இடங்கள் எல்லா வற்றையும் நேரில் பார்த்திருக்கிறார்.

“அய்யா, தமிழகத் தொல்லியல் துறைப் பணிகளில் இந்திய அரசு போதிய ஆர்வம் காட்டவில்லை; நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம்” என, நான் சொன்னேன்.

அவர், உடனே, “இதோ பாருங்கள் - இந்தத் தொகுதி கீழடி அகழ்வு ஆய்வு பற்றியது. இந்த அறிக்கை 9.2.2017 இல் அனுப்பப்பட்டு, 13.2.2017 இல் எங்களுக்குக் கிடைத்தது. இது கிடைத்த பிறகு, நான் பரிந்துரைத்த தன் பேரில், இந்திய அரசினர், கீழடி தொல் ஆய்வு மேற்கொண்டு நடைபெற நிதி ஒதுக்கியுள்ளனர்!” என்று கூறினார்.

“ஆதிச்சநல்லூரில் மேற்கொண்டு அகழ்வாய்வு செய்ய, ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை” எனக் கேட்டேன்.

“டாக்டர் டி.எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் இன்னமும் அவருடைய ஆராய்ச்சி பற்றிய முழு அறிக்கையையும் அனுப்பவில்லை. முழு அறிக்கை வந்தால் உடனே நடவடிக்கை எடுப்போம்” என்றார், அவர்.

இதுபற்றி, மதிப்புக்குரிய முனைவர் டி.எஸ். சத்திய மூர்த்தி அவர்கள் கருதிப் பார்த்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

புதுச்சேரி முனைவர் கே. இராசனின் பொருந்தல், கொடுமணல் ஆய்வறிக்கைகள் முழுமையாகக் கிடைத் தன எனக் கூறி, அவரைப் பாராட்டினார், திவாரி.

**தமிழகத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் - தாமிர பரணி ஆற்றங்கரை நாகரிகம், மொகஞ்சதாரோ - அரப்பா நாகரிகத்துக்கு முந்தியது என நாம் பெருமைப் படுகிறோம்.**

**அதேநேரத்தில், கீழடியில் ஆய்வு மேற்கொண்ட தொல்லியல் ஆய்வாளர்களையும், ஏற்கெனவே ஆதிச்ச நல்லூரில் ஆய்வு மேற்கொண்ட முனைவர் டி.எஸ். சத்தியமூர்த்தி, முனைவர் அறவாழி ஆகியோரையும், புதுச்சேரி முனைவர் கே. இராசன் அவர்களையும் மற்றும் இரா.பூங்குன்றன் அவர்களையும் தொல்லியல் ஆர்வலர்கள் நெஞ்சாரப் பாராட்ட வேண்டுகிறோம்.**

**23.2.2017** **- வே. ஆனைமுத்து**

கட்டுரைத் தொடர்-49

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

(1938இல் திசம்பரில் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில் பெரியாரின் தலைமையுரை-சென்ற இதழ் தொடர்ச்சி...)

தோழர்களே!

**இந்தி**

நம் நாட்டு மக்களில் 100க்கு 93 பேருக்குத் தாய் பாஷையில் தங்கள் கையெழுத்துக் கூடப் பாடத் தெரியாத நிலையில், ஆரம்பப் பாடசாலைகளை ஜில்லாதோறும் 100ம் 200மாக திடீர் திடீரென மூடிக்கொண்டு வரும் நிலையில், கேட்பதற்கெல்லாம் பணமில்லை, பண மில்லையென்று பல்லவிபாடும் நிலையில், வடமொழி யென்றும், ஆரியமொழியென்றும், அந்நிய மொழி யென்றும் சொல்லப்படும் இந்தி மொழியை (பலர் ஆட்சேபித்த பிறகு) இந்துஸ்தானி என்று சொல்லிக் கொண்டு கட்டாய பாடமாகப் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது காங்கிரஸ் திட்டத்தில் எத்தனை யாவது திட்டமென்றும், ஓட்டர்களுக்கு எப்பொழுது கொடுக்கப்பட்ட வாக்குறுதியென்றும் கேட்கின்றேன்.

ஜனநாயக ஆட்சிக்காரர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் இவர்கள் மிதவாதக் கட்சிப் பிரமுகர்களும், ஜஸ்டிஸ் கட்சிப் பெரியோர்களும், சுயமரியாதைக் கட்சிப் பிரமுகர்களும், முஸ்லீம் லீக் பிரமுகர்களும் சேர்ந்தும் தனித்தனியும் பத்திரிகைகள் வாயிலாகவும், பிரசங்க மேடைகளிலும், மகாநாடுகள் கூட்டியும் ஒருமனதான அபிப்பிராயத்தைத் தெரிவித்த போதிலும், அவ்வள வையும் அலட்சியப்படுத்திவிட்டு அதற்காக 600 பேர்கள் சிறை சென்ற பிறகும், 75 வயது சென்ற தாய்மார்களும், சகோதரிகளும், இன்னஞ் சிறார்களோடும் சிறை புகுந்த பின்னரும், வக்கீல்களும், ஆசிரியர்களும், பெரும் பட்டதாரிகளும், சர்க்கார் உத்தியோகத்தில் பென்ஷன் வாங்கி வருபவர்களும், துறவிகளும், மடாதிபதிகளும் சிறை புகுந்த பின்னரும், இந்தி எதிர்ப்பு சம்மந்தமான ஆயிரக்கணக்கான கூட்டங்களில் இலட்சக்கணக்கான ஆண் பெண்கள் கூடி ஏகமனதாய் இந்தியைப் பள்ளிகளில் புகுத்துவதைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகும் 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்னும் முதுமொழிக்கேற்ப, ஒரே பிடிவாதமாய் இரண்டிலொன்று பார்த்தே விடுகிறேன் என்பதுதான் ஜனநாயக ஆட்சி முறையா? மாறுபட்ட அபிப்பிராயங் களைக் கூறும் பத்திரிகைகளை ஒடுக்குவதும் கிளர்ச் சியை நசுக்கக் கடினமான அடக்குமுறைகளைக் கை யாளுவதும் ஜனநாயக ஆட்சியின் லட்சணமா எனக் கேட்க வேண்டியவனாக இருக் கின்றேன்.



இந்தி நுழைவால் தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், தமிழர் தன்மானம் இவைகள் அழிவுறும் என்று சொன்னால் அது அரசியல் எதிரி களின் கூச்சலாம்!

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நசுக்க அன்னார் உபயோகப்படுத்தும் சட்டம் ஜனநாயகக் கொள்கைக்குச் சற்றும் பொருந்தாது என காங்கிரஸ்காரர்களாலேயே முடிவு கட்டப்பட்டதாகும். தாங்கள் பதவியேற்றதும் இச்சட்டத்தை எடுத்துவிட்டு மறுகாரியம் பார்ப்பதாகத் தேர்தல் காலத்தில் உறுதிமொழி கொடுத்ததை யார் அறியார்கள்? இதைத் தந்நலமற்ற தலைவர்கள் மீதும் சமூக வாழ்க்கையில் ஆரியக் கோட்பாட்டிற்கு அடிமைப் பட்ட பெண்கள் மீதும் பிரயோகப்படுத்துவது அடுக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

காங்கிரஸ்காரர்கள் பதவியேற்ற பின்பு கிராம்பு மறியல் செய்தார்கள். அதனால் தினசரி வாழ்க்கைக்கும் வர்த்தகத்திற்கும் மற்ற பல அலுவல்களுக்கும் குந்தகம் ஏற்பட்டன. பலருடைய நலன் பாதிக்கப்பட்டது. ஆனால் அந்த மறியல் கிரிமினல் அமண்ட்மெண்ட் ஆக்டுக்குக் கீழ் குற்றமாக்கப்படவில்லை. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களை காங்கிரஸ் தொண்டர்கள் மனம்போனபடி வைதார்கள். அது காங்கிரஸ் தலைவர்களுக்குத் தவறாகத் தோன்ற வில்லை. இந்தி வீழ்க! தமிழ் வாழ்க! என்று தெருவில் சொல்லிக்கொண்டு நிற்பது அசிங்கமாகவும், ஆபாசமான வார்த்தைகளாகவும், அக்கிரமமான பேச்சுக்களாகவும் அவர்களுக்குப்படுகின்றன. 6 மாதம், ஒரு வருடம், இரண்டு வருடம், மூன்று வருடம் தண்டனைகளும், ரூ.500, ரூ.1000 அபராதங்களும் விதிக்கப்படுவதுடன், சிறையில் தொண்டர்களின் நாக்கைக் குறடுகொண்டு பிடித்திழுப் பதும் இரும்பு உலக்கை கொடுத்து அவர்களை நெல்குத்தச் செய்வதும், மாடுபோல் தண்ணீர் கவலை பிடித்து தண்ணீர் இறைக்கச் செய்வதும், கல்லுடைக்கப் போடுவதும் சர்வசாதாரணமாக நடந்து வருகின்றது. இவைகளெல்லாம் ஜனநாயக ஆட்சி முறையா என்று கேட்க வேண்டியிருக்கின்றது. இன்றைய காங்கிரஸ் ஜனநாயக ராமராஜ்ய ஆட்சியில் நமது கூட்டங்களில் காங்கிரஸ் தொண்டர்கள் காலித்தனங்கள் செய்கிறார்கள்;

நம்மவர்கள் தடி கொண்டு தாக்கப்படுகின்றார்கள்; துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படுகின்றது. இதைப் பற்றிக் காந்தியாருக்குக் கவலையில்லை. இதை நிறுத்த யாதொரு முயற்சியும் செய்யப்படுவதாகக் காணோம். ஆனால் ஆறாயிரம் மைலுக்கப்பாலுள்ள செக்கோஸ்லோ வேகியா மக்களுக்கும் யூதர்களுக்கும் காந்தியார் அகிம்சா பிரசங்கங்கள் செய்கிறார். காங்கிரஸ்காரர்களும் தங்களை அன்பின் சொரூபமென்றும் அகிம்சா மூர்த்திகள் என்றும் நாக்கூசாமல் பேசுகின் றார்கள்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியானது அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்டதென அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் முடிவுகட்டப்பட்டதே! அந்த அபிப்பிராய பேதத்தை விளக்கிக்காட்ட முயற்சித்தார்களா? கேவலம், அபிப்பிராய பேதத்திற்கு மூன்று வருஷ தண்டனையா? மற்றொரு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இந்தியை நுழைக்கும் செய்கை வகுப்புத் துவேஷத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருக்கின்றதென்றும், அதை நிறுத்திவிடும்படியும் சொன்னார்களே! அதை மதித்தாவது சென்னை மந்திரிகள் நல்வழிப்பட்டார்களா? அதற்குப் பதிலாக மற்றவர்களை வகுப்பு வாதத் துவேஷிகளென்று அவர்கள்மேல் குற்றஞ்சுமத்தி அவர்களைக் கடுமையாகத் தண்டித்து வருகிறார்கள்.

வார்தா திட்டம் என்ற உலகிலே இல்லாத விநோத மான ஒரு திட்டம் தயாரித்து அதை அமுலுக்குக் கொண்டு வரப் படாதபாடு படுகின்றார்கள். அதனால் விளையும் ஒரே நன்மை கல்வியை ஒழிப்பதுதான். உலகக் கல்வி முறைத் திட்டங்களைக் கண்டறிந்த சிறந்த அறிவாளிகள் அதை வெகுவாகக் கண்டித்துங்கூட அதைக் கையாளத் தீவிர முயற்சி நடந்து வருகின்றது.

**ஜமீன்தார்கள்**

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஜமீன்தார்கள் இயக்கமென்று சொல்லி ஜமீன்தார்களை ஒழிப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப் போகிறார்களாம். ஜமீன்தார்கள் இருப்பதைப் பற்றியோ, போவதைப் பற்றியோ நமக்குக் கவலையில்லை. ஆனால் இவர்கள் சட்டம் செய்யும் சூட்சுமம் என்ன? நாட்டு மக்களுக்கு நலம் புரியவா? அல்லது பழிவாங்கும் குணத்தாலா? என்று கேட்க வேண்டியிருக்கின்றது.

இவர்கள் இதுவரை இயற்றியுள்ள இருபெருஞ் சட்டங் களுக்குத் தினந்தினம் திருத்தம் செய்ய வேண்டியிருக் கின்றது. மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தச் சட்டம், சட்டசபைக்குச் சென்ற செஷனில்கூட வந்தது. கடன் குறைப்புச் சட்டம் நீதி ஸ்தலங்களில் எள்ளி நகையாடப் படுகின்றது; நாடெங்கும் குறைகூறப்படு கின்றது. யாருக்கு நன்மை தேட இயற்றப்பட்டதோ அவர்கட்கு அதனால் தீமையே விளைவதாய் இருக்கின்றது. இந்த இலட் சணத்தில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் வேறு செய்கிறார்களாம். இதுவரை வெளிவந்திருக்கும் அறிக்கையில் ஜமீன் தார்களுக்கு பூமி சொந்தமில்லை எனக் காணப்படுகிறது. ஆனால் வட்டிக்குப் பணம் கொடுத்து ஒன்றுக்கு மூன்றாய் எழுதி வாங்கி ஏழையின் நிலத்தை ஏலம் போட்டு அவன் பதறப் பதறப் பிடுங்கிக் கொள்பவனுக்கு அது சொந்தமாம். ஜமீன்தார்களிடம் மதத்தின் பெயரால் ஏமாற்றி அவர்களின் கொடுமையான நிலங்களை இனாமாகப் பிடுங்கிக் கொண்டவர்களுக்கு அது சொந்தமாம். தானாக உழுது பயிர் செய்யாமல் பூமியைக் குத்தகைக்குவிட்டு, விளைந் தாலும், விளையாவிட்டாலும் குத்தகைப் பணத்தைக் கொறடு போட்டுப் பிடுங்கி சோம்பேறி வாழ்வு வாழ்பவ னுக்குப் பூமி சொந்தமாம். உழுது பயிரிட்டு உழைப்பவர் களுக்கு அது சொந்தமில்லையாம்! இவர்கள் சட்டம் செய்வதின் யோக்கியதை எப்படி இருக்கின்றது பாருங்கள்!

**ஜமீன்தார்கள் ஆட்சி கூடாது; புரோகிதர்கள் ஆட்சி இருக்கட்டும் என்று கூறும் மேதாவிகள் இதைச் சிந்தித்துப் பார்க்கட்டும். ஜமீன்தார் பணம் சம்பாதித்து தனக்கும் மற்றவருக்கும் அதைச் செலவிடுபவன். ஆனால் புரோகிதனோ எல்லோரையும் வஞ்சித்து தானும், தன் குடும்பமும், தன் கூட்டமும் மாத்திரம், வாழவேண்டு மென்று எண்ணுபவன். இந்த இருபிரபுக்களில் யார் யோக்கியர்கள் என்பதை நீங்களே யோசித்துப் பாருங் கள். இந்த 17 வருட காலத்தில் இந்தச் சங்கத்திற்கு ஜமீன்தார்கள் மிராசுதாரர்கள், பிரபுக்கள் தலைமை வகித்து தங்களுக்காக வென்று சுயநலமாக என்ன காரியங்கள் செய்துகொண்டார்கள்? தங்களுக்காக வென்று எவ்வளவு பணம் தேடிக் கொண்டார்கள் என்று யாராவது சொல்லட்டும்.**

**ஒரு இயக்கத்தை நடத்தப் பணக்காரர்களில்லாமல் ஏழைகளால் நடத்த முடிகின்றதா? தொழிலாளர்கள் இயக்கங்கூட சோம்பேறிக் கூட்டத்தாரான பார்ப்பனர் களால் தானே நடத்தப்படுகின்றது? காங்கிரஸ் இயக் கங்கூட தாஸ், நேரு போன்ற பிரபுக்களாலும், பிரபுக் களின் குழந்தைகளாலும், சங்கராச்சாரி, மகாராஜா போன்றவர்களது போக போக்கிய பழக்கமுள்ள காந்தி யாராலும், மற்றும் பிர்லா, பஜாஜ் என்றவர்கள் போன்ற கோடீஸ்வரர்களாலுந்தானே நடத்தப்படுகிறது?**

**நிற்க. இவர்களுக்கு உதவியாக பல தேச பக்தர்கள் என்பவர்களுக்குத் தினக்கூலி கொடுத்தும் மாதக் கூலி கொடுத்தும் நம்மை வைவதற்கு மாத்திரம் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு நடத்தப்படுகிறதே தவிர, அது ஏழைகளால் நடத்தப்படுகிற இயக்கமா என்று கேட் கிறேன். பார்ப்பனர்கள் ஏழைகளா? பாட்டாளிகளா? பொது ஜனக்கஷ்டம் உணர்ந்தவர்களா? இப்படிப்பட்ட மக்களை விட ஜமீன்தார்கள் நடத்தை பெரிய அபாயகரமான தென்று சாக்குச் சொல்லுபவர்கள் சுயநலக்காரர்களும்,**

**பொறாமைக்காரர்களும் தவிர வேறு யார் சொல்ல முடியும்? தமிழனுக்குப் பிச்சை கேட்டு வழக்கமில்லை. அவனுடைய இயக்கம் ஒரு பணக்காரனால்தான் நடத்தப்பட முடியும். ''பிரச்சாரம், தேர்தல் ஆகியவற்றிற்கு ஏராளமான பணம் வேண்டும்; ஜமீன்தார்கள் கூடாது'' என்று சொல்லுகின்ற இந்தச் சங்கத்திலுள்ள சமதர்ம வாதிகள், யார்? எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள்? அல்லது இயக்கம் நடைபெற, யார்? எவ்வளவு ரூபாய்கள் வசூல் செய்து கொடுத்தார்கள்?**

காலஞ்சென்ற கனம் முனுசாமி நாயுடு அவர்கள் ஜமீன்தாரருமல்ல; பணக்காரருமல்ல. அவர் தலை வரானவுடன் ''காங்கிரஸ்தான் தேசீய சபை, நம்முடை யது வகுப்புவாத சபை'' என்று சொல்ல வேண்டிய தாகிவிட்டது. அதிக நாள் இருக்கமுடியவில்லை. நிற்க முடியவில்லை.

சமதர்ம அரசாங்கம் பலமான அஸ்திவாரத்தின் மீது ஏற்படுத்தப் படும்வரை ஜமீன்தாரனோ, பணக்காரனோ, பிரபுவோ, முதலாளியோ இல்லாமல் எந்த இயக்கந்தான் நடைபெறும்? இன்று பெயரளவுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள் என்றாலும், பணக்காரர்களிடம் 5,000, 10,000, 50,000, 1,00,000, 10,000,000 உதவித் தொகை பெறுவது எதற்கு? அவன் எதை உத்தேசித்துக் கொடுக்கிறான்? என்ன பிரதிப் பிரயோஜனம் செய்வதாக வாங்குகிறார்கள் என்பதைப் பார்த்தால் காங்கிரஸ் பணக்காரர்களுக்கும், ஜமீன்தாரர் களுக்கும் கங்காணிகளாயிருப்பது விளங்கும். இதை அநேக காங்கிரஸ் அபிமானிகள், காங்கிரஸ் தலைவர்கள், நேரு, போஸ் முதற்கொண்டு சொன்னவர்களேயா வார்கள். ஒரு சமயம் காங்கிரஸ்காரர்கள். தாங்கள் பணம் வாங்கும் பணக்காரப் பிரபுக்கள் உண்மைத் தேசாபி மானிகளென்றால், நம் ஜமீன்தார்கள் உண்மையான மனிதாபிமானிகளென்று ஏன் சொல்லக்கூடாது?

இப்போது காங்கிரஸ்காரர்கள் கொண்டுவருவதாய்ப் பூச்சாண்டி காட்டும் மசோதா உண்மையில் ஜமீன் முறைகளை ஒழிக்கவா? அல்லது அவர்களை (ஜமீன் தார்களை) மிரட்டி நமக்கு உதவி செய்யக்கூடாது என்று அடக்கவா? அல்லது பிரதிப் பிரயோஜனம் பெற்றுக் கொண்டு, மற்ற பல மசோதாக்களில் நடந்துகொண்டது போல் கைவிட்டுவிடுவர் என்று இன்று யாரால்தான் ஜோசியம் கூறமுடியும்? ஆகவே எதிரிகள் பேச்சையும், பொறாமைக்காரர்கள், சுயநலக்காரர்கள் பேச்சையுங் கேட்டு பணக்காரர்களை வைது எதிரிகளுக்கு ஆளாகிவிடும்படிச் செய்து விடாதீர்களென்று எனது வாலிப சகோதரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**பணக்காரர்கள் ஒழிக்கப்படவும், பணக்கார ஆட்சி ஒழிக்கப்படவும் காலம் வர வேண்டும். அது புரோகிதக் கூட்டமும், புரோகித ஆட்சியும் அடியோடு ஒழிந்துபிறகே தான் வரும். கட்டாயம் வரவே போகிறது. பொறுமையை இழந்து வழிமாறிப் போய் விடக்கூடாது. அப்படிப் போய் விட்டோமானால் நம் எதிரிகளுக்கு இரட்டிப்புப் பலம் ஏற்பட்டுவிடும். நமது மீட்சிக் காலமும் குறிப்பிடாமல் ஒத்திப் போடப்பட்டுவிடும்.**

சுயமரியாதை இயக்கத்தின் மூலம் பணக்காரன், ஜமீன்தாரன், முதலாளி, ஒழிய வேண்டுமென்று சொன்னோம். புரோகிதர்களே அதற்கு எதிரிடையாக இருந்தார்கள். நாம் அப்படிச் சொன்னது, இன்று புரோகித ஆட்சிக்கு இடந்தந்தது. ஆதலால் புரோகித ஆட்சியை ஒழிக்கவும் மற்றப்படி அரசியலில் நமது கொள்கை என்னவென்பதற்கும் நான் சென்ற மகாநாட்டின்போது சமர்ப்பித்து நிறைவேற்றி வைத்திருக்கும் திட்டங்களிருக் கின்றன.

## இந்து முஸ்லீம் கிருஸ்துவ தாழ்த்தப்பட்டவர் ஒற்றுமை

புரோகித ஆட்சி ஒழியவேண்டுமானால் நம் மக்களுக் குள் அபார ஒற்றுமையும், நல்ல பகுத்தறிவு ஆராய்ச்சியும் வேண்டும். ஏனெனில் நம் நாட்டிலுள்ள புரோகித ஆதிக்கம் நம்மையும், முஸ்லீம்களையும், கிறிஸ்துவர் களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒன்றுபோலவே தான் கருதி நடத்தி வருகிறது. கீழ்ச்சாதி, சூத்திரன், மிலேச்சன், தொடக்கூடாதவன் என்கின்ற பெயர்கள் நம் எல்லோருக்கும் ஒன்று போலவே உண்டு. நம் பல்வேறு முயற்சிகளால் சிறிது மாற்றமடைந் திருப்பதாகக் காணப்படுகிறதென்றாலும் அவர்களுக்கு வேண்டியபோது ஒன்றுபடுத்தித் தெளிவாக்கிக் கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை மேற்கூறிய நாம் எல்லோரும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். தொழிலால், பழக்கத்தால், மன உணர்ச்சியால் வேறு மதம், வேறு சாதி, வேறு வகுப்பாய்க் கருதிக் கொண்டிருக்கிறோம். நம் நாட்டு முஸ்லீம்களும் கிறிஸ்துவர்களும் திராவிடர்களே யாவார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும் திராவிடர்களே யாவார்கள். மத விஷயத்தில் மனமாற்றங் கொண்டவர்கள் பிறவியில் நம் சகோதரர்கள்தான். ஆதலால் நம் நான்கு கூட்டத்தாரிடையும் சிறிது கூட வேற்றுமையுணர்ச்சியிருக் கக்கூடாது. ஒருவித ஆராய்ச்சி உணர்ச்சி ஏற்படும்வரை மதவிஷயத்தில் ஒருவருக்கொருவர் பிரவேசிக்க அவரவர்கள் பழக்கவழக்க கலை விஷயங்களில் பிரவேசிக்க இவ்வியக்கத்தில் யாருக்கும் எவ்வித உரிமையுமில்லை. ஆதலால் புரோகித ஆதிக்கத்துக்கு, ஆட்சிக்கு, ஏமாற்றத்துக்கு இடங்கொடுக்காமலிருக்க நாம் ஒன்றுகூடியே ஆகவேண்டும். முஸ்லீம்களினுடையவும், கிறிஸ்துவர்களினுடையவும் தாழ்த்தப்பட்டவர்களினு

டையவும் தலைவர்கள் இதே அபிப்பிராயங் கொண்டி ருக்கிறார்கள். நம்மைப் பிரிக்க எதிரிகள் செய்யும் சூட்சிக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

### தொழிலாளர்கள்

**நம் நாட்டுத் தொழிலாளர்கள், பார்ப்பனரல்லா தாரியக்கம் வேறு; தொழிலாளர்கள் வேறு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். இக்கருத்து மாறி, இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மையான எண்ணமும் உணர்ச்சியும் ஏற்படும் வரை இரண்டும் உருப்படா என்பதே எனது அபிப்பிராயம். பார்ப்பனரல்லாதவர்கள் என்கின்ற வார்த்தையும் மக்களும்- தொழிலாளர் என்ற வார்த்தையும் மக்களும் ஒன்றேயென்பதை நாம் மறக்கவே கூடாது.**

**பார்ப்பனரல்லாதாருக்கு பெயர் "சூத்திரர்கள்" என்பதாகும். "சூத்திரர்கள்" என்றால் வேலைக்காரன், அடிமை என்று பொருள். ஆகவே, 'சூத்திரன்' என்பது தொழிலாளி என்பதைவிட மிகவும் தாழ்ந்த கருத்தி லிருப்பதோடு, காரியத்திலும் உடலுழைப்பு வேலைகள் பூராவும் பார்ப்பனரல்லாதாருக்கே இருந்து வருகிறது. இது காரியத்தில் மாத்திரமில்லாமல் புரோகிதக் கோட்பாட்டின் படியும் பார்ப்பனர்கள் உடலுழைப்புச் செய்யக்கூடாதென்றும், பார்ப்பனரல்லாதார் உழைக் கின்றவர்களே யாவார்களென்றும் இருக்கின்றது. இந்த பேதத்தை நிலைநிறுத்த பட்டாளம் வைத்திருப்பது போல் சில முதலாளிகளையும் ஜமீன்தார்களையும் புரோகிதன் மீதியாக வைத்திருக்கிறான். அவனும் ஒரே ஜாதியில் இல்லாமல் அடிக்கடி மாறி மாறி தானும் முதலாளி யாகும்படி இடம் வைத்திருக்கிறான். ஆதலால் முதலாளி யென்றோ ஜமீன் உடையவன் என்றோ பிறவியில் இல்லை. சட்டத்தில்தான் உண்டு. அதை, எப்போது வேண்டுமானாலும் மாற்றிவிடலாம். ஆனால் புரோகிதன் என்கிறவன் பிறவியில் இருக்கிறான். அதை மாற்றி விட்டோமானால் சட்டத்தை ஒரு வரியில் ஏற்படுத்தி விடலாம். ஆகவே, தொழிலாளத் தோழர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டு புரோகிதர்கள் காலடியில் தங்கள் பாதுகாப்புச் சங்கங்களை ஒப்புவித்திருப்பதை மீட்டுக் கொண்டுவந்து பார்ப்பனரல்லாதார் சங்கத்தில் இரண் டறக் கலந்துவிடும்படியாய்க் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு விண்ணப்பம் இல்லையென்றே கருதுகிறேன்.**

### அதிகாரிகள்

**பார்ப்பனரல்லாத சர்க்கார் அதிகாரிகளே! ஜஸ்டிஸ் மந்திரிகள் ஆட்சியிலிருந்த காலத்தில் நீங்கள் உங்களை மேதாவிகளாகக் கருதிக் கொண்டு உங்களாலேயே நீங்கள் பெரியவர்களானதாக நினைத்துக் கொண்டு உங்கள் நாற்காலிகளில் சாய்ந்து, மந்திரிகளுக்குப் புத்தி சொல்லுகிற மனப்பால் குடிக்கிறவேலையில் இருந்து வந்தீர்கள். ஒரு காசாவது, ஒரு மணிநேர அநுதாபமாவது உங்களிடத்தில் நமது இயக்கம் பெற முடியவில்லை. அதன் பலனை இப்போது அடைகிறீர்கள். மந்திரிகளால் பெரும்பதவி, உத்தியோகம் பெற்றவர்களும் மந்திரிகள் போனவுடன் நீங்கள் உத்தியோகத்திலிருக்கும் போதும் எதிரிகளுக்கு ஆதரவளித்தீர்கள். ஹைகோர்ட் ஜட்ஜ் முதல் தேவஸ்தான போர்டு மெம்பர்கள் உட்பட அநேகர் இப்படியே செய்தார்கள் - செய்கிறார்கள். இதன் பலனையும் அவர்கள் அடைவார்கள் என்றாலும், இன்று பதவியில் சிறு உத்தியோகத்திலுள்ள பார்ப்பனரல்லா தாரெல்லோரும் இயக்கத்துக்கு அநுதாபங் காட்டுங்கள். பொருளுதவி செய்யுங்கள். முன்னவர்களைப் போல் நன்றியற்றவர்களாகவும் இனத்துரோகிகளாகவும் ஆகிவிடாதீர்கள். உங்கள் சந்ததியின் மானத்திற்காகவே நான் உங்களுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளு கிறேன்.**

### தலைவர்களுக்கு

இயக்கத் தலைவர்களே! பெரியோர்களே! ஏதோ சில காரணங்களால் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்கலாம். இயக்கத்தின் பேரால் ஒரு நாளாவது தலை மையிலோ, பதவியிலோ, இருந்தவர்கள் இயக்கத்திற்கு ஆயுள்வரை கடன்பட்டவர்களாவார்கள். இயக்கக் கொள்கைகளில் மாறுபட்டாலல்லது அவர்கள் பராமுகமா யிருப்பது மிகக் கொடுமையான காரியமாகும். ஆதலால் எல்லா மனக்குறைகளையும் மாற்றிக்கொண்டு இயக் கத்தில் கலந்து காரியங்களை நடத்திக் கொடுக்க வேண்டியது அவர்களின் நீங்காக் கடமையென்பதோடு தலைவணங்கி அவர்களை வருந்தியழைக்கின்றேன். தகுதியான வண்ணம் தலைவர்களால் நன்கு மதிக்கப் படவில்லையென்றும் தங்களது நியாயமான உரிமைகள் அலட்சியப்படுத்தப்பட்டனவென்றும் சிலருக்கு இயக்கத் தினிடம் வெறுப்பேற்பட்டிருக்கலாம். அம்மாதிரிக் காரியங் களும் வெறுப்புகளுமே இந்த இயக்கம் சோர்வுற்றி ருக்கவும், தமிழர்கள் கட்டுக் குலையவும் காரணமாகவு மிருக்கலாம். எப்படியிருந்தாலும் அவைகளை மறந்து விட்டு முன்வரவேண்டிய காலம் இதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**தமிழ்நாடு, தன்மானமுள்ள தமிழ் மக்களை தங்களது கடமையைச் செய்ய அழைக்கின்றது. இந்த அழைப்பைப் புறக்கணிப்பது சுலபத்தில் சரிப்படுத்த முடியாத குற்றமாகிவிடுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே போனது போகட்டும். எப்படியோ நடந்த தவறுகளை மறந்துவிட்டு யாவரும் ஒன்றுபட வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.**

### முடிவு

மாபெரும் மாறுதல்கள் நம்முன் காத்திருக்கின்றன. இச்சமயத்தில் மிகமிகச் சாமான்யனை (Very Ordinary

Man) இப்பதவியில் வைத்துவிட்டீர்கள். மேலே சொன்ன வார்த்தைகள் எதுவும் சொல்ல நான் சிறிதும் தகுதியும், அந்தஸ்தும் உடையவனல்ல. இவைகள் தகுதிக்கு மேற்பட்டதாக இருக்கலாம். இந்தப் பதவியிலிருப்பவதற் காகவே சொல்ல வேண்டியது கடமையென்று கருதி இவைகளைச் சொல்ல வேண்டியதாய்விட்டது. நாம் செய்ய வேண்டிய வேலை, நம்மில் ஒற்றுமை, ஒற்றுமை, ஒற்றுமையேயாகும்.

நம் ஸ்தாபனத்தை வலுப்படுத்த வேண்டும். மக்களுக் குள் தக்க மெய்யான கண்ணியமான பிரச்சாரம் வேண்டும் யாரிடமும் வெறுப்பு, விருப்பு, குரோத உணர்ச்சி இவைகளில்லாமல் உண்மையன்புடன் துணிந்து கருமமாற்ற வேண்டும். கஷ்ட நஷ்டங்களுக்குப் பயப்படாமல் போர் முகத்து வீரன் போல் முடிவு காணும் வரை எதிர்த்து நிற்க வேண்டும்.

'விடுதலை' 29-12-1938

குறிப்பு :

1. பெரியார் பெல்லாரி சிறையில் இருந்ததால் அவருடைய இந்த தலைமையுரையை சர்.ஏ.டி. பன்னீர்செல்வமும், கி.ஆ.பெ.விசுவநாதமும் படித்தார்கள்.
2. தனி நூலாகவும் வெளிவந்துள்ளது. The B.N.Press, Madras.

**- தொடரும்**

## தில்லி இந்தர்புரி ஏழை மாணவி அஞ்சலிக்குப் பொருளுதவி



தில்லியில் 2001 முதல் செயல்படட்டுவரும் **"பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனம்"** சார்பில், மாணவி அஞ்சலிக்கு, 2016இல் **ரூ.28,000/-** நன்கொடை திரட்டி அளித்தனர்.

தொடர்ந்து 19.2.2017 கூட்டத்தின் போது, **ரூ.15,000/-** அளித்தனர்.

படத்தில், லெனின் வினோபர், புதேரி. தானப்பன், இந்தர்புரி கிருஷ்ணமூர்த்தி, அஞ்சலி உள்ளனர்.

## காஞ்சி மா.பெ.பொ.க. தோழர் மு. அருட்செல்வன் தந்தையார் சி. முருகேசன் மறைவு

காஞ்சி மா.பெ.பொ.க. தோழரும், தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் சுயமரியாதைத் திரு மணம் செய்து கொண்டவரும் ஆன தோழர் மு. அருட்செல்வன் தந்தையார் சி. முருகேசன், 21.2.2017 செவ்வாய் மாலை 6.30 மணியளவில் பஞ்சுப் பேட்டை, சின்னத்தெரு, அவர்தம் இல்லத்தில் இயற்கை எய்தினார். 22.2.2017 புதன் அன்று காஞ்சி மா.பெ.பொ.க. தோழர்கள் சி. நடராசன், தீ. கோபாலகிருட்டிணன், மு. செயப்பிரகாசு, மா. கோதண்டபாணி, இரா. இராச சேகர், ஆ. சோதி, சங்கம் டெய்லர் பஞ்சாட்சரம் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னார் மறைவு கருதித் துயருறும் அவர்தம் துணைவியார், மகள்கள், மகன், உற்றார், உறவினர் கள் அனைவருக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

செய்தி : சி. நடராசன்

## காஞ்சி மா.பெ.பொ.க. ஆதரவாளர் இரா. வெங்கடேசன் தாயார் திருமதி. இரா. கௌசல்யா மறைவு

*காஞ்சிபுரம் அன்பு அச்சகம் உரிமையாளரும், மா.பெ.பொ.க. ஆதரவாளர் குடும்பமும் ஆகிய இரா. வெங்கடேசன் தாயார் திருமதி. இரா. கௌசல்யா (வயது 77) 14.2.2016 அன்று இயற்கை எய்தினார்.*

*கௌசல்யா, தமிழ்நாட்டில் அரசு அவர்கள் பத்திரிகை சுதந்தரம் அடக்குமுறை செய்த போது, முற்போக்குப் பத்திரிகைகளை துணிச்சலாக தனது அச்சகத்தில் அச்சிட்டுக் கொடுப்பார்கள். அதற்காகவே தனது ஒரு மகனை வழக்கறிஞராகப் படிக்க வைத்தார். நல்ல தமிழ்ப் பற்றாளர் ஆவார்.*

*அன்னார் மறைவு கருதித் துயருறும் குடும்பத்தார், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

*செய்தி : தீ. கோபாலகிருஷ்ணன்*

# நமது வரலாற்றைத் திரும்ப எழுத வேண்டும் 'தினமலர்' ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி கருத்து

"நாம் தமிழ் பெருமை பேசுவோம்; தமிழ் வரலாற்றின் தொன்மைப் பொருள்களைப் பாதுகாப்பதில்லை. நமது வரலாற்றைத் திரும்ப எழுத வேண்டும்'' என, 'தினமலர்' ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ''தமிழ்த் தாய், 69ஆவது தமிழாய்வு பெரு விழா''வில், தொல்காப்பியர் ஆய்வு இருக்கை நடத்தும், 'தமிழகத்தில் தொல்லெழுத்தியல் - தமிழ் வட்டெழுத்துக்கள்' என்ற தலைப்பிலான, ஐந்து நாள் பயிலரங்கம், சென்னை தரமணியில் உள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில், 14.2.2017 அன்று துவங்கியது.

'தினமலர்' நாளிதழ் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி, பயிலரங்கினைத் துவக்கி வைத்துப் பேசியதாவது :

நான், 40 ஆண்டுகளாகச் செய்துவந்த ஆராய்ச்சியின் ஒரு பகுதிதான், வட்டெழுத்து ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியின் தோற்றம் எப்படியென்றால், தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், பத்திரிகையின் பக்கங்கள் அதிகமாக இருக்கிறது.

அந்தக் காலத்தில், கையால் தான் அச்சுக்கோர்க்க வேண்டும். அது, மிகவும் கடினமான பணி. தமிழ் எழுத்தில் இரண்டு பத்தி கோர்த்தால், அதேநேரத்தில், ரோமன் எழுத்தில் நான்கு பத்தி கோர்த்துவிடலாம். இந்த இடர்ப்பாட்டிற்குக் காரணம், தமிழ் மொழியில் அதிக எழுத்துக்கள் இருப்பதுதான்.

**ஈ.வெ.ரா., கடந்த நூற்றாண்டிலேயே, தமிழ் எழுத்துக்களைக் குறைத்தார். அதைப்பார்க்கும் போதெல்லாம், 'இதை ஏன் நாம் செய்யக்கூடாது' என்ற எண்ணம், என்னுள் ஓடிக்கொண்டே இருக்கும். அப்படிச் செய்தால், அதைத் தமிழ் ஆசிரியர்கள் எதிர்ப்பர்.**

**இயந்திரம் மூலம், 'கம்போஸ்' செய்ய ஆரம்பித்த போது, நான் இலண்டன் சென்று, 'மேட்டரிஸ்' எல்லாம் சீர்திருத்த எழுத்துகளாக உருவாக்கிக் கொண்டு வந்தேன். அதன் மூலம், இரண்டு பத்தி கம்போஸ் செய்து, நாளிதழில் வெளியிட்டபோது, இரண்டாவது நாள், ஒரு தமிழ் ஆசிரியர் கடிதம் எழுதியிருந்தார். அதில், 'தினமலருக்கு எச்சரிக்கை, தமிழ் எழுத்துக்களை நீங்கள் கொலை செய்ய முற்பட்டால், உங்கள் அலுவலகம் முன், நான் தீ குளித்துச் சாவேன்' என எழுதியிருந்தார்.**

**இது, என் மனதில் கவலை, அச்சம் உருவாக்கியிருந்தது. நம்மால், ஒரு உயிர் போகக்கூடாது என நினைத்தோம். சில நாள்கள், அந்த சீர்திருத்த எழுத்துக்களை வெளியிடாமல் நிறுத்தினோம். ஆனால், மற்றவர்களிடமிருந்து எதிர்ப்பு வராததால், மீண்டும் சீர்திருத்த எழுத்துக்களை, நாளிதழில் வெளியிட ஆரம்பித்தோம். இதனால் உற்பத்தி, 2 மடங்கு கூடிவிட்டது.**

**இதை உணர்ந்து மற்ற பத்திரிகைகளும் செயல்படுத்த ஆரம்பித்தன. இதன்மூலம், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தானாகவே வந்துவிட்டது. ஈ.வெ.ரா. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். அதைக் கட்டாயமாக்கினார். அதன்பின், பாட நூல்களில் கொண்டு வந்தனர்.**

அதன் பின், தமிழ் எழுத்துக்களின் தொன்மையை ஆராய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் காரணமாக, தமிழ் பிராமி எழுத்துக்களைப் படித்தேன், 1966ஆம் ஆண்டு, தொல்லியல் துறை வெளியிட்ட நூலில், ஐராவதம் மகாதேவன் தமிழ் பிராமி எழுத்துக்கள் குறித்த கட்டுரை எழுதியிருந்தார். அதை வைத்துத் தமிழ் பிராமி எழுத்துக்களைப் படிக்க ஆரம்பித்தேன். அதன் பிறகு, அதனுடைய வளர்ச்சியாக, வட்டெழுத்துக்களையும் படிக்க ஆரம்பித்தேன்.

அதன்பிறகு, 'சேர நாட்டு வட்டெழுத்து' என்ற நூலை எழுதினேன். திருவனந்தபுரத்தில் உள்ள, தொல் எழுத்தியல் துறைக்குச் சென்றால், அங்கு ஏராளமான ஓலைச்சுவடிகள் உள்ளன. அதில், அக்காலத்தில் பயன்படுத்திய கோல எழுத்துக்கள் தான் அதிகம் காணப்படுகிறது. அதைப் பார்த்து, நூல் எழுதினால், முனைவர் பட்டம் நிச்சயம் கிடைக்கும்.

வாழ்க்கையில் முன்னேற, தொடர்ந்து படித்துக் கொண்டிருக்க வேண்டும். 1984ஆம் ஆண்டு, கொடைக்கானல் சென்றிருந்தேன். அங்கு ஒரு கடையில், பழைய நாணயங்கள் இருந்தன. ஒரு நாணயம், நீண்ட சதுர வடிவில் காணப்பட்டது. அதில், முன்புறம் யானை, பின்புறம் கோட்டு வடிவச் சின்னம் காணப்பட்டது. அதைப் பார்த்த போதே மிகத் தொன்மையானது எனத் தெரியவந்தது.

அதுகுறித்து விசாரித்து, நாணய வியாபாரியான, மதுரை தங்கைய்யா நாடார் என்பவரைச் சந்தித்தேன்; அவரிடம், சில நாணயங்கள் வாங்கினேன். அதன்பின் அவர் கூறிய, முகம்மது இஸ்மாயிலைச் சந்தித்தேன்; அவர் கொடுத்த தொன்மையான நாணயம் ஒன்றில், தமிழ் பிராமி எழுத்து காணப்பட்டது.

அதை ஆய்வு செய்த போது, 'பெருவழுதி' என்ற பெயர் இருப்பதைக் கண்டேன்; சங்ககால மன்னரின் பெயர் அது. அந்த சங்ககால நாணயத்தைக் கண்டறிந்தது, எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

**'சங்க காலத்தில், நாணயங்கள் வெளியிட வில்லை' என, வரலாற்று ஆசிரியர்கள் கூறிவந்தனர். இந்த நாணயம் கிடைத்த பின், சங்க காலத்தில் நாணயம் வெளியிட்டு உள்ளனர் என, உறுதி செய்யப்பட்டது.**

**கடந்த 1985ஆம் ஆண்டு, வாரணாசியில் உள்ள அகலி இந்திய நாணயவியல் மாநாட்டில், கட்டுரை சமர்ப்பித்தேன். அதை, நாணயவியலாளர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் நூலில், எனது கட்டுரை வெளியிடப்பட்டது.**

அதன்பின், திருக்கோவிலூரில் மலையமான் நாணயங்கள் கிடைத்தன. பின், சோழ நாணயங்கள் கிடைத்தன. ஆனால், சேர நாணயங்கள் மட்டும் கிடைக்கவில்லை. அதன்பிறகு, மதுரை தங்கய்யா நாடார், மீண்டும் கொடுத்த சில நாணயத்தில் வில், அம்பு சின்னம் காணப்பட்டது. கரூரில், இது கிடைத் திருக்கலாம் என நினைத்து, அங்குச் சென்றேன். நான் நினைத்தது போல கரூர் பஜார் பகுதியில் உள்ள, சிறு, சிறு பாத்திரக் கடைகளில் குவித்து வைத்திருந்தனர். அதில், ரோமன், கிரீக், சேர, சோழ நாணயங்கள் காணப்பட்டன.

இதில், பல நாணயங்கள், திருப்பூரில் உருக்கலுக் குச் சென்ற தகவலால், நான் மிக மனவேதனை அடைந்தேன். நாம் தமிழ் பெருமை பேசுவோம்; தமிழ் வரலாற்றின் தொன்மைப் பொருள்களைப் பாது காப்பதில்லை. கரூர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந் தது. கி.பி. முதல் நூற்றாண்டிலேயே, ரோமானியர்கள் கரூர் வந்து, 200 ஆண்டுகள் வாணிபம் செய்துள்ளனர்.

எனது, பழைய நாணயத் தொகுப்பை, சில நாள்கள் முன் ஆய்வு செய்த போது, ஒரு வித்தியாசமான நாண யம் கிடைத்தது. அதில், முன்புறம் யானை, பின்புறம் ஒரு மரம், மேலே 'கலபர' (galapara) என்று இருந்தது. அது, ரோமன் செம்பு நாணயம் போல இருந்தது. கலபரர் என்பவர் யார்? எங்கிருந்து வந்தனர் என்று, ஆய்வு மேற்கொண்டேன்.

இதில், கி.பி.3ஆம் நூற்றாண்டில், ஆந்திராவில் இருந்த சாதவாகனர்களின் பேரரசு உடைந்தது. அவர் களின் தளபதிகள் சிலர், தெற்கு நோக்கி வந்தனர். அப்படி வந்த கூட்டத்தின் ஒரு பகுதி, இவர்கள் இருக்க லாம். அதை வைத்து, ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். பிப்ரவரி 18இல், ஐதராபாத்தில் நடக்கவுள்ள தென்னிந் திய நாணயவியல் மாநாட்டில் சமர்ப்பிக்க உள்ளேன்.

**நம் வரலாற்றைத் திரும்ப எழுத வேண்டும். ஒரு வரலாற்று ஆசிரியர் தவறாக எழுதினார் என்றால், பேராசிரியராக இருந்த அவரின் எழுத்துக்கு மறுப்புக் கூற முடியாது என்று கூறுவது, தமிழகத்தின் தலையெழுத்தாக உள்ளது.**

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் விசயராகவன் பேசிய தாவது :

தொல்காப்பிய ஆய்விற்கு 50 இலட்சம் ரூபாயும்; ஓலைச்சுவடி பாதுகாப்பு மையத்திற்கு 40 இலட்சம் ரூபாயும், தமிழக அரசு ஒதுக்கியது. தமிழ் வளர்ச்சிக்கு இது பொற்காலம் என்று கூறலாம். ஏனென்றால், 325 கோடி ரூபாய்க்கு, தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டிற்குமுன் தமிழ் அறிஞர்களுக்கு, நன்கு விருதுகள் மட்டுமே வழங்கப் பட்டன. தற்போது 52 விருதுகள் வழங்கப்படுகின்றன.

பல்வேறு செயல்பாடுகள் மூலம், தமிழகத்தின் தொன்மை, பாரம்பரியத்தை மீட்டுத்தரும் நிறுவன மாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் விளங்குகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாகப், பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் சதீஷ் வரவேற்றார். ஆய்வு உதவியாளர் முரளி நன்றி கூறினார்.

நன்றி : தினமலர், சென்னை, 15.2.2017



## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **கோ.கதிரவன்** |
| பிறந்தநாள் | : | 06.09.1988 |
| கல்வித்தகுதி | : | B.E., MBA., |
| பணி | : | **SOURCING ANALYST,**<br>GEP SOLUTIONS PVT LTD., MUMBAI |
| மாதச்சம்பளம் | : | 50,000/- |
| சாதி | : | வன்னியர் |
| தந்தைபெயர் | : | க.கோவிந்தராசு, |
| தாய்பெயர் | : | கோ.முத்தொளி, |
| உடன்பிறந்தவர் | : | கோ.இளவேனில்<br>திருமணமானவர், |
| எதிர்பார்ப்பு | : | சுயமரியாதை திருமணம்,<br>மருத்துவம், |

பொறியியல் படித்த அழகும் சிறந்த குடும்ப பின்னணியும் கொண்ட மணமகள் தேவை.

முகவரி : 136,வெங்கடேஸ்வரா பாத்திர கடை,
காமராசர் சாலை, திட்டக்குடி-606106
தொடர்புக்கு : 9443562871 / 9003511862

# பல்லடம் மாணிக்கத்தின் பணிகளுக்குப் பாராட்டும் விருதும்! தொல்லியல், அறிஞர் பூங்குன்றனுக்கும் விருது!



17.2.2017 - வெள்ளி மாலை கோவை, பாரதிய வித்யாபவனில் திருவாளர்கள் பல்லடம் மாணிக்கம், முனைவர் இரா. பூங்குன்றன் ஆகிய இருவரின் வாணாள் பணிகளைப் பாராட்டி, முறையே தமிழ்ப் பணிச் செம்மல், தமிழ்மாமணி என்ற விருதுகள் அளிக்கப்பட்டன. இருவர்பாலும் நட்புப் பூண்ட சிற்பி. பாலசுப்பிரமணியம் இப்பாராட்டு விழாவுக்குக் காரண மாக இருந்தார். கிருஷ்ணராஜவானவராயர் நிகழ்ச் சிக்கு முன்னிலை வகித்தார். தமிழ்க் கலைக் களஞ்சியத் தொகுப்பாளர் பேராசிரியர் கி. சுப்பிரமணியம் விருதாளர் களை அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார். வரவேற் புரையைப் பேராசிரியர் இரா. இருசு நிகழ்த்தினார். வாழ்த்துரை வழங்கிய கவிஞர் சிற்பி தம் உரையில், பல்லடம் மாணிக்கம், தனி ஒரு மனிதராக இருந்து 'தமிழ் நூல் காப்பகம்' வழி ஓரிலக்கம் நூல்களுக்கு மேல் சேர்த்து, பல்லோரும் பயிலும் வண்ணம் உரு வாக்கியவர். 'வள்ளுவம்' என்னும் திங்கள் இதழைச் சிறப்பாக நடத்தியவர். அவருடைய 'ஆயிரம் பூ' கவி தைத் தொகுப்பே தம்முடைய 'நிலவுப்பூ' தொகுப்புக்குப் பெரும் உந்துதலாக இருந்ததென்றும் குறிப்பிட்டார். 'தேவி' திரைப்படத்திற்கு அனைத்துப் பாடல்களையும் இயற்றிய பாடலாசிரியர் பல்லடம் மாணிக்கம் என்றும், அவையினர் அறியாத, திரைச் செய்திகளைத் தொகுத் தளித்தார். 1812இல் வெளிவந்த முதல் திருக்குறள் தொடங்கி, குறள் தொடர்பில் 1500 நூல்கள்; 60 ஆண்டுகால 'நேஷனல் ஜியோகிரபி' இதழ்கள்; வேத, உபநிடத பதிப்புகள்; 100 வகைக் கலைக்களஞ்சியத் தொகுப்புகள் அவருடைய தமிழ்நூல் காப்பகத்தில் விருத்தாசலம் எனும் திருமுதுகுன்றத்தில் இருப்பதாகச் சிற்பி பட்டியலிட்டார்.

தமக்களிக்கப்பட்ட விருதைத் தமிழுக்குத் தத்தம் செய்வதாக ஏற்புரையில் பல்லடம் மாணிக்கம் குறிப்பிட்டு, தாம் அய்ந்து குறுக்கம் (ஏக்கர்) நிலத்தை விற்று நூலகத்தை அமைத்ததாகவும், தம்முடைய மக்களுக்காக அவ்வாறு செய்யவில்லை. இரு மகள்களும், மருமகன் களும் தம்முடைய அனைத்து வகைச் செயல்பாடு களுக்கும், ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறி, அவர்களுக்கு நன்றி பாராட்டினார். கூட்டத்தில் தம்மு டைய உடல் நலிவைப் பொருட்படுத்தாமல் கலந்து கொண்ட பெரும்புலவர் பல்லடம் மணியனாரின் பணிகள் குடத் திலிட்ட விளக்காகவே உள்ளன என்பதை மறவாமல் குறிப்பிட்டு, நா. மகாலிங்கம் போன்றோர் அப்பணி களை ஊக்கினர் என்றும் பதிவு செய்தார்.

தம்முடைய உரையின் பெரும்பகுதியை, அண் மையில் மெரினா கடற்கரையில் மாணவர்களும் இளையோரும் நிகழ்த்திக் காட்டிய, 'தைப்புரட்சி' பற்றி அலசிக்காட்டி, அது எவ்வாறு தமிழகத்திலும். அயலகத் திலும் பெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது என்று விளக்கினார். கோவையில் 'தமிழ் மையம்' ஒன்றைக் கட்டாயம் நிறுவும்படி, கூட்ட ஏற்பாட்டாளரிடமும், அரங்கில் நிரம்பி வழிந்த கூட்டத்தினரிடமும் கோரினார். நாளுக்கு நாள் தமிழ் நலிந்து வருவதையும் தம் உரையில் சுட்டிக்காட்டினார்.

**எந்த நூலை வாங்கினாலும், சிறப்பான நூல் எனில் 10 படிகளாவது வாங்கி நண்பர்களுக்கு அளிப் பார் என்று பல்லடம் மாணிக்கத்தின் பண்பு நலனை அனைவரும் குறிப்பிட்டனர். இந்நிகழ்விலும் கோவை 'விடியல் பதிப்பகம்' வெளியிட்ட, 'பெரியார் இன்றும் என்றும்' நூலை வாங்கி வானவராயர் உட்படப் பலருக் கும் மாணிக்கம் அளித்தார்.**

அவருடைய வாணாள் நூல் தொகுப்பை, ஒரு கட்டத்தில் அரசு பெறுவதற்கு முயன்றது. என்னும் செய்தியை உரையாளர் ஒருவர் கோடிட்டுக் காட்டினார்.

'தமிழ் மாமணி' என்ற விருது பெற்ற முனைவர் இரா. பூங்குன்றன் தொல்லியலிலும் கல்வெட்டாய் விலும் தலைசிறந்தவர் எனவும், பல்லடம் மாணிக்கம் கொங்கு நாட்டிலிருந்து தொண்டை நாடு சென்று தமிழ்ப்



பணி ஆற்றிவருவது போல், தொண்டை நாட்டிலிருந்து வந்து கொங்கு நாடு பற்றிய ஆய்வுகளை முனைப்பாக முன்னெடுத்தவர் என்றும் பாராட்டப் பெற்றார். **'அத்தி கோசத்தார்'** என்போர் (கல்வெட்டுகளிலும், இலக்கியங் களிலும் பரவலாகக் குறிப்பிடப்படுவோர்) **யானை வணிகர்** என்பதை, பூங்குன்றனே விளக்கி உரைத்தார் என்றும், அவர் புலவர் செ. இராசுவுடன் இணைந்து, ''ராஜகேசரிப் பெருவழி'' என்னும் தொன்மை வாய்ந்த நெடுஞ்சாலையைக் கண்டறிந்து அறிவித்தார் என்றும், பூங்குன்றனின் பெரும்பாலான எழுத்துகள் இன்னும் நூல் வடிவம் பெறவில்லை என்றும், தமிழகத்தின் கருத்தாணை பெற்ற கல்வெட்டு/வரலாற்று ஆய்வாளர் களில் முதலிடத்தில் இருப்பவர்களில் ஒருவர் பூங்குன்றன் என்றும் பாராட்டினர். திராவிட மொழியியல் அறிஞர் முனைவர் கமலேசுவரன் உட்படப் பேராசிரியர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டனர். பேராசிரியர் கனல் மைந்தன் உட்படப் பலர் விருதாளர்களுக்குச் சால்வை அணிவித்தனர்.

திரு. தண்டாயுதம் நன்றி உரையாற்றிக் கூட்டத் தை நிறைவு செய்தார்.

செய்தி : பூளைமேடு மடங்கன்.
(அத்தி = ஹத்தி = யானை என்பது, இந்தி மொழிச் சொல்) - ஆசிரியர்

## சிங்காரவேலரும் பிற சிந்தனையாளர்களும் நூல் அறிமுக விழா

சிங்காரவேலரும் பிற சிந்தனையாளர்களும் நூல் அறிமுக விழா, 14.2.2017 செவ்வாய் மாலை 6 மணிக்கு, சென்னை, ஒய்.எம்.சி.ஏ. மன்றத்தில் வே. மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. கெ. பக்தவச்சலம் வரவேற்புரையாற்றினார். சி. மகேந்திரன், வீ. அரசு ஆகியோர் நூலை அறிமுகம் செய்தனர். பு.சி. கிருட்டிணமூர்த்தி நன்றியுரையாற்றினார்.

## தமிழ் விழா

*பாவாணர் பிறந்த நாள் விழாவும் தனித்தமிழி யக்க நூற்றாண்டு விழாவும் தி.ஆ.2048-கறவம் 26ஆம் நாள் மாலை முரம்பு பாவாணர் பாசறையில் நடைபெற்றன. பிறந்த நாள் பேரணியின் முடிவில் பாவாணர் கோட்டத்தில் உள்ள பாவாணர் சிலைக்கு முனைவர் க. எழிலிறைவன் மாலை அணிவித்தார். பாவாணர் கோட்டப் பொறுப்பாளர்களின் உரை களுக்குப்பின் மலையக உ.த.க. தலைவர் பாவலர் பொன். பூங்குன்றன் உரையாற்றினார்.*

*பாவலர் கதிர். முத்தையன் எழுச்சியுரை ஆற்றி னார். முனைவர் ந. அரணமுறுவலின் ''ஏன் ஒதுக்க வேண்டும் இந்தியத்தை-திராவிடத்தை'', என்னும் நூலை, உ.ச. எழில் நூலறிமுகம் செய்தார். 'தனித் தமிழ்ப் பணியாளர்' விருதுகளை வெங்காலூர் சி.சி. தென்னவன், புதுவை வெற்றிவேந்தன், மதுரை க.வெ. நெடுஞ்சேரலாதன், நெல்லை சங்கு, அரச பாளையம் பாவலர் மு. முத்தரசு பெற்றுக் கொண்டு ஏற்புரை வழங்கினர்.*

*திட்டமிட்டுச் செயல்படும் திருவண்ணாமலை உ.த.க. கிளையின் பாராட்டு விருதைச் சொ.சோ. இளங்கோவன், பாவலர் ப. குப்பன், புகழேந்தி இணைந்து பெற்றுக் கொண்டனர். பாவாணர் கொள் கைப் பரப்புநர் விருதைத் தரங்கை. பன்னீர்ச் செல்வம் பெற்று ஏற்புரையாற்றினார். பத்து வகை யான தமிழியப் போட்டிகளில் கலந்து வென்ற மாணவ, மாணவிகளுக்கு மருத்துவர் பா. மலர்வழி பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.*

*''தமிழ் மீட்பர் வழியில்'' என்னும் தலைப்பில் முன்னாள் செம்மொழித் தமிழாய்வு நிறுவன அலுவலர் முனைவர் க. எழிலிறைவன் சிறப்புரை யாற்றினார். விழா ஒருங்கிணைப்பை க. வெற்றிக் குமரன், தமிழ்மறவன், எ. அரசகுரு, அ. இளங் கண்ணன், ஆ. நெடுஞ்சேரலாதன், இல. நில வழகன், மு. உலகநாயகன், உறுப்பினர்கள் சேர்ந்து செய்தனர்.*

*செய்தி :* ***ஆ. நெடுஞ்சேரலாதன்***

# புரிந்துகொள்ளப்படாத பசுமைச் சிந்தனையாளர்

காந்தியப் பொருளாதார மேதை ஜே.சி. குமரப்பாவின் 125ஆம் ஆண்டு நிறைவின்போது, அவருடைய சிந்தனைகளை நினைவுகூர்வது மிகவும் அவசியம். வேளாண்மையும் நமது உடல்நலமும் இன்றைக்குக் கண்டுள்ள சீரழிவை, அன்றைக்கே முன்னுணர்ந்து எச்சரித்த தீர்க்கதரிசி குமரப்பா.

**சிறுதானிய ஆதரவு**

**ஒருமுறை தமிழக முதல்வர் காமராசர் குமரப்பாவைச் சந்திக்க வந்திருந்தபோது, அவரிடம் சில கருத்துகளைக் குமரப்பா முன்வைத்தார். கிராமப்புறங்களில் மின்சார நீர் இறைப்பான்களையும் கிணற்றுப் பாசனத்தையும் விரிவுபடுத்துவதை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும் என்பது அவர் முன்வைத்த முதல் கருத்து. அதற்கு மாற்றாக ஏரிகளையும் குளங்களையும் அரசு விரிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.**

கிராம வேளாண்மையில் புஞ்சைப் பயிர்களான சிறு தானியங்கள், தீவனங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்புகள் போன்றவை உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்துக்கானவை. மின்சார நீர் இறைப்பான் கூடவே வரும், பணப் பயிர்களான கரும்பு, வாழை, பருத்தி, புகையிலை ஆகியவற்றின் வரவு கிராம மக்களின் நலனுக்காக இல்லாமல், பெருநகரங்களின் வணிகத் தேவைகளுக்காக வேளாண்மையைத் தலைகீழாக மாற்றிவிடும் என்றார்,

தீட்டிய அரிசியின் நுகர்வை அதிகப்படுத்துவது மக்களின் உடல்நலத்துக்கும், பொருளாதார நலனுக்கும், கிராமியப் பொருளாதார நலனுக்கும் பெருங்கேடாக முடியும் என்பது குமரப்பாவின் வாதம், தீட்டிய அரிசியைக் காட்டிலும், சிறுதானியங்களும், தீட்டாத அரிசியும் மக்களின் நலனுக்கு ஏற்றவை என்றார். தீட்டிய அரிசி நீரிழிவு நோயையும், வைட்டமின், தாதுப் பொருட்களின் குறைவையும் ஏற்படுத்தும் என எச்சரித்தார்.

**சர்க்கரை ஆலைக்கு எதிர்ப்பு**

பிறகு தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் பெருமளவில் தொடங்கப்பட்ட போது, குமரப்பா அவற்றை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். கரும்பு உற்பத்தி, வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி, அதனுடன் சேர்த்து எரிசாராய உற்பத்தி ஆகியவற்றுக்கு ஆதரவாகக் காங்கிரஸ் அரசு சட்டங்களையும் கொள்கைகளையும் கொண்டுவந்து கொண்டிருந்தது. சர்க்கரை ஆலைகளுக்குப் பதிலாக பனைமரங்கள் தரும் பதநீரையும், கருப்பட்டியையும் மேம்படுத்த அரசு பெரும் முதலீடு செய்ய வேண்டும் என்பது அவருடைய கோரிக்கை. பதநீரும், கருப்பட்டியும் உடல்நலத்துக்கு அமிர்தம் போன்றவை என்பது அவருடைய வாதம்.

உணவு தரும் நல்ல நிலங்களைக் கரும்புச் சாகுபடிக்கு மாற்றுவதற்கு மாறாக, உபயோகமற்றுக் கிடக்கும் நிலங்களில் பெருமளவு பனைமரங்கள் வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். ஆலை முதலாளிகளுக்கு, எரிசாராய வியாபாரிகளுக்குப் பெரும் இலாபத்தைத் தரும் சர்க்கரை ஆலைகளுக்குப் பதிலாக, ஏழைத் தொழிலாளர்களுக்கு வாழ்வு தரும் பனைத் தொழிலை மேம்படுத்த வேண்டும் என்றார் குமரப்பா. இப்படித் தொடர்ச்சியாக அவர் முன்வைத்த கருத்துகளால் 'பசுமைப் பொருளாதாரச் சிந்தனையின் சிற்பி' என்று அவர் போற்றப்படுகிறார்.

**விடுதலைப் போரில்...**

முனைவர் ஜே.சி. குமரப்பா, 1892ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி தஞ்சாவூரில் பிறந்தார். இலண்டனில் தணிக்கையாளராகத் தகுதிபெற்ற பின், அமெரிக்காவின் புகழ்பெற்ற கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் பொது நிதி குறித்து குமரப்பா ஆய்வு செய்தார். இந்தியாவில் வறுமையைத் தூண்டும் முக்கியக் காரணி அரசின் கொள்கைகளே என்று அந்த ஆய்வில் கண்டறிந்தார். விவசாய நெருக்கடி, உணவுப் பஞ்சம், பட்டினிச் சாவு, கிராமங்களின் வீழ்ச்சி ஆகிய வற்றுக்குக் காரணம் ஆங்கிலேய அரசின் கொள்கைகள். இங்கிலாந்தின் அபாரமான வளர்ச்சிக்கு உறுதுணையாக அந்தக் கொள்கைகள் உருவக்காப்பட்டன என்பதே அவருடைய ஆய்வு முடிவு.

இலண்டனிலும் பின் அன்றைய பம்பாயிலும் வெற்றிகரமாக ஆடிட்டர் தொழிலை நடத்தி வந்த குமரப்பா, தொழிலையும் ஆடம்பர வாழ்வையும் துறந்து, 1929ஆம் ஆண்டில் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் பணிபுரிய முன்வந்தார். அதன் பிறகு காந்தியடிகளின் 'யங் இந்தியா' வார இதழின் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். அப்போது ஆங்கிலேய அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகக் குமரப்பா கடும் வாதங்களை முன்வைத்தார். அவரின் புரட்சிகர எழுத்துக்களுக்காக ஆங்கிலேய அரசால் மூன்று முறை சிறைத் தண்டனையும் அனுபவித்தார்.

**கொள்ளைப் பொருளாதாரம்**

**அவரது கருத்துகள் நிலைபெற்ற பொருளாதாரத் தத்துவங்களைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் புரட்சிகரமான வாதங்களை முன்வைத்தன. பெருந்தொழில்களும், பெரும் பொருளாதார அமைப்புகளும் அரசின் ஆதரவுடன், மோசமாகவும் அநீதியாகவும் சிறுதொழில்களையும், மக்களின் பரவலான பொருளாதார அமைப்புகளையும் அழித்து உருவாக்கப்பட்டவை என்பதை அவர் உறுதியாக எடுத்துக்காட்டினார். கிராமங்களும் கைத்தொழில்களும் வேளாண்மையும் ஆங்கிலேய அரசின் வஞ்சத்தினால் வீழ்த்தப்பட்டன என்பதையும் அவர் வலியுறுத்தினார். வளர்ச்சி, அறிவியல் தொழில்நுட்பம், முன்னேற்றம் போன்ற பசுத்தோல்களால் அந்த அநீதிகள் மறைக்கப்பட்டுள்**

**என என்றார். இன்றைக்கு நாம் பெரிதும் வலியுறுத்திக் கொண்டிருக்கும் பெருந்தொழில்கள், பெரும் பொருளாதாரங்கள், வல்லரசுகள், பெருந்தேசங்கள் ஆகியன இயற்கையையும், எளியவர்களையும் உறிஞ்சியே உருவாகவும், காலப்போக்கில் நிலைக்கவும் முடியும் என்பதை அன்றே அவர் சுட்டிக்காட்டினார்.**

**விலை மதிப்பில்லாத இயற்கை வளங்களைப் பெருந்தொழில்களுக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் அரசின் கொள்கைகள் எடுத்துக் கொடுக்கின்றன. குறிப்பாக நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற எரிபொருட்கள் நம்ப முடியாத அளவுக்குக் குறைந்த விலையில் அள்ளி அள்ளிக் கொடுக்கப்படுவதால், பெருந்தொழில்களின் உற்பத்திச் செலவு பெருமளவு குறைகிறது. எளிய மக்கள் உடல் உழைப்பால் தங்களுடைய தன்னிறைவுக்காக உற்பத்தி செய்யும் பொருட்கள், வலிந்து விலை குறைக்கப்பட்ட இந்தப் பெருந்தொழில் உற்பத்தியுடன் போட்டிப் போட முடிவதில்லை. இயற்கையைக் கொள்ளையடித்துக் குறுகிய காலத்தில் அளவில்லாது உற்பத்தி செய்து பெருஞ்செல்வம் ஈட்டும் பெருந்தொழில்களும், பெரும் பொருளாதாரமும் இயற்கை வளங்களை முற்றிலும் அழித்தொழிக்கும் அம்சங்கள் என்றார் குமரப்பா, இதைக் 'கொள்ளைப் பொருளாதாரம்' என்றே அவர் அடையாளம் காட்டினார்.**

### அழிவற்ற பொருளாதாரம் எது?

**பரவல் முறை உள்ளூர்ப் பொருளாதாரம் வளம் சேர்ப்பதாகவும், வளர்ச்சியை அனைவருக்கும் பகிர்ந்து தருவதாகவும், இயற்கையைப் பேணுவதாகவும் இருக்கும் என்று அவர் நம்பினார். இயற்கையோடு இயைந்த எல்லைக்கு உட்பட்ட பொருளாதாரம் அழிவற்ற பொருளாதாரமாகப் பல்லாயிரம் ஆண்டுகள் தொடரும் என்பது அவருடைய நம்பிக்கை. குமரப்பா தனது கருத்துகளைத் தொகுத்து 'அழிவற்ற பொருளாதாரம்' என்ற நூலாக 1942ஆம் ஆண்டு வெளியிட்ட போது, மகாத்மா காந்தி அவருக்கு டாக்டர் பட்டத்தை வழங்கினார். அப்போது குசராத் வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் வேந்தராக காந்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.**

### கனவுக்காகப் போராட்டம்

காந்தியப் பொருளாதாரத் தத்துவத்தின் அதிகார பூர்வ கருத்தாளராகப் போற்றப்பட்ட குமரப்பா, தனது வாழ்வின் பெரும் பகுதியைக் கிராமியத் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகச் செலவிட்டார். 1934ஆம் ஆண்டு காந்தி தலைமையில் தொடங்கிய அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றிய குமரப்பா, அழிந்துவரும் கிராமத் தொழில்களை மீட்டெடுப்பதற்காகக் கடுமையாகப் பாடுபட்டார். காந்தியின் சேவா கிராம ஆசிரமத்தின் அருகே 'மகன் வாடி' என்ற பெயரில் கிராமத் தொழில்களுக்கான தேசிய மையத்தை அமைத்தார். அதன் தொடக்க நாள்களில் குமரப்பாவுடன் காந்தியும் தங்கி, அவருடைய பணிகளுக்கு மதிப்புக் கூட்டினார். பிரம்மச்சாரியான குமரப்பா ஒரு எளிய விவசாயியைப் போல, தனது வாழ்வு முழுவதையும் மாற்றிக்கொண்டு காந்திஜியின் கனவான கிராமியப் பொருளாதாரத்துக்கான தீரம் மிகுந்த போராட்டத்தை நடத்தினார்.

கிராமியம், சிறுதொழில்கள், இயற்கையைப் பேணுவது, சிற்றளவுப் பொருளாதாரம், எளிய வாழ்வு, சேமிப்பு, பகிர்வு போன்ற கருத்துகளை முன்னெடுத்துச் சென்ற ஆரம்ப நாள்களில் அவருக்குத் துணை நின்றவர்கள் மிக மிகக் குறைவு. **'கிராமம் எளியவர்களின் சரணாலயம், பெருநகரங்கள் சுரண்டிக் கொழிப்பவர்களின் பாசறை' என்பது அவரின் வாதம்.** நகரங்கள் வன்முறையின், சுரண்டலின் அடையாளச் சின்னங்கள் என்ற காந்தியின் நிலைப்பாட்டை சரியாகப் புரிந்துகொண்ட மிகச் சிலரில் குமரப்பா முதன்மையானவர். காந்தியின் மற்ற சகாக்களான நேரு, படேல், இராஜாஜி, இராஜேந்திரபிரசாத் போன்றவர்களால் குமரப்பாவின் கருத்துகள் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குமரப்பா ஒரு தீர்க்கதரிசி, அவரின் நுட்பமான கருத்துகள், பல்லாண்டுகள் முன்கூட்டிய சிந்தனையில் உருவானதால், அவருடைய கருத்துகளை எவரும் புரிந்துகொள்ளவில்லை.

### எங்கெங்கும் ஒலிக்க வேண்டிய குரல்

காந்தியின் மறைவுக்குப் பின் சேவா கிராம ஆசிரமத்திலும், பண்ணை ஆசிரமத்திலும் கிராமியத் தொழில் வளர்ச்சிக்காகவும், இயற்கை வேளாண்மை மேம்பாட்டுக்காகவும் பல்வேறு முன்னோடிப் பரிசோதனைகளைக் குமரப்பா செய்து பார்த்தார். மதுரை மாவட்டம், கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தின் பணிகளால் கவரப்பட்ட குமரப்பா, 1954 முதல் தனது ஓய்வுக்காலத்தை அங்கு செலவிட்டார். 1960ஆம் ஆண்டு சென்னை பொது மருத்துவமனையில் குமரப்பா காலமானார். கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமத்தில் அமைந்துள்ள அவருடைய சிறிய குடில், நினைவிடம், எளிய அருங்காட்சியகம் போன்றவை அவருடைய வாழ்வுதந்த செய்தியை இப்போதும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

வளர்ச்சி என்ற பெயரில் நுகர்வுப் பேராசைக்காக உற்பத்தி செய்யும் பெருந்தொழில்களையே, அரசும் நன்கு படித்த மேதாவிகளும் அன்றும் இன்றும் ஆதரிக்கின்றனர், சுதேசி என்ற வார்த்தையைச் சொல்ல இன்று நாதி இல்லை, 'இந்தியாவின் எளிய மக்களுக்காக உற்பத்தி' என்ற கருத்து தூக்கி எறியப்பட்டு-வெளிநாட்டு நிறுவனங்கள், வெளிநாட்டவர்களுக்கு உற்பத்தி செய்யும் கூலிப்பட்டறையாகவும், சுற்றுச்சூழல் குப்பைத் தொட்டியாகவும் மாற்றப்படும் காலத்தில், குமரப்பாவின் கருத்துகள் மிக அரிதானவை, எங்கேயோ கேட்டதாக இருந்த குமரப்பாவின் குரல், எங்கெங்கும் ஒலிக்க வேண்டிய குரலாக உள்ளது.

**- வ. ரகுபதி**

*காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகப் பேராசிரியர்*

# நடுத்தர மக்களை ஏமாற்றும் இந்திய அரசியல்

இருபது ஆண்டுகளுக்கு முன்பு பொழுதுபோக்கிற்கும் வருமானத்திற்கும் கீரியும் சண்டை போடப் போகின்றது, வாங்க! வாங்க! என்று வித்தைக்காரன் கூப்பிட்டு, கடைசி வரைக்கும் வித்தை காட்டாமல், சிலரை மடக்கி உங்களுக்கு தோசம் உள்ளது; இந்தக் கயிறு கட்டினால் இதுபோகும்; இந்த நேரத்தில் இதைப் பயன்படுத்தாதீர்கள் என்று கூறி, மந்திரக் கயிறு வியாபாரம் செய்வான். பின்னர், பயந்த முகங்களைக் கண்டு அவர்களைக் குறிவைத்து, "உங்களுக்குக் குடும்பத்தில் பிரச்சனை; சடங்கு செய்தால் சரியாகி விடும்" என்றுகூறி, அதிகத் தொகை வாங்கிக் கொண்டு, சடங்கு செய்வார்கள். ஆனால், இதுபோன்ற வித்தைக்காரர்கள் செயலால் எந்தப் பயனும் இல்லை. எனினும் வித்தைக்காரன் பிழைப்பு நன்றாக இருக்கும்.

ஆனால், இன்று நம் நாட்டு மக்களை ஆளும் மத்திய, மாநில அரசுகள் அனைத்தும் மக்கள் நலன் பற்றிக் கவலைப்பட்டதில்லை. நதிநீர் பிரச்சனை, நல்ல மருத்துவம், சமச்சீர் கல்வி, குடிநீர் மக்களுக்கு எளிதில் கிடைக்க வழிசெய்யவில்லை. மருத்துவ வியாபாரம், கல்வி வியாபாரம், குடிநீர் வியாபாரம் தொடங்கிவிட்டனர். இவை நடுத்தட்டு மக்கள் வரை உள்ளவர்களுக்கு எட்டாக்கனியாக உள்ளது. வருவாய்க்கு வழியில்லை என்று மதுக்கடைகளை அரசே ஏற்று நடத்துகின்றது. சிந்தித்தால் நல்லவர், கெட்டவர்; நல்லது, கெட்டது தெளிவாகிவிடும். சிந்திக்காமலிருக்கவே சமச்சீர் கல்வி தரப்படவில்லை. மது மட்டும் அரசே ஏற்று நடத்துகின்றது. மத்திய அரசு ஆட்சிக்கு வருமுன் வெளிநாட்டில் கணக்கில் காட்டாத பணம் 20 ஆயிரம் கோடி உள்ளது. அதை இந்தியாவுக்குக் கொண்டு வருவோம். ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் அந்தப் பணத்தைப் பகிர்ந்து கொடுப்போம். அதனால், அனைவரும் வங்கிக் கணக்கை வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் பணம் போடப்படும் என்ற ஆசை காட்டினார்கள். வெளிநாட்டில் கணக்கில் வராத பணம் வந்திருந்தால், மக்கள் கணக்கில் பணம் வந்திருக்க வேண்டும். இது மக்களை ஏமாற்றிய ஒரு வித்தை.

உள்நாட்டில் கணக்கில் வராத பணத்தைக் கண்டு பிடிப்போம் என்று கூறி, அம்பானி உறவினரை ரிசர்வ் வங்கி ஆளுநராக்கிவிட்டார், மோடி இனி பணம் என்ற பரிமாற்றமில்லை. அம்பானி கொடுக்கும் பணப்பரிமாற்றும் கணினிமயமான இயந்திரத்தின் வழியாகப் பணம் மாற்றப்படும்.

வாக்குப் போட்ட உங்களை, ஒரு நாளைக்கு இவ்வளவு தான் பணம் எடுக்க வேண்டும்; அளவுக்கு அதிகமாக எடுக்க, செலவு செய்ய உரிமை இல்லை என்கிறது அரசு. உரிமை இல்லாத மக்கள் வாழும் நாடு எப்படி ஒரு சுதந்தர நாடாக இருக்கும்? சிந்திக்கவும்.

பணம் என்று அச்சிட்ட தாள் ஒரே நொடியில் வெற்றுத் தாளாக்கப்பட்டது. இப்படி விரைந்து முடிவெடுக்கும் அரசு, கல்வியில் ஏற்றத்தாழ்வை அகற்றவில்லை; நதிநீர் பிரச்சனைகளை தீர்க்கவில்லை; மதுவை ஒழிக்கவில்லை. இப்படி செயல்படுவதால் மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோதத்தன்மை வெளிப்படுகின்றது.

சபை நாகரிகம் தெரியாத-சட்ட திட்டங்களைப் படிக்காத, கண்டதைத் தின்னும் பன்றி போல் செயல்படுபவர்களை, இனியும் இம்மக்கள் தேர்ந்தெடுத்தால், தானே தன் தலையில் மண்ணைப் போட்டுக் கொண்டதற்குச் சமமாகும்.

சிந்தனை வளத்தைத் தூண்டிச் செயல்படுங்கள்! செயல்படுங்கள்!

**- உழவர் மகன் ப.வ.**

## அயல்நாடுகளிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதி இந்தியா முதலாவது இடத்தில்!

### 2012-2016 ஆண்டுகளில் அயல்நாடுகளிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடுகள்

| நாடு | மொத்த இறக்குமதியில் எத்தனை விழுக்காடு |
|---|---|
| இந்தியா | 13.0 % |
| சவுதி அரேபியா | 8.2 % |
| யுனைடெட் அரபு எமிரேட் | 4.6 % |
| சீனா | 4.5 % |
| அல்ஜீரியா | 3.7 % |
| துருக்கி | 3.3 % |
| ஆஸ்திரேலியா | 3.3 % |
| ஈராக் | 3.2 % |
| பாக்கித்தான் | 3.2 % |
| வியட்நாம் | 3.0 % |

**இந்தியா அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது ஏன்?**

1. உள்நாட்டில் வலிவான ஆயுதங்களை உருவாக்கும் திறன் பெருக்கப்படாததால்!
2. "இந்தியாவில் உற்பத்தி செய்ய வாருங்கள்" என அழைத்த பிறகும், இந்தியாவில் இன்னமும் தொழில்நுட்பத்தைக் கட்டமைக்காததால்

Source : Stockholm International Peace Research Institute

# தேவதாசி ஒழிப்புச் சட்டம்!

- ஈ.வெ.ரா.

கோயில்களில் பெண்களைப் பொட்டுக் கட்டு வதைத் தடுக்கச் சட்டம் செய்ய வேணுமாய் திருமதி. முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தைச் சர்க்கார் நமக்கு அனுப்பி, அதன்மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக் கின்றார்கள்.

இதற்காகச் சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிரா யம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில், கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டி அவர்களையே பொதுமகளிர்களாக்கி நாட்டில் விபசாரித்தனத்திற்குச் செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய தானங் களில் தாராளமாய் இடமும் அளித்துவரும் ஒரு கெட்டவழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றியும், நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்புப்கே உரியது என்பதாகி, இயற்கையுடன் கலந்த ஒரு தள்ளமுடியாத கெடுதியாய் இந்தநாட்டில் நிலைபெற்றும்விட்டது. ஒரு நாட்டில் நாகரிகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதை யையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத் தையோ, கோரின அரசாங்கமாகவாவது ஒன்று இருந்தால் இந்த இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், தேசிய வழக்கத்தின் பேராலும் இருந்துவர ஒருகண நேரமும் விட்டுக் கொண்டு வந்திருக்காதென்று சொல்லுவோம்.

**ஆனால், நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடிபுகவும் நிலைபெறவும், நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும், உதவியாகவும் இருந்து வந்ததால், அப்பார்ப்பனர்களுக்கு அனுகூல மாக வெள்ளைக்காரர்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால், அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து (வெள்ளைக்காரர்கள்) தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் பட்டுவிட்டார்கள்.**

இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர் களுக்கு விரோமாய்ச் சீர்திருத்தத் துறையிலாவது, மனிதத்தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். ஆனால், இப்போது கொஞ்சகாலமாய் அப்பார்ப்பனர்களின் தந்திரத்தையும் சூழ்ச்சியையும் கண்டுபிடித்து அவர்களது யோக்கிய தைகளை அடியோடு வெளியாக்கி சீர்திருத்தங்களை உத்தேசித்து நாமும் வெள்ளைக்காரர்களை மிரட்டக் கூடிய சமயம் மிரட்டியும், ஆதரிக்கக்கூடிய சமயம் ஆதரித்தும் பார்ப்பனர்களின் செல்வாக்கை ஒழித்து நமது சக்தியையும் தீவிர ஆசையையும் காட்ட ஆரம் பித்துவிட்டதால், இப்போது ஏதோ சிறிது அளவுக்காவது சர்க்காரார் சீர்திருத்தத் துறையில் நமது இஷ்டத்திற்கும் இணங்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

**இந்த நிலைமையின் பலனேதான் இப்போது நமது கொள்கைகள் சிலது நாட்டில் பிரச்சாரம் செய்ய வும் செல்வாக்குப் பெறவும் இடம் ஏற்பட்டதும், சட்ட சபையில் இதுசமயம் ஒரு முடிவைப் பெற்றுத் தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டுப் பொதுஜன அபிப் பிராயத்திற்கு வரநேர்ந்ததுமாகும்.**

நிற்க. இப்போது திருமதி. டாக்டர் முத்துலட்சுமி அம் மாள் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப் பட்டிருக்கும், பொட்டுக்கட்டுவதை ஒழிக்கும் இந்த மசோதாவானது, வெகுகாலமாகவே, ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களிலும், பொது மகா நாடுகளிலும் கண்டித்துப் பேசப்பட்டிருப்பதுடன், இம் மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி பிரதாபிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. **இவ்வாறெல்லாமிருக்க, இச்சட்டத் திற்குப் பொதுஜன அபிப்பிராயத்தை அறிய விரும்பு வானேன்? என்பது விளங்கவில்லை. இந்த நாள்பட்ட- கொடிய சமூகக் கொடுமையை ஒழிக்க யாருக்கும் ஆட்சேபணையோ, எதிர் அபிப்பிராயமோ இருக்கவே முடியாது, இந்தியத் தலைவர்கள் கூறியிருப்பதுபோல், தேவதாசி என்று ஒரு வகுப்பு இருப்பது இந்து சமுதாயத்திற்கே இழிவானது மல்லாமல், இந்து மதத்திற்கே பெரும் பழியுமாகும்.**

ஒரு தனிப்பட்ட பெண்ணுக்கு ஏற்படும் இழிவு, பெண்ணுலகிற்கே ஏற்பட்டதாகுமாகையால் இவ்வழக் கம் பெண்களின் அந்தஸ்தையும், கவுரவத்தையும் பெரிதும் பாதிக்கக் கூடியதாயிருக்கிறது. அன்றியும் ஒரு குறிப்பிட்ட சாதியையோ, சமூகத்தையோ, விபச்சாரத் திற்கு அனுமதி கொடுப்பதும், பின்னர் அவர்களை இழிந்த சமூகமாகக் கருதுவதும் பெரும் சமூகக் கொடு மையாகும். சிறு குழந்தைகளிலிருந்தே இத்தகைய துராசார வழிகளில் பயிற்றுவிப்பது ஜனசமூக விதி களையே மீறியதாகும். எனவே இப்படிப்பட்ட நிலை மையில் இனி இதைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை.

பொதுஜனங்கள் எந்தவிதத்திலாவது இந்தச் சட்டத் தை ஆட்சேபிப்பார்களா என்று எண்ணுவதும் ஒன்று முட்டாள்தனமாகவோ அல்லது யோக்கியப் பொறுப் பற்றத் தன்மையாகவோதான் இருக்க வேண் டும். ஏனெனில் இந்து சமூகத்தில் கடவுள் பேரால், மதத்தின் பேரால் விபச்சாரிகளை எற்படுத்த வேண்டும் என்று எந்த சமூகத்தாரோ, தேசத்தாரோ கருதுவார்ளானால், அவர்களைப் போல் காட்டுமிராண்டிகளோ கெட்டவர் களோ இருக்கவே முடியாது.

**மற்றபடி எந்த சமூகமாவது இம்மாதிரியான தொழில் தங்கள் வகுப்புக்கு இருக்க வேண்டுமென்று கேட்பார்களேயானால் அவர்களைப்போல் சுயமரி யாதையற்றவர்களும் இழிகுலமக்களும் வேறு யாரும் இருக்க முடியாது.**

- “குடிஅரசு”, 23.03.1930

## ஆசிரியருக்கு மடல்

தோழர் ஆனைமுத்து அவர்கட்கு வணக்கம். தங்களின் 20.02.2017 தேதியிட்ட 05.03.2017 - தேதியில் சென்னை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள கட்சியின் பொதுக் குழு கூட்ட அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. பொதுக்குழுவுக்கு வருகின்றேன்.

நம் கட்சி, கலை இலக்கிய மன்றம் மற்றும் அறக்கட்டளை உறுப்பனர்களின் முகங்கள் தெரியவில்லை. வயது முதிர்வு காரணமாகவும், உடல்நிலை பாதிப்பிலும் மரணம் அடையும் தோழர்கள், மறைவு செய்தியைக் கைப்பேசி மூலம் அறியும் போது, அவரின் முகமோ, அன்னாரின் குடும்ப விவரமோ அறிய இயலவில்லை.

மேலும் நம் தோழர்கள் குடும்ப சுற்றுலாவோ, அல்லது வேறு பணிகள் காரணமாகவோ, அல்லது எதிர்பாரா நிலையிலோ ஒரு ஊருக்குச் செல்கின்றார் என்றால், அந்த பகுதியில் நமது தோழர்கள் யாரேனும் இருக்கிறார்களா, இல்லையா, அவர்களை ஏதேனும் உதவிக்கு அழைக்க முடியுமா என்கின்ற விவரம் தெரியவில்லை.

இவ்வளவு காலம் நம் கட்சி, மன்றம் வளர்ச்சிக்கு உண்மையாக இருந்து, தன்னையும், தம் குடும்பத்தையும் கொள்கை ரீதியாக வளர்த்து உள்ள தோழர்கள் மட்டும் யார், யார்? அவர்கள் உருவம் எப்படியுள்ளது? அவரின் துணைவியார் யார்? அவர்கள் என்ன செய்கின்றார்கள்? பிள்ளைகள் எத்தனை? என்ன படிக்கின்றார்கள்? என்ன பணி செய்கின்றார்கள்? பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவிட்டார்களா? போன்ற செய்திகள் தெரியவில்லை. தோழர்கள் இதுவரை செய்த கட்சிப் பணி வேலைத் திட்டம் விவரங்களும் கண்டிப்பாக ஒரு ஆவணமாகப் பதிவு செய்து வைக்க வேண்டும்.

ஆதலால் நம் கட்சி, கலை இலக்கிய மன்றம், அறக்கட்டளையின் முன்னாள், தற்போது உள்ள உறுப்பினர்கள் புகைப் படம், அன்னாரின் குடும்பப் உறுப்பினர்கள் குடும்ப புகைப் படம், உறுப்பினர் விவரம், கட்சியில் ஆற்றிய பணிகள், உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் போன்றவை அவரது கைப்பட எழுதி (Auto-Biography) வாங்கி ஒரு மலராகத் தொகுக்க வேண்டும்.

அந்த மலரை 2018 பொங்கல் மலராக, நம் கட்சி பொதுச் செயலாளர் தோழர் ஆனைமுத்து அவர்கள் பிறந்த முருக்கன் குடியிலோ அல்லது அறக்கட்டளையிலோ (சென்னை, அம்பத் தூர்) நம் கட்சி குடும்ப பொங்கல் விழாவாகச் செய்யலாம்.

மேலே எழுதியுள்ள அனைத்தும் எனது ஆசைகள். சரியாக இருந்தால் 5.3.2017 பொதுக் குழுவில் இதைப் பற்றியும் பேசுவோம்.

தோழமையுடன்,
**தீ. கோபாலகிருஷ்ணன்**
மா.பெ.பொ.க., காஞ்சிபுரம்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உயர்திரு. வே. ஆனைமுத்து ஐயா அவர்களுக்கு, வணக்கம். ஐயா, தாங்கள் அனுப்பிய "சிந்தனையாளன் பொங்கல் மலர்-2017" நூல், 11.2.2017 அன்று கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி.

"களப்பிரர் காலம் தமிழகத்தின் இருண்ட காலமா?" என்ற எனது கட்டுரையை வெளியிட்டமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொங்கல் மலர், சிறப்பாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. அதற்காகப் பாடுபட்ட தங்களுக்கும் பொங்கல் மலர் வெளியீட்டுக் குழுவி னர்க்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

தோழமையுடன்,
**கு. ஏகாம்பரம்,** சென்னை

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

மதிப்பிற்குரிய ஆனைமுத்து அய்யா அவர்கட்கு, வணக்கம்.

நான் வாங்கும் பகுத்தறிவு இதழ்கள் 10ம் வந்த அன்றே என் மருத்துவமனை வரவேற்பறையில் வைக்கப்படுவது வழக்கம். நேரம் கிடைத்தால் என்றாவது இதழை வீட்டிற்கு எடுத்துச் சென்று என் ஓய்வு நேரமான இரவு 12.00 முதல் 1.00 மணிவரை வாசிப்பதும் உண்டு. அவ்வகையில் சனவரி 2017 சிந்தனையாளன் இதழை இன்று வாசித்தேன்.

துக்ளக் ஆசிரியர் சோ என்ற இராமசாமி மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளீர்கள். அதைப்பற்றி ஒன்றுமில்லை. ஆனால் பார்ப்பன இனநலம் காப்பதையும் வடமொழிநலன் காப்பதையும் ஆர்.எஸ்.எஸ். இந்துத்வா கொள்கைகளை காப்பதையும் வாழ்வின் இலக்காகக் கொண்டவர்; அதாவது திராவிட இயக்கங்களையும், திராவிட இனத்தையும் அழிப்பதையும், கிண்டல் செய்வதையும் தொழிலாகக் கொண்டவருக்கு "வாழ்க துக்ளக் இராமசாமி புகழ்" என்று புகழ் மாலை சூட்டலாமா? எனது கடுங்கோபமெல்லாம் "வாழ்க துக்ளக் இராமசாமி புகழ்" என்ற தங்களின் வாக்கியத்தின் மீதுதான்.

சிந்தனையாளன் இதழின் என் எண்.597 & 632 வளர்ச்சி நிதியாக ரூ.2000/-க்கு காசோலை அனுப்பியுள்ளேன்.

இப்படிக்கு
இனநலனையும் பகுத்தறிவுச் சிந்தனைகளையும்
உயிர்மூச்சாகக் கொண்டுவாழும் சௌந்திரபாண்டியன்.
தோழர்கள் தமிழேந்தி, வாலாசாவல்லவன் நெருங்கிய நட்பு கொண்டவர்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அன்பிற்குரிய ஆனைமுத்து அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் விடுத்த தங்கள் இரு நூல்களும் (காவிரி-திருக்குறள்) உரிய காலத்தில் கிடைத்தன. என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரண்டு நூல்களையும் படித்துவிட்டேன். மிகப்பல ஆண்டுகட்கு முன்பிருந்தே காவிரி நீர் உரிமை பற்றி மிகத் தெளிவாக எழுதியுள்ளீர்கள். செய்யத்தக்கவை என்ன என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

திருக்குறள் பற்றிய உங்கள் பார்வையும் மிகத் தெளிவுடன் அமைந்துள்ளது. வள்ளுவரின் உள்ளுரையை நன்கு புரிந்துகொண்டு விளக்கியுள்ளீர்கள்.

நான் படித்த சிறந்த நூல்களுள் மேற்கண்ட உங்கள் இரண்டு நூல்களும் அடங்கும் என்பது உள் உள்ளத் துணர்வு.

அன்புடன்,
**ம.இல. தங்கப்பா,** புதுவை

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### சு. அகிலா - ச. முரளிதரன்



மா.பெ.பொ.க. தோழரும், வேலூர் மாவட்டப் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் செயலாளரு மாகிய மு. சுவாமிநாதன் - சு. மனோகரி இணையரின் மகள் சு. அகிலா, வேலூர் அ. சண்முகம் - லதா இணை யரின் மகன் ச. முரளிதரன் ஆகியோரின் திருமணம் 23.2.2017 அன்று காலை வேலூர், காந்தி நகர், ரங்காலயா திருமண மண்டபத்தில் தமிழ்முறைப்படி நடைபெற்றது. வேலூர் மாவட்ட மா.பெ.பொ.க. தோழர் கள், துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி, சென்னை கலச. இராமலிங்கம் ஆகியோர் திருமண விழாவில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### நிலவு பூ. கணேசன் இல்ல மணவிழா
### கி. அருண்குமார் - செ. விண்ஒளி

கடலூர் மாவட்டம், கடலூர் புதுநகர் மறைந்த பூ. கணேசன்-பழனியம்மாள் மகன்வழிப் பெயர்த்தியும், கடலூர் மாவட்டம், திருவந்திபுரம் வ. ரங்கநாதன்-ரூப்லாதேவி ஆகியோரின் மகள்வழிப் பெயர்த்தியும், க. செல்வமணி-செ. வசந்தா இணையரின் மகள் செ. **விண்ஒளி** அவர்களுக்கும் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், அம்மாகுளம் மறைந்த சு.சி. சுப்பிர மணியம்-சு. சிவகாமி ஆகியோரின் மகள்வழிப் பெயர னும், மறைந்த மூவேந்தர் முத்து-லோகம்பாள் இணை யரின் மகள்வழிப் பெயரனும், சு. கிருஷ்ணமூர்த்தி-கி. பிரபாவதி இணையரின் மகன் கி. **அருண்குமார்** அவர்களுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா சென்னை வானகரம் ரெட்டிங்-கன்வென்சன் கூடத்தில் 16.2.2017 வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற் றது. வே. ஆனைமுத்து, தசரதன், இ.ஆ.ப., ஓய்வு காசி விஸ்வநாதன், இ.ஆ.ப ஓய்வு, மீண்டும் கவிக் கொண்டல் ஆசிரியர் மா. செங்குட்டுவன், முனைவர் வா.மு.சே. திருவள்ளவர் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### இரா.கலைச்செல்வன்-இரா.கவிதா

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், பாளையக் குடி பெருமாள்-செல்லம்மாள் மகன் வழி பெயரனும், சுப்புராயன்-மாணிக்கம் அவர்களின் பெயரனும் சு.இராமலிங்கம்-செல்வாம்பாள் இணையரின் மகள் இரா.கலைச்செல்வனுக்கும் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், ஜெமீன் பேரையூர் பெரியாசாமி-கோவிந்தம்மாள் பெயர்த்திரியும் பெ.ராசு-கனகவள்ளி மகள் ரா.கவிதாவுக்கும் வாலாஜா நகரம் ஐ.எம்.ஏ. திருமண மாளிகையில் 2.2.2017 வியாழன் காலை 7 மணிக்கு நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### வெ. முத்துச்செல்வி - ந. சங்கர்

திருச்சி, உறையூர், மறைந்த கோ. முத்துகிருஷ் ணன்-பத்மாவதி இணையரின் பெயர்த்தியும், வெங்க டேசன்-கௌசல்யா இணையரின் மகள் வெ. **முத்து செல்விக்கும்,** புதுச்சேரி முத்தியால்பேட்டை, வைத்திய லிங்கம்-சரோஜினி இணையரின் பெயரனும் வி. நடராசன்-மீனா இணையரின் மகன் **ந. சங்கருக் கும்** புதுச்சேரி முத்தியால்பேட்டை அம்பாள் திருமண நிலையத்தில் 25.12.2016 ஞாயிறு காலை 10 மணிக்கு மணவிழா நடைபெற்றது. சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வெங்கடேசன் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### பறிபோகும் தமிழர்களின் வாழ்வாதாரம் நூல் வெளியிட்டு விழா மற்றும் ப.தமிழ்முத்து-மு.முத்துலட்சுமி திருமண வரவேற்பு

10-2-2017 வெள்ளி மாலை 6 மணிக்கு பெ.பராங் குசம் எழுதிய ‘பறிபோகும் தமிழர்களின் வாழ்வா தாரம்’ நூல் வெளியிட்டு விழா புதுவைச் சித்தன்குடி செயராம் திருமண மண்டபத்தில் புலவர் கி.த.பச்சை யப்பன் தலைமையில் நடைபெற்றது. சிவ.இளங்கோ வரவேற்புரையாற்றினார்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், புலவர் கி.த.பச்சையப்பன், புலவர் செ.இராமலிாங்கம், க.வேல்முருகன், இலக்கியன் ஆகியோருக்குச் சிறப்புச் செய்யப்பட்டது.

பெ.பராங்குசம் நன்றியுரையும் ஏற்புரையும் கூறினார். மாலை 7 மணிக்கு பிறகு இதே அரங்கில் பெ.பராங்குசம்-பூங்கொடி பராங்குசம் இணையரின் மகன் ப.தமிழ்முத்துவுக்கும் புதுச்சேரி முத்துக்குமார சாமி-இந்திரா (எ) மீனாட்சிசுந்தரி இணையரின் மகள் மு.முத்துலட்சுமிக்கும் திருமண வரவேற்பு சிறப்புடன் நடைபெற்றது.

## பேரறிவாளன் தந்தை குயில்தாசன் அவர்களின் வேண்டுகோள்

அன்புடையீர். வணக்கம்.

11-3-17 சனி பிற்பகல் 2-30 மணிக்கு கிருஷ்ணகிரி ஈடன் காடன் பள்ளியில் ஐயா திரு.ஆனைமுத்து (தலைவர்: மார்க்சியப் பெரியாரியப் பொது உடைமைக் கட்சி மற்றும் சிந்தனையாளன் இதழின் ஆசிரியர்) அவர்கள் சாதிவாரி விகிதாச்சார இட ஒதுக்கீட்டு உரிமை என்னும் தலைப்பில் கருத்துரை ஆற்ற உள்ளார்.

புலவர் திரு. மாணிக்கம் அறிமுக உரை நிகழ்த்த திரு. ஆர்.பால்ராஜ் (தலைவர் : ஓய்வுபெற்ற வட்டாட்சியர் சங்கம்)

திரு.வி.நாராயண மூர்த்தி (தலைவர்:விடுதலை வாசகர் வட்டம் - மாவட்ட செயலாளர் : தி.மு.க.இலக்கிய அணி ) ஆகிய பேராளர்கள் முன்னிலையில் நிகழும். தன் 93 வயதிலும் தளராது இட ஒதுக்கீடு குறித்து இந்தியா எங்கும் சென்று பரப்புரை செய்து விழிப்புணர்வு செய்து வருகிறார்.

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட மலைவாழ் மற்றும் சிறுபான்மை மக்கள் குறிப்பாக இளைஞர்கள் அறிந்து கொள்ளவேண்டியது கடமை யாகும். குழப்பமுள்ளவர்களை வலிய அழைத்து வர வேண்டுகிறோம். நமக்கு கவலை அடுத்த தலைமுறை பற்றியது என்ற நல்லெண்ணம் கொண்டோர் உதவிட வேண்டுகிறோம். நன்றி.

- குயில்தாசன்

## கி.த.பச்சையப்பன் அவர்களுக்கு தொல்காப்பியர் விருது



திருத்தணிகை தமிழ் மாமுனிவர் மங்கலம் கிழார் கல்வி அறக்கட்டளைச் சார்பில் நிகழ்த்தப்பட்ட பாவலர் வெண்முகிலன் அவர்களின் முத்துவிழா வில், புலவர் கி.த. பச்சையப்பன் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, 5.2.2017, ஞாயிறு காலை 10 மணிக்கு, கு.மு. கணேசனார் காப்பக அரங்கில், புலவர் கி.த.பச்சையப்பன் அவர்களுக்குத் தொல் காப்பியர் விருது வழங்கப்பட்டது.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மார்ச்-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | சூளூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **ச. சிந்துஜா** | காஞ்சிபுரம் | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 900/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - மார்ச்-2017

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் | .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119